விக்ருதி ஐப்பசி 1—11—'50. அணா நான்கு

ஜகன் மோகினி

14

இவ்விதழில்

- ஒரு முழு நவீனம் — "ப்ரபஞ்சலீலா" வை. மு. கோ. 96-வது நாவல்
- வழக்கம்போல் இதர முக்கிய அம்சங்களும்

27-வது ஆண்டு

இவ்விதழில் ஒரு முழு நாவல்!

வை. மு. கோ. 96-வது நாவல்

14/2-51

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்

VIJAYA PRODUCTIONS
விஜயாவின்...
பாதாள பைரவி
டைரக்ஷன்
K.V. ரெட்டி, B.SC (HONS)
Produced by- NAGI REDDI - CHAKRAPANI...

தீபாவளி வெளியீடு!
பிரசித்திபெற்ற கதை....
புகழ்பெற்ற நடிகர்கள்....
இணையற்ற சித்திரம்...
பக்ஷிராஜாவின்
ஏழை படும் பாடு
டைரக்ஷன் ராம்நாத்
நாகய்யா
லலிதா
பத்மினி
சாமா
பாலையா
துரைராஜ்
காளி N. ரத்னம்
சாமிநாதன்
Based on
VICTOR HUGO'S
"LES MISERABLES"
NARAYANAN Co
Release

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
- திருவள்ளுவர்.

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி ! மனத்தைச் சார்ந்து.
- வீராகவ் கவி

Vol. 27 — விக்ருதி ௵ — November.
No. 11. — ஐப்பசி ௴ — 1950.

ஸ்ரீநகரில் நேருஜி

காஷ்மீரத்திலுள்ள இந்திய ராணுவத்தினருக்குச் செய்த ப்ரசங்கமொன்றில் நேருஜி (29-10-50௳) தற்கால உலக நிலையை அலசினர். "நாட்டுக்குத் திறமைவாய்ந்த முதல்தரமான பாதுகாப்பு என்பது உங்கள் பொறுப்பு; ஆக்ரமிப்பு நமது நோக்கமேயில்லை. கடந்த 30 வருடங்களில் நாம் கஷ்டப்பட்டு சாதித்ததை ஜாக்ரதையாகக் காப்பதே நமது தற்போதைய கடமை."

"காஷ்மீர ப்ரச்னையை அதன் உண்மையான நிலைமைப்படி தராதரமறிந்து கவனிப்பாரில்லை. உலக சதுரங்கத்தில் வல்லரசுகள் இதை ஒரு பொம்மை விளையாட்டுப்போல் கருதி,பாகிஸ்தான் பக்கம் பாடுகின்றனர், ஆடுகின்றனர், கட்சி தேடுகின்றனர்! இதற்குக் காரணமில்லாமலில்லை: நாம் சுயேச்சையாக நடக்கிறோம்; பாகிஸ்தான், வல்லரசுகளை அனுசரித்து நடக்கின்றது.

திபேத்து மீது சீன பாய்ந்திருப்பதையும், பொதுவாகக் கொரியாவிலும், இந்தோசீனவிலும் அதாவது கிழக்காசியாவில் காணப்படும் கலவரமான நிலைமையையும் கவனிக்கும்போது, ஆசிய அரசியலில்,—ஏன், உலக அரசியலிலேயே—இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள புதிய பொறுப்புவாய்ந்த அந்தஸ்தை நாம் உணரவேண்டியதாகிறது. வெளிநாட்டுச் சிக்கல்களில் கூடியவரைசிக்கிக் கொள்ளாமல் நியாயத்தைஎடுத்துரைப்பதே நம் கொள்கையாகும்.

உலக வல்லரசுகளிடையே இங்கிலாந்து இரண்டாம் பக்ஷமாக மாறிவிட்டதிலிருந்தும், சென்ற யுத்தத்தாலேற்பட்ட நிலைமையிலிருந்தும் பல படிப்பினைகளை நாம் உணரவேண்டியிருக்கிறது. மூன்றாவது கோர உலகயுத்தம் வரும்பக்ஷத்தில் கோடிக்கணக்கில் மக்கள் அழிவர்; நாடு நாடாக மடியும்; அணுக்குண்டுகளாலும் யுத்தத்தை நிறுத்தமுடியாது: ராணுவபலத்தால் வெற்றிஎன்பது சாச்வதமற்ற ஒரு நிலைமைதான்.

வல்லரசுகள் ஆட்டுகிறபடி நாம் ஆடாததனல் என்னைச் சில மாதங்களுக்குமுன் புகழ்ந்த வெளிநாட்டுப் பத்திரிகைகள் இன்று இகழ்கின்றன! இதனல் நான் அசைய மாட்டேன். உலக சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியா சற்றும் பயம், தாக்ஷண்யமுமின்றி சரியானபடி நடந்துகொள்ளும் என்பதே என்னது நம்பிக்கை. இந்தத் தலைமுறை மிகவும் ச்ரமத்தை அனுபவிக்கவேண்டிய பொறுப்பைப் பெற்றிருக்கிறது. எல்லா நாடுகளிலிருந்தும் உரிய படிப்பினைகளை உணர்வோம்; அங்கங்கே காணப்படும் இழுக்குகளைத் தவிர்ப்போம்" — வை. மு. ஸ்ரீ.

18366

கல்யாணியில் சிரஞ்ஜீவி

வை. மு. ஸ்ரீ.

★

[ஸ்ரீ வை. மு. நரசிம்மன், B.A., B.E., A.M.I.E., M.R.S.I, (Lon.) "கோவில்— எஞ்ஜினியர்" சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது சிற்பத்துறையில் அவர் கண்ட "விபீஷண—வழிபாடு" விஷயமாக சிற்ப ஓவியத்துடன் "மோகினி"க்கென்றே எழுதிய (ஆங்கில) வியாஸத்தின் ஸாரம்.]

"கல்யாணியில் சிரஞ்ஜீவி" என்ற தலைப்பைப் பார்த்ததும் 'விஷயம் நூதனமானது' என்ற எண்ணம் தோன்றும். ஆனால், உண்மையில் விஷயம் மிகப் புராதனமானது; குறிப்புகள்தான் சமீபத்தில் கிடைத்தவை. தசமுகனின் தம்பி தர்மாத்மா விபீஷணனைப்பற்றி அறியாத மோகினி வாசகர் உண்டா? பகவான்



ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தி விபீஷணுழ்வானுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்த வைபவத்தைப்பற்றிப் புதிதாகக் கூறவேண்டுவதும் உளதோ?

காவல்மாநகரில் (இலங்கையில்) கல்யாணி (கேலநியா) என்ற க்ஷேத்திரம் ஒரு காலத்தில் ப்ரசித்தமாயும் பெரியதோர் நாகரிகத்தின் வளர் நிலமாயும் இருந்ததாக ஆராய்ச்சியின் பலனுல் அறியப்படுகிறது. கல்யாணி, கொழும்புவுக்குச் சமீபத்திலுள்ள புத்த க்ஷேத்திரமாகத் தற்போது விளங்குகிறது. அங்கு இலங்கையின் சிரஞ்ஜீவி விபீஷணனுக்குப் ப்ரத்யேகமான கோவில் காணப்படுகிறது. கல்யாணியிலுள்ள மூன்று விபீஷணச் சிற்பங்களும் நம் கவனத்தைக் கவர்வனவாயிருக்கின்றன. இவை பற்றியே இவ்வியாசம்.

முக்கியமாக முதன்முதலில்குறிப்பிடவேண்டுவதுயாதெனில், விபீஷணனை "விபீஷணுழ்வான்" என்று ஹிந்து ஆஸ்திகர்கள் கருதுவது ஒரு புறமிருக்க, பௌத்த மதத்தினரும் தெய்வமாகக் கருதி வழிபடுகிறுர்கள் என்பதும், ஷை கேலநியா விஹாரம் விபீஷணனுக்காக புத்தர்கள் கட்டிய கோவிலே என்பதும்தான். ஷை விஹாரத்தின் மத்ய கோஷ்டத்திலுள்ள விபீஷண பட்டாபிஷேகச் சிற்பத்தின் போடோ இங்கு வெளியிடப்பட்டுள்ளது. இது கர்ப்ப க்ரஹத்தின் மேற்கே வெளிப்புறம் உள்ளது.

இலங்கைக்கு அதிபதியாக ஸ்ரீராமனுல் முடிசூட்டப்படும் விபீஷண தம்பதிகளின் ஆனந்தத்தையும் ஆத்ம த்ருப்தியையும் இச்சிற்பம் எவ்வளவு அழகாகக் காட்டுகிறது. பகவானுக்கும் எத்தகைய எல்லையற்ற உள்ளக்களிப்பு! இச்சிற்பம் முழுவதிலும் ஓர் தனித்த அமைதியும் இன்பமும் காணப்படுகின்றன. ராஜ்யாதிபதி என்பதைக் காட்ட இரட்டைச் சிங்கம் செதுக்கிய ஆஸனம்; ஆஸுரப்ரக்ருதி என்பதைக் காட்ட கோரைப்பற்கள்; பரமபக்தனை தர்மாத்மா வென்பதைக் காட்ட சாந்த மூர்த்தியான பிம்பம். ராவணகோஷ்டியைச் சேர்ந்த ராக்ஷஸர்களும் "அஞ்சவேண்டாம்!" என்ற அபயஹஸ்தம். படத்திலேயே இவ்வளவு நன்ருயிருக்கும் சிற்பம் நேரில் எவ்வளவு அற்புதமாயிருக்குமென்று ரஸிகர்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ?

ஷை விபீஷணர் கோவிலிலுள்ள மற்ற இரு சிற்பங்களைக் குறித்துச் சில விவரங்களைக் கவனிப்போம். நின்றவாறுள்ள மூல விக்ரகமும் அமைதி நிறைந்த முகத்துடனும், ஆனுல், கோரைப்பற்களுடனும் காணப்படுகிறது. கரந்த—மகுடம் தரித்து இரு கரங்களுடன்—இடது கை அபயஹஸ்த தோரணையிலும், வலது கை கீழ்நோக்கியும்—கம்பீரமாக நிற்கிருன் விபீஷணன். அமர்ந்தவாறுள்ள சிறிய விக்ரகத்திலும் சாந்தமுகமும் கோரைப்பற்களும் காணப்படுகின்றன; ஆனுல் ப்ரத்யேக அம்சமாக இடதுகையில் கத்தியும் வலதுகையில் அபயப்ரதானமும் உள்ளன.

இலங்கையில் ஜனங்களிடையே பரவியுள்ள படங்களில் விபீஷணத்தேவன் சதுர்ப்புஜத்துடன் சங்கசக்ர தாரியாகக் காட்சியளிக்கிருன். பின்புறம் குதிரையும், இடதுகையில் கத்தியும், வலதுகை தொங்கவிடப்பட்டும், மேலிருகைகளில் சங்கசக்ரமும்—ஒரு நூதன திருக்கோலம்!

ஒருங்கே ஹிந்துக்களிடையேயும் பௌத்தர்களிடையேயும் அன்புக்குப் பாத்திரமாயுள்ள அஸுர-தர்மாத்மா விபீஷணர், ராமாயண காவியத்தில் தனிப் பெருமை பெற்றுள்ளதுபோல புத்த இலக்கியங்களிலும் ஒரு விசேஷஸ்தானம் பெற்றிருக்கிறார். "நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் நன்கறிந்த தர்மாத்மாவான விபீஷணன் தன் தமையனின் தவறைக் கண்டித்து ஸ்ரீராம கைங்கர்யத்திலீடுபட வேண்டியதை உணர்த்தினன்" என்று ஸெலலிஹினி ஸந்தேஸ்ய (Selalihini—Sandesaya) என்ற புனித புத்த நூலில் காணப்படுகிறது. தவிர, புத்த பகவான் இலங்கைக்கு விஜயம் செய்தபோது பரஸ்பரம் சச்சரவு செய்துகொண்டிருந்த நாக அரசர்களைச் சமாதானப்படுத்தி, உயர்ந்த வேலைப்பாடுள்ள நாக சிம்மாஸனத்தையும், புனித போதி விருக்ஷத்தையும் விபீஷணனுக்கு அளித்து வாழ்த்தினர் என்றும் கூறப்படுகிறது. விபீஷணனுக்கு ராமர் ஒரு முறை பட்டாபிஷேகம் செய்தார்; புத்தர் ஒருமுறை செய்தார்! ஆக, அவர் சிரஞ்ஜீவி என்பது ஏற்படுகிறதல்லவா?

அனேக புத்த விஹாரங்களில் விபீஷணர் அஞ்சலி ஹஸ்தராக போதிஸத்வர்களிடையே காட்சியளிக்கிறார். அமர—ஸந்தியா, (Amara - Santiya), ராஜாதிராஜ—ஸைங்ஹ—ஸந்தியா, (Rajadhirrya - Sainha - Santiya) முதலிய பௌத்த நூல்களில் விபீஷணனை 'டோடகாமுவா' (Totagamuva) தெய்வம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஸ்ரீ ராமாயணத்தில் லங்கையைப் பற்றியும் கல்யாணியைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதைப்போல், புத்தரின் ஜனன கதையான வலஹஸ—ஜாதகாவிலும் (Valahassa Ja taka) குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண அவற்றின் புராதன மேன்மை ஒருவாறு தெரியவருகிறது. புத்த பகவானின் இலங்கை யாத்திரைகளைக் குறிப்பிட்டுள்ள மஹாவம்சம், தீபவம்சம் இரண்டிலும் கல்யாணியைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவேளை கல்யாணி இலங்கையின் தலைநகராக இருந்திருக்கலாம். அதனால்தான் கல்யாணியில் சிரஞ்சீவி மன்னனுக்குப் பிரத்யேகச் சிறப்புச் சிறப்பு அளிக்கப்பட்டதுபோலும்.

நம் நாட்டில் விபீஷண பக்தி ராமபக்தியை முன்னிட்டே விளங்குகிறது. இன்றும் ஸ்ரீரங்கத்தில் தினமும் உச்சிகாலத்தில் சிரஞ்சீவியான பக்தசிகாமணியான விபீஷண—ஆழ்வான் ஸ்ரீ ராமன் ஆராதித்துவந்த ஸ்ரீரங்கநாதருக்குத் திருவாராதனம் செய்வதாக ஒரு சம்பரதாயம் இருந்து வருகிறது. இதை முன்னிட்டு உச்சிகாலத்தில் கர்ப்பக்ரகத்தில் பூஜாத்ரவ்யங்களை வைத்துவிட்டு ஸந்நிதியைச் சிறிது நேரம் மானிடர்க்கு மூடிவைப்பது வழக்கம். அவ்வமயம் அந்த அஸுர - தர்மாத்மா வந்து நித்ய கைங்கர்யம் செய்துபோவாராம்.

விபீஷண வழிபாடு ஆராய்ச்சிக்கு ரஸமான விஷயம். தவிர' அது, பாரத வர்ஷத்திற்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள ஒரு முக்ய தொடர்பைக் குறிக்கும் அம்சமுமாகும்.

தாம்பூலம் தரித்தல்

நம் பாரதநாட்டின் பெருமையையும் பெரியார்களின் புகழையும் நாம் ஒரு க்ஷணநேரம் சிந்தித்துப்பார்த்து அதற்கு மதிப்புவைத்தோமேயானுல், பல விஷயங்களில் நாம் சீரும் சிறப்பும் நன்மையும் க்ஷேமமும் அடைந்து வாழலாம். நம்போன்றவர்களுக்காகவே நம் முன்னோர் புதையல்போன்ற உயர்ந்த லக்ஷ்யங்களுடன் கூடிய விஷயங்களை பாக்களாயும், பழமொழிகளாயும், வசன காவியங்களாயும், சித்திரங்களாயும் வைத்திருக்கிறுர்கள்.

அவைகளை நாம் அடியோடு மறந்தும்...மதியாமல் உதாசீனப்படுத்தியும், அத்துடன் நில்லாமல் அதே விஷயங்களை அன்னிய நாட்டார் ஆராய்ச்சியுடன் எடுத்துக்கூறி அதன் உபயோகத்தையும் முறைகளையும் தெரிவித்தால் அதை ப்ரமாதமாய் வரவேற்றுத் தம்பட்டம் அடித்து உபயோகிக்கிறேம். இத்தகைய குறுகிய மனேபாவமும் புதுமோகத்தின் வெள்ளமும் உதவாக்கரை நவநாகரீக வாழ்வின் பயனுகவந்து சூழ்ந்துகொண்ட தொத்து வ்யாதியேயாகும் என்றுதான் கூறவேண்டும்.

இத்தகைய முக்யமான விஷயங்களையே "வாழ்க்கைதீபம்" என்கிற துடரில் மோகினி ப்ரதிமாதமும் விருந்தளிக்க முன்வந்திருக்கிறுள். இம்மாதம் சகலகாரியங்களுக்கும் முக்யமான மங்களகரமான தாம்பூலம் தரிப்பதைப்பற்றி ஒரு சிறந்த கவிவாணர் கூறிய பாடலை விவரிப்போம்.

அருணுசலக் கவிராயர் பாடியது

வெற்றிலைக்கு முன்னே வெறும்பிளவை வாயிலிட
நற்றிருவா மங்கை நடப்பளோ —வெற்றிலையை
முன்னிட்டுப் பின்பிளவை மேல்துவரே யாமாயின்
மன்னரைப்போ லாவார் மகிழ்ந்து— (பிளவை—பாக்கு)

சாதாரணமாய் நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறேம்: யாரைப் பார்த்தாலும் முதல்முதல் வெறும் பாக்கைத்தான் வாயில் போட்டுக்கொள்கிறுர்கள். சாப்பிட்டு எழுந்த உடனே வெகு பரபரப்புடன் பாக்கை முதலில் போட்டுக்கொண்டுதான் பிறகு வேலை செய்கிறுர்கள். அந்த செய்கை மூதேவியை முதலில் தாம்பூலம்வைத்து அழைப்பதுபோன்ற கேவலமானது என்பதை யாராவது பெரியவர்கள் கூறினுல்கூடக் கேட்பதில்லை. அதைச் சிலர் கேலியும் செய்கிறுர்கள்.

தாம்பூலம் தரிப்பதில் எத்தனை விதத்தில் ஆரோக்யமும் அவுடதத்திற்கு ஒப்பான ப்ரதானமும் மங்களகரமும் இருக்கிறதோ அவைகளை உத்தேசித்துத்தான் அதற்கு வேறுவிதமான எத்தகைய பெயரும் வைக்காமல் வெற்றிஇலை என்கிற சப்தத்தைக் கேட்ட உடனேயே அர்த்தமும் அதன் பெருமையும் த்வனிக்கும் முறையில் நாமமிட்டிருக்கிறுர்கள்.

எந்த ஒரு காரியத்தில் ஜெயமடைந்தாலும் சரி, குழந்தை பிறப்பதுமுதல் சகலமானசுபகாரியங்கள்வரையிலும்வெற்றிஇலையை முன்வைத்தே காரியத்தில் வெற்றியடைகிறுர்கள். ஏன்! அசுபம் நேர்ந்துவிட்ட வீடுகளிலும் கடைசீதினம் சுபத்தைக் கொண்டாடி வெற்றிஇலையைச் எல்லோருக்கும் வழங்கிப் போட்டுக்கொள்ள

செய்து சுபத்தை உடனே ஸ்வீகரிக்கும் வழக்கத்தை உலகம் பூராவும் பார்க்கிறோம்.

வெற்றிஇலையின் மகத்துவத்தை விவரித்துச் சொல்வதென்றால் ஒரு தனிக்கட்டுரையே எழுதிவிடலாம். அத்தகைய சிறப்பும் பெருமையும் மங்களமும் நிறைந்துள்ள பொருளை நாம் உபயோகிக்கும் முறையில் லக்ஷ்மீ கடாக்ஷமும் நிரம்பிஇருந்தால் எத்தனையோ உயர்வும் க்ஷேமமும் உண்டு. தாம்பூலம் தரிக்கும்போது முதலில் வெற்றிஇலையை ஒருதுண்டு கிள்ளி வாயில் போட்டுக்கொண்டபிறகுதான் பாக்கைப் போட்டுக்கொள்ளவேண்டும். இந்தச் சிறிய விஷயத்தை முக்யமாய்ப் பெண்மணிகள் அவசியம் கவனிக்கவேண்டும்.

முதல்முதல் வெறும் பாக்கை வாயிலிட்டால் ஸ்ரீ தேவி நம்மைவிட்டு விலகுவாளாம். வெற்றிலையை முன்னிட்டு பாக்கைப் பின்னிட்டால் சிறந்த ஐச்வர்யத்துடன் மன்னர்களைப்போல் வாழ்வார்கள் என்று மேற்குறித்துள்ள பாட்டு உணர்த்துகிறது. அப்பாடலைப் பாடிய கவி சாமான்ய கவியல்ல. ஸ்ரீராமாயணத்தை அப்படியே பாட்டு ரூபமாய் நாடகமுறையில் எழுதிய ராமநாடக ஆசிரியர் அருணாசலகவி என்கிற சிறந்த ஞானியும் மேதையும் ஆவார். ஆகையால் பெரியவர்களின் முக்யமான உயர்ந்த போதனைகளை நாம் கைப்பற்றி அதன்படி நடப்போமாக. (அடுத்தஇதழில்?)

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேசி (2 பாகம்)
ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ 3-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்
ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
மனத்தாமரை
அமரத்யாகி
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காளக்கண்ணாடி
ஜயபேரிகை
ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்
ரூ. 1-2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்

மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
ப்ரார்த்தனை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
அணா. 12.
பஞமாலிகா
சுடர்விளக்கு
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
அணா. 8
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
அணா. 6.
உளுத்த இதயம்

வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்

1. உதய சூரியன் 1-4.
2. மதமா, மனமா? 1-4.
3. அவசரமூர்த்தியின் அபூர்வடயரி 1-8
4. ராணி சிலாவதி 1-0

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
க்ராந்தி கீர்த்தனம்
கிளேஸ் பதிப்பு. ரூ.3-8.

ப்ர.ப.அண்ணங்கராசாரியர்
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்
உரையுடன் ரூ. 1.

அபூர்வ ராமாயணம்

4 க: க்ருதஜ்ஞ:?

ஸ்ரீ ப்ர. ப. அண்ணங்கராசாரியர்

சென்ற இதழ் தொடர்ச்சி,

மனிதர்களின் க்ருதஜ்ஞதாகுணம் ஒருவிதமானது. பகவானுடைய க்ருதஜ்ஞதாகுணம் மிகச் சீரியது; இதனை நம் ஆசாரியர்கள் நிரூபிக்கும் விதம் மிகவும் ஆச்சரியமானது. அஃது இங்கு விவரிக்கப்படுகின்றது.

க்ருதஜ்ஞ: என்னுஞ் சொல்லானது (க்ருதம் ஜாநாதி இதி க்ருதஜ்ஞ:) என்கிற வியுத்பத்தியின்படி, செய்கிற காரியங்களை யுணருபவன் என்று பொருள்படும். ஜீவர்களாகிய நாம் செய்கிற காரியங்களை யுணருபவர் பகவான் என்றதாயிற்று. அனந்தகோடி ஜீவராசிகள் ஒவ்வொரு க்ஷணத்திலும் செய்யும் காரியங்களை எம்பெருமான் தன்னுடைய சிறந்த சக்தி விசேஷத்தினால் உடனிருந்து அறிகிறானென்பது ஆச்சரியப்படத்தக்க விஷயமன்றே; அதையா இங்குச் சொல்லுகிறது? என்னில்; கேண்மின்.

ஸர்வேச்வரன் நம்போன்ற சேதனர்களைத் தன்னருளுக்கு இலக்காக்கிக்கொள்வதற்கு உறுப்பாக நாம் செய்யவேண்டிய காரியங்களை சாஸ்திரங்களில் சொல்லிவைத்திருப்பதை யாவரும் அறிவர். அவற்றுக்கு ஸுக்ருதமென்று பொதுவான பெயர் வழங்கும். 'நன்ருகச்செய்யப்பட்டது' என்பதுஇதன்பொருள். நாம் செய்யுங் காரியங்களில் நன்ருகச் செய்யப்படுவதும் தீதாகச் செய்யப்படுவதுமாக இரண்டு வகைகள் உள்ளனவன்றோ. அவை வடமொழியில் ஸுக்ருத--துஷ்க்ருத பதங்களாலும், தென்மொழியில் நல்வினை தீவினை யென்னுஞ் சொற்களாலும் வழங்கப்பெறும். ஸுக்ருதத்தைப் பற்றியே இங்குப் பேசுவோம். இது பொதுவாக இருவகைப்படும் — ஜ்ஞாதஸுக்ருத மென்றும் அஜ்ஞாதஸுக்ருதமென்றும். மனப்பூர்வமாகத் தெரிந்து செய்யும் நன்மைகள் ஜ்ஞாதஸுக்ருத மெனப்படும். நமக்கும் தெரியாமல் விளையும் நன்மைகள் அஜ்ஞாதஸுக்ருத மெனப்படும். இவற்றுள் முதல் வகுப்பான ஜ்ஞாதஸுக்ருதங்கள் பலபலவாயிருக்கும்; தவம்புரிவது தானஞ்செய்வது யஜ்ஞயாகங்களைச் செய்வது கங்கை யமுனை காவேரி முதலிய புண்ணிய தீர்த்தங்களிற் சென்று குடைந்தாடுவது, கோயில் திருமலை பெருமாள்கோயில் திருநாராயணபுரம் முதலான திவ்யதேசங்களிற் சென்று பகவத்ஸேவை செய்வது, 'பேராயிரமு மோதுமின்கள்' என்கிற கட்டளைக்கு உட்பட்டு ஸஹஸ்ரநாமம் முதலான துதிகளை வாயாரச் சொல்லுவது, திருவிளக்கெரிக்கை திருமாலை யெடுக்கைஎன்று சொல்லப்படுகிற பலவகைக்கைங்கரியங்களைச்செய்வது....ஆகிய இப்படிப்பட்டகாரியங்களை 'இதுசெய்யக்கடவோம்' என்று ஸங்கல்பித்துக்கொண்டு மனஸ்கரித்துச் செய்வதானது ஜ்ஞாதஸுக்ருத மெனப்படும்.

கீழே சொன்னபடி இன்ன நல்வினையைச் செய்யவேணுமென்று நாம் ஸங்கல்பித்துக்கொண்டு செய்யாவிடினும் கோல்

விழுக்காட்டாலே நல்வினையாகப் பரிணமிக்கும் செய்கைகள் அஜ்ஞாதஸுக்ருதமெனப்படும். நல்லது செய்யவேணுமென்று நாம் நினைத்துச் செய்யாதவற்றை ஸுக்ருதமென்னுஞ் சொல்லால் வழங்கலாமோ? சாஸ்திரங்களினால் விதிக்கப்பட்டதாய் கர்த்தாவான சேதநனாலே புத்திபூர்வமனுஷ்டிக்கப்பட்டதான செய்கையையன்றோ ஸுக்ருதமென்று வழங்கலாம். இன்ன ஸுக்ருதம் பண்ணினோமென்று கர்த்தாவான சேதனன் அறியாதவற்றை ஸுக்ருதமென்று எப்படிச் சொல்லக்கூடும்?—என்று ஆக்ஷேபிக்க இடமுண்டு. இதற்கு நம் பூருவாசாரியர்கள் அருளிச் செய்யும் ஸமாதானத்தையே இங்குத் தெரிவிக்கிறோம்;

ஸ்ரீவசனபூஷணத்தில் பகவந்நிர்ஹேதுகக்ருபாவைபவ ப்ரகரணத்தில்—(396.)

“சாஸ்த்ரமும் விதியாதே நாமுமறியாதே யிருக்கிறவித்தை ஸுக்ருதமென்று நாம் பேரிடுகிறபடி யென்னென்னில், நாமன்று, ஈச்வரனென்று கேட்டிருக்கையாயிருக்கும்”

என்றுள்ளது. நம்மையறியாமல் நேர்ந்த நல்வினைக்கு ஸுக்ருதமென்று பேரிடுகிறது நாமன்று; ஸர்வமுக்திப்ரஸங்கம் வாராமைக்காக ஸர்வஜ்ஞனான ஸர்வேச்வரன்தான் ஸுக்ருத மென்று பேரிட்டுவைத்தான் என்று ஆசாரியர்கள் அருளிச்செய்வர்களாம். இதனால் என்ன தேறுகிறதென்னில்; நமக்கு அஜ்ஞாதமாயிருந்தாலும் எம்பெருமானுக்கு ஜ்ஞாதமாயிருக்கையாலே ஸுக்ருதமென்னக் குறையில்லை என்றதாயிற்று.

இதற்குமேல் ஒருகேள்வி பிறக்கும்; எம்பெருமானோ யதார்த்தஜ்ஞானநிதி; அவனுக்கு அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞானங்கள் அடியோடு கிடையாதென்று சாஸ்த்ரங்களாலறிகிறோம். நாம் மநஸ்கரித்துச் செய்யாததொன்றை அவன் ஸுக்ருதமென்று கொண்டானாகில் அது யதார்த்தஜ்ஞானமாகுமோ? ஒருவன் ஸந்நிபாதஜ்வரம் முதலான கொடிய நோய்களினால் துன்பப்படுங்காலங்களில் தன்னையறியாமல் ஏதேதோ உளறுகிறான்; அபுத்திபூர்வமாக வெளிவரும் அந்த வுளறல்களில் யாராவது அர்த்தம் காண்கிறார்களோ, இல்லையன்றோ. அப்படியே நம்மையறியாமல் நாம் செய்யும் செயல்களை எம்பெருமான் ஸுக்ருதமென்று எப்படிக் கொள்ளக்கூடும்?—என்கிற கேள்வி பிறக்கும். கேண்மின்; எம்பெருமான் சேதநர்களிடத்தில் இயற்கையான இன்னருள் பொருந்தியவன். இவனை எவ்வகையினாலாவது தான் அங்கீகரிப்பதற்கு அப்பெருமான் வழிதேடுபவன். இச்சேதநன் புத்திபூர்வமாகச் செய்யும் நல்வினைகளை முன்னிட்டே இவனை அங்கீகரிப்பதாக எம்பெருமான் வைத்துக்கொண்டால், ஒருவனைக்கூட அங்கிகரிக்க அவகாசம் நேராது. ஏனெனில்; நாம் புத்திபூர்வமாகச் செய்வது தீவினைகளையேயாதலாலும் நல்வினையை நாம் நெஞ்சாலும் நினைப்பவர்களல்லோமாதலாலும் நம்மை அங்கீகரிக்க எம்பெருமானுக்கு அவகாசமேது? நாமும் இழந்து அவனும் இழந்துபோகவேண்டியதாகிறது. நம்முடைய இழவு கிடக்கட்டும், இழந்தோமென்கிற இழவுமின்றிக்கேயிருக்கிற நாம் நம்மிழவைப்பற்றிக் கவலைப்படாதொழிந்தாலும், சொத்துக்கு உடையவனாய் ஸ்வாமியென்று பேர்

பெற்றிருக்கு மெம்பெருமான் இழந்து தரிக்கமாட்டானன்றே. 'ஸுக்ருதம் செய்பவர்களையன்றிமற்றையோரை நான் அங்கீகரிக்க மாட்டேன்' என்று சாஸ்த்ரங்களில் அவன் பொறித்துவைத் திருப்பதனால் ஸுக்ருதம் செய்யாதவர்களை அங்கீகரிக்க முடியாம லிருக்கிறது; சேதநர்களோ புத்திபூர்வமாக ஸுக்ருதம் செய்ய மாட்டாதவர்களாகையாலே இவர்களை அங்கீகரிக்க இடமில்லாம லிருக்கிறது; ஆகவே இழந்தேபோகவேண்டியதாகிறது. இழவா மைக்காக அப்பெருமான் ஒரு கள்ளவழியில் நுழைகிறான். (அதாவது) கரணகளேபரங்களைப் பெற்றிருக்கிற சேதநன் வாளா கிடப்பதில்லை; "நஹிகச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டதி அகர்மக்ருத்" என்று கீதையில் சொன்னபடி எப்போதும் ஏதாவதொரு காரியம் செய்துகொண்டே போதைப் போக்கிவருகின்ற சேதநன் செய்யும் காரியங்களிலே, நாம் நன்மையென்று பேரிட்டுக்கொள்ளும்படி யான காரியம் ஏதாவது இருக்குமாவென்று பார்ப்போம்—என்று ஆராயத்தொடங்குகிறான். அவனுடைய அத்ருஷ்டத்தாலே அப்படிப்பட்ட காரியங்கள் நம்மிடத்திலே அவனுக்குக் கிடைத்து விடுகின்றன. அவற்றை ஸுக்ருதமாகவே அவன் திருவுள்ளம் பற்றுகின்றான். நாம் மனப்பூர்வமாக ஸுக்ருதமென்று செய்யாத தாகையாலே அஜ்ஞாதமென்கிறது. அவன் திருவுள்ளத்தாலே இது ஸுக்ருதமாகக் கொள்ளப்பட்டுவிட்டபடியால் ஸுக்ருத மென்கிறது. ஆகவே, அஜ்ஞாதஸுக்ருதமென்று பேர்பெற்று விட்டது.

இந்த அஜ்ஞாதஸுக்ருதமானது, யாத்ருச்சிக ஸுக்ருத மென்றும் ஆநுஷங்கிக ஸுக்ருதமென்றும் ப்ராஸங்கிக ஸுக்ருத மென்றும் பல பெயர்களை யுடைத்தாயிருக்கும். இவை நம்போல் வாரிடமிருந்து எம்பெருமானால் எவ்விதமாகக் கொள்ளப்படுகின் றன வென்பதை இனி நிரூபிப்போம். நாம் ஸம்ஸாரிகளாகையாலே மக்களைப் பெறுகிறோம்; மகளை ஒருவனுக்கு மணம் புரிவிக்க வேண்டியதாகிறது; மகனுக்கு ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டிய தாகிறது. ஆகவே, ஸ்ரீரங்கத்திலுள்ள ஒரு வரனுக்குத் தன் மகளைக் கொடுக்கவும், திருவேங்கடத்திலுள்ளவொரு பெண்ணைத் தன் மகனுக்குக் கொள்ளவும் நேருகிறதென்று வைத்துக்கொள் ளுங்கள். இந்த ஸம்ஸாரி அடிக்கடி வியவஹாரங்களில் [வார்ப் பேச்சுக்களில்] ஸ்ரீரங்கத்தையும் திருமலையையும் வாயாரச்சொல்ல வேண்டி வருகிறது. 'என்னுடைய மாப்பிள்ளை ஸ்ரீரங்கத்திலிருக் கிறார்' 'ஸ்ரீரங்கத்திலிருந்து என்னுடைய மாப்பிள்ளை நேற்று வந் தார்' 'மாப்பிள்ளையை யழைத்துவர ஸ்ரீரங்கம் போய்வரப்போகி றேன்' 'என்னுடைய நாட்டுப்பெண் திருவேங்கட மலையிலிருந்து வந்தாள்' என்றிப்படி பலகால் வ்யவஹரிக்க நேர்கின்றது. இந்த வ்யவஹாரங்களில் திருவரங்கத்தையும் திருமலையையும் பலகால் சொல்லுவதானது "இந்த திவ்யதேசங்களை நாம் சொன்னால் ஸுக்ருதமுண்டு" என்கிற எண்ணத்தினாலன்று; அம்பத்தூர், ஆவடி என்கிற ஊர்ப்பெயர்களைச் சொல்லுவதுபோலவே கோயில் திருமலை யென்னுமூர்ப்பெயர்களையும் இவன் சொல்லா நின்றான். ஆனாலும் ஏதேனுமொரு வியாஜத்தை எதிர்பார்ப்பதில் நோக் குடையனான எம்பெருமான் 'என்னூரைச் சொன்னானிவன்' என்று இதையொரு ஸுக்ருதமாகக் கணக்கிடாநின்றான்.

மற்றுங் கேண்மின்; ஸம்ஸாரிகளுக்குப் பிறக்கும் மக்களுக்கு ரங்கன், ராகவன், திருவேங்கடன், கோவிந்தன், கோபாலன், நாராயணன், மாதவன் என்றிப்படி பெயரிட்டு அந்தப் பிள்ளைகளை ஆர்வத்தோடு அழைக்கும்போதெல்லாம் இந்தப் பெயர்களைச் சொல்லி அழைக்க நேருகின்றது; தவிரவும் வ்யவஹாரங்களில் "ரங்கன் வந்தான், ராகவன் போனான், கிருஷ்ணனைக் கண்டேன், ராமனோடு பேசினேன்' என்றிப்படி பலகாலும் சொல்ல நேருகின்றது. எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லுகிறோமென்கிற எண்ணம் சிறிதுமில்லாமல் இங்ஙனே நிகழும் ஸம்ஸாரிகளின் வியவஹாரங்களில் எம்பெருமான் 'என் பெயரைச் சொன்னானிவன்' என்று இதையொரு ஸுக்ருதமாகக் கணக்கிடாநின்றான்.

சில பாகவதர்கள் திருவேங்கட யாத்திரையாக வழிநடந்து செல்லாநிற்கையில் கள்ளர்கள் அவர்களையடித்துப் பொருள்களை யபஹரிப்பதாக அணுகினார்கள்; அதே சமயத்தில் சில ராஜ சேவகர்கள் தங்களுடைய காரியமாக ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு அவ்வழியே வந்துகொண்டிருப்பதைக் கள்ளர்கள் கண்டு 'இவர்கள் இந்த பாகவதர்களுக்குத் திருமேனிக்காவலாக வருகின்றார்கள்போலும்; இங்கு நம்முடைய எண்ணம் ஒன்றும் நிறைவேறாது' என்றெண்ணி வாளா விலகியொழிந்தனர். இந்த நிகழ்ச்சி அங்கு யாத்ருச்சிகமாக வந்த ராஜ சேவகர்களுக்கும் தெரியாது, யாத்திரை செல்லுகின்ற பாகவதர்களுக்கும் தெரியாது; ஆனாலும் அங்கீகரிக்க அவகாசம் பார்க்கிற ஸர்வேச்வரன் அந்த ராஜசேவகர்களை பாகவதரக்ஷணம் பண்ணினவர்களாகத் திருவுள்ளம் பற்றுகிறான். அந்த ராஜசேவகர்கள் அந்த பாகவதர்கள் சென்ற வழியில் சென்றதுதன்னையே ஒரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்றான்.

ஒருவன் ஓரிடத்திலே நிலம் வாங்கி அதிலே வெங்காயம் உள்ளி முதலானவற்றைப் பயிர்செய்கிறான். தண்ணீரிறைக்க அங்கே ஸௌகரிய மில்லாமையால் நெடுந்தூரத்திலே நீருள்ள விடத்தில் துலையிட்டு, தன்வயலிலே வந்துசேரும்படி தண்ணீர் இறைக்கின்றான். அந்த நீர் ஒருபெரிய வாய்க்காலாகப் பெருகி வயலுக்குச் செல்லாநின்றது. யாத்திரை செல்கின்ற சில பாகவதர்கள் தாபார்த்தர்களாய் தாஹம் மிகுந்து எங்கும் தண்ணீர் கிடைக்காமல் வருந்திவருகையில் இந்தத் தண்ணீர்ப்பெருக்கைக் கண்டு பரமானந்தங்கொண்டு காலும் கையும் முகமுங் கழுவி விடாய்தீர்ந்து வாழ்த்திச் சென்றார்கள். நெடுந்தூரத்தில் துலையிட்டுத் தண்ணீரிறைக்கின்ற அவன் இதைச் சிறிதுமறியாதவனாயிருந்தாலும் ஸர்வஜ்ஞனான எம்பெருமான் "என்னடியார்களது விடாயைத் தீர்த்தானிவன்" என்று கொண்டு இதையொருஸுக்ருதமாகக் கணக்கிடாநின்றான்.

ஒரு தனிகன் தான் சூது சதுரங்கமாடுவதற்காக ஒரு சாவடி கட்டி அதிலே சூதாடிக் காலம் கழிக்கிறான். ஆனால் இரவு முழுவதும் சூதாடிக் கண்விழித்திருக்க முடியாதே; நடுநிசி வரையில் சூதாடிவிட்டு உறங்குவதற்கு வீடுபோய்விடுகிறான். அப்போது, யாத்திரையாக வழிநடந்து வருகின்ற சில பரம பாகவதர்கள் தாங்கள் சயனிப்பதற்கு இடம் கிடைக்காமல் வருந்தியிருந்து இந்தச் சாவடியிலே யொதுங்கநேர்கின்றது.

இப்படி ஒருநாளல்ல ; நாடோறும் நேர்கின்றது; இதை அந்தத் தனிகன் அறியான்; அறிந்தானாகில் ஒருவரும் உள்ளே புகாதபடி கதவுகள் போடவும் ஏற்பாடு செய்திடுவன். இப்படி சில பாகவதர்கள் தங்கிப் போகிறார்களென்பதை அவனறியா மையாலே சேமக்காப்பு செய்யப்படாமலிருந்து யாத்திரை செய் வார்க்குப் பேரின்பமளிக்கும் வசதியாக இருந்துவருகின்றது. இது எம்பெருமான் திருவுள்ளத்திலே பட்டு, 'என்னடியார்க்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தானிவன்' என்று ஒரு ஸுக்ருதமாகக் கணக்கிடலாகிறது.

ஒருவன் கோஹத்தி பண்ணியே ஜீவிக்குமியல்வினன்; அவன் ஒருநாள் ஒரு பசுவைக்கண்டு அதைப் பிடித்துக் கொல்லமுயன்று தொடரத் தொடங்கினான்; இதை யறிந்த அந்தப் பசு அஞ்சி யோடத் தொடங்கிற்று; இவனும் விடாது அதைத் தொடர்ந்து ஓடுகிறான். பசு ஓடும் வழியில் ஒரு பெருமாள்கோவில் இருந்தது; அதற்கு வலமாகவோடிற்று அந்தப் பசு; இந்தக் கிராதகன் அதைத் தொடர்ந்து பிடிக்கவேண்டியதற்காகத் தானும் அந்தக் கோவிலை வலஞ்செய்வானாய் ஓடுகிறான்; ஒரு பகவதாலயத்தை வலஞ் செய்கிறோமென்கிற எண்ணம் அவனுக்கில்லை; கோவிலை வலஞ் செய்வது ஸுக்ருதம் என்கிற அறிவுமில்லை யவனுக்கு. ஆனாலும், ஆள் பார்த்துத் திரியும் எம்பெருமான் 'இவன் என் கோயிலை வலஞ்செய்தான்' என்று இதை யொரு ஸுக்ருதமாகக் கணக்கிடா நின்றான்.

இங்ஙனே பல நிகழ்ச்சிகள் ஸம்ஸாரவாழ்க்கையில் ஸம்பவிப் பவையுள. இவையே அஜ்ஞாதஸுக்ருதமெனப்படுவன. மேலே நிரூபிக்கப்பட்டவற்றில் யாத்ருச்சிக ஸுக்ருத கோஷ்டியில் சேர்வன சில; ப்ராஸங்கிக ஸுக்ருத கோஷ்டியில் சேர்வன சில; ஆநுஷங்கிக ஸுக்ருத கோஷ்டியில் சேர்வன சில. ஆக இப்படிப் பட்ட ஸுக்ருதங்களை எம்பெருமான் தானாக அறிந்து நம்மை விஷயீகரிப்பதற்கு இவற்றை ஹேதுவாகவோ வியாஜமாகவோ கொள்ளுகிறானென்று இதுதன்னையும் நாம் சாஸ்திரங்களா லேயே அறிகிறோம். இப்படிப்பட்ட ஸுக்ருதஜ்ஞானம் எம் பெருமானிடத்திலுள்ளது பற்றியே அவனுக்கு **க்ருதஜ்ஞன்** என்னும் புகழ் தோன்றிற்று.

ஆளவந்தாரும் தமது ஸ்தோத்ரரத்னத்தில் **'வசீ வதாந்ய:'** என்னும் ச்லோகத்தில் எம்பெருமானது பல திருக்குணங்களையும் கூறிவருகையில் **'க்ருதீ க்ருதஜ்ஞ:'** என்று இக்குணத்தையும் கூட்டிக் கூறியுள்ளார். எம்பெருமானுடைய க்ருதஜ்ஞதா குணத்தை இவ்விதமாகவே நம் ஆசாரியர்கள் நிரூபித்தருளி பக்தர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொள்கின்றனர்.

இத்தகைய குணம் இராமபிரானிடத்து உள்ளதாக நாம் எது கொண்டு அறிகிறோமென்னில், ஓரிடத்தையே இங்குக் குறிப் பிடுவோம்; விபீஷணாழ்வான் சேர்ந்தபோது அவனை அங்கீகரிக் கக் கூடாதென்று வாதித்தவர்களில் தலைவன் ஸுக்ரீவன்; இராமபிரான் அவனுடைய வாதங்களைக் கண்டித்து விபீஷணாழ் வானைத் திருவுள்ளம் பற்றியே தீருவதென்கிற தனது உறுதியை வெளியிட்டபின் விபீடணனைத் தன்னிடம் அழைத்துவரும்படி ஸுக்ரீவனுக்கே கட்டளையிட்டுச் சொல்லும்போது 'ஆநயைநம்

ஹரிச்ரேஷ்ட ! தத்தமஸ்யாபயம் மயா' என்றார். 'ஸுக்ரீவ! விபீட ணனுக்கு நாம் அபயமளித்தோமாதலால் அவனை நீயே அழைத்துவா' என்று சொல்லி உடனே "விபீஷணோ வா ஸுக்ரீவ! யதிவா ராவணஸ் ஸ்வயம்" என்றார்; இதன் பொருளாவது, ஸுக்ரீவ! நம்மை அடைக்கலம் புகுவதாக வந்து நிற்பவன் விபீடணனென்று நீங்கள் சொல்லுவதனால் அவனை அங்கீகரித்ததாகச் சொன்னேன்; ஒருகால் விபீஷணனல்லாமல் அவனது வேடம் பூண்ட இராவணனே வந்திருப்பதாகத் தெரியவந்தால் அவ்விராவணனை அங்கீகரிப்பதா? என்று மறுபடியும் விசாரம் வைத்துக்கொள்ளாமல் அவனையே தாராளமாக அழைத்துவா என்றபடி. இங்ஙனம் தம்முடைய உதாரமான திருவுள்ளத்தைக்காட்டுகின்ற இராமபிரான் ராவணனிடத்தில் என்ன ஸுக்ருதங்கண்டு இந்த வார்த்தை சொன்னாரென்று ஆராயுமளவில், மஹா பாவியான அவ்விராவணனிடத்தில் புத்தி பூர்வமானஸுக்ருதம் காணமுடியாமற்போனாலும் மேலே விவரித்தவகையில் யாத்ருச்சிகம் முதலிய ஸுக்ருதங்கள் காணநேருமென்கிற துணிவு கொண்டே அங்ஙனமருளிச் செய்யலாயிற்றென்று நம் ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றுகின்றனர். (தொடரும்.)

கற்பனை

பி. ஸ்ரீ.

"நான் கொண்டாடிய தீபாவளி"

'ஹா ஹா! நான் இல்லையா? "இல்லை" யென்று நீ சொல்லிவிட்டால் நான் இல்லாமல் போய்விடுவேனா? நான் இல்லாமற் போக நானே ஆசைப்படுகிறேனம்மா! அப்படி ஆசைப்பட்டாலும் என்னை என்னால் இல்லாமல் செய்துகொள்ள முடியவில்லையே! ஹீ ஹீ ஹீ!' என்று சிரித்தான் அவன்.

முகத்தைப் பார்த்ததும் முதலில் எனக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. அசல் அசுரன்தானா? அசலோ, நகலோ; உண்மையில் அசுரர்களை நான் பார்த்ததே இல்லை. எனினும் முகஜாடை தெரிந்துவிட்டது. 'எப்படி?' என்று ஆலோசித்துப் பார்த்தேன். அரபிக்கதைகள், பழைய புராணக் குஜிலிக்கடைப் பதிப்புகள்போன்ற சில புத்தகங்களில் அசுரர்—அரக்கர் படங்களைச் சிறுவர்களின் நெஞ்சம் அஞ்சும்படி போட்டிருப்பது நினைவிற்கு வந்தது. உடனே என் நெஞ்சு அஞ்சுவதை விட்டுவிட்டது. அந்த சித்திர அசுரர்களில் ஒருவன்போலத் தோன்றிய அந்த ஆசாமியை அச்சமில்லாமலே நோக்கி, 'நீங்கள் யார் ஸார்? உங்களைத்தானே அசுர ஸார்! தாங்கள் அசுரரா, அரசரா?' என்று கேட்டேன்.

அதற்கு அசுரன், 'நான் உங்கள் சித்திர அசுரன் இல்லை: உண்மையான அசுரசிரேஷ்டன்; அரசசிரேஷ்டனும்தான்!...... தீபாவளி அசுரன் நான்தான். என் பெயர் மாட்சிமை தங்கிய நரகாசுர சக்ரவர்த்தியென்று அந்தக்காலத்திலே பிரசித்தம். உங்கள் கண்ணனைக்கூடப் பயமுறுத்தியிருக்கிறேன். எனினும் பெண்ணே நீ அஞ்சாது என்னை "இல்லை" என்று பள்ளி வகுப்பிலே சொல்லவும் துணிந்துவிட்டாய். நான் சரித்திர புருஷனில்லை

யென்று சொல்லத் துணிந்தாயே; என் சரித்திரம் இன்றும் முடிந்தபாடில்லையே! இதுகூடத் தெரியவில்லையா சரித்திரப்பாடம் கற்பிக்கும் வாத்தியாரம்மாளுக்கு?'' என்று பதில் சொன்னான்.

நரகாசுரனாயிருந்தும் இடிக்குரலில் மண்ணதிர, விண்ணதிரப் பேசவில்லை.

பாரடா எம்பலத்தை;
சேரடா எமலோகத்தை!

என்று நாடகமேடை நரகாசுரர்கள் பழைய தெருக்கூத்துகளில் பேசக்கேட்டிருக்கிறேன். அப்படியொன்றும் இந்த நரகாசுரன் அதட்டிப் பேசவில்லை.

'சித்திர அசுரன்தான் இவன். ஏதோ ஒரு சித்திரப் புஸ்தகத்திற்குள்ளிருந்து தப்பி வெளியே வந்துவிட்டான்! ஆனால்......' என்று நான் ஏதோ சிந்திக்கத் தொடங்கியதுதான் தாமதம்; நரகாசுரன் என்னைநோக்கி, 'ஸ்ரீமதி மங்களம்மாள் அவர்களுக்கு மங்களம்; நீங்கள் நினைக்கிறது மட்டுமல்ல, நினைக்கப் போகிறதும் எனக்குத்தெரிகிறதே; "சித்திர அசுரன் தானே, சரித்திர அசுரனாவது எப்படி?'' என்பதுதான் உன் நினைப்பு' என்று சொல்லிவிட்டான்.

இப்படிச் சொல்லித் தொடர்ந்து, 'இன்றைய உலக சரித்திரத்தில் எனக்கு அக்கறை இல்லையென்றா நினைக்கிறாய்?' என்று கேட்டான்.

'ஓஹோ, நீதானா இந்த உலக சரித்திரத்தை இப்படி உருட்டிப் புரட்டி மோசமாக்கி, ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும், பாக்கிஸ்தானுக்கும் ஹிந்துஸ்தானுக்கும் இடையே பகைத் தீயை அவியவிடாது ஊதி விடுகிறாய்?' என்று தைரியமாக ஒரு போடுபோட்டேன்.

நரகாசுரனுக்குக் கண்களில் நீர் துளித்தது. 'அந்தக் காலத்திலே தான் உலகத்தை நரகன் பாழாக்க முயன்றான்; இந்தக் காலத்திலே நரன்தான் உலகத்தை நரகமாக்குகிறான்! இந்த நரகனுக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது தெரியுமா? என் துயரங்களை நீ கண்டாயா, கேட்டாயா?' என்று கிலேசித்தான் அசுரன்.

'இவன் சித்திரநரகன்மட்டுமா? விசித்திர நரகனாகவும் இருக்கிறானே? புராண நரகன் இப்படியொன்றும் சாதுவாய்க் காணப்படவில்லையே' என்று நான் சிந்தித்தவண்ணம், 'நரகனாகிய உன்னுடைய ஆவேசம்தானே நரனை இப்படிச் செய்யுமாறு தூண்டிவிட்டிருக்கிறது?' என்றேன். அசுரனுக்கு அழுகை வந்துவிட்டது. 'பிறரை அழச்செய்யும் அசுரனும் அழுகிறானே!' என்று அதிசயித்தேன்.

நரகாசுரனுடைய கதை முழுதும் நினைவிற்கு வந்தது. ப்ராக்ஜ்யோதிஷபுரம் என்ற அவனுடைய அந்த ஊர்ப் பெயரே என்னைப் பயமுறுத்தியதுண்டு. அதைத் தலைநகரமாகக் கொண்டு பன்னிரண்டு அக்குரோணிப் படைகளுடன், முரன் என்ற மந்திரியுடன், எட்டு அசுரப் படைத்தலைவர்களுடன், எட்டுத் திக்குகளையும் வெருட்டியடித்து, தேவமாதாவாகிய அதிதி என்பவளின் குண்டலத்தையும் திருடிக்கொண்டு, பதினாறுயிரம் அரசிளங்குமரிகளையும் சிறைவைத்த அந்த அசுர சக்ரவர்த்தியா இவன்? என்ன

புரட்சிகரமான மாறுதல்! முகத்தில் பழைய கொடுமையும் இல்லை, மிடுக்கும் இல்லை: தன்னம்பிக்கைகூட இல்லையே!

இப்படியெல்லாம் நினைவுகள் என் உள்ளத்தில் உருண்டோடும்போதே, நரகாசுரன் திடீரென்று ஒரு கணம் உடல் நடுங்க, 'இங்கே அணுக்குண்டு இருக்கிறதோ?' என்று கேட்டான்.

'கிடையவே கிடையாது. அஹிம்ஸைக் குண்டு போட்டுத்தான் நாங்கள் சுயராஜ்யம் பெற்றிருக்கிறோம்!' என்றேன்.

'அஹிம்ஸைக்கு நான் பயப்படவேண்டுமா, என்ன? அணுக்குண்டு விழுந்த ஜப்பானிய நகரமொன்றில் நான் அகப்பட்டுக்கொண்டேன். மற்றவர்களோடு நானும் தவிடுபொடியாய்ப் போய்விட்டதாகவே நடுநடுங்கினேன். சூட்சுமசரீரியாக இருந்ததால் தான் பிழைத்துக்கொண்டேன். என் ஸ்தூலச் சட்டையைத் தான் கண்ணன் கிழித்துவிட்டானே!' என்றான் நரகன்.

நான் இளநகையரும்பிய வண்ணம், அவன் அந்தப் பாகவத காலத்திலே அண்டகடாகம் கிழியும்படியாகக் கண்ணனுடன் செய்த போராட்டத்தை ஞாபகப்படுத்தினேன். 'அப்போது யுகாந்த காலத்திலே பெய்யும் பெருமழைபோலக் கண்ணன் சரமாரி பொழிந்ததையும் அனாயாசமாய்ச் சமாளித்துக்கொண்ட அசுரசக்தி இன்று அணுக்குண்டுக்கும் அஞ்சுகிறதே!' என்றேன்.

பிறகு நரகாசுரன் — தன் ஜபமாலையை என் மேஜைமீது வைக்கப்போனவன்—அங்கேயிருந்த ஒரு சிறு புட்டியைக் கண்டு நடுங்கி, 'உலகத்தை யழிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துவரும் சர்வநாச அணுக்கிருமிகளா அந்தப் புட்டிக்குள்ளே' என்று கேட்டான். 'இல்லை, ஜலதோஷ மருந்து' என்று நான் சொன்னதும் அவன் சிரித்துக்கொண்டே, 'ஏழை வாத்தியாரம்மாள் வீட்டில் அத்தகைய பயங்கரக் கொலைச் சாதனங்கள் இருக்க முடியுமா என்பதைக்கூட மறந்துவிட்டேனே!' என்றான்.

கடுந்தீயைப் பொழிவதுபோல் கொலைக் கருவிகளைச் சொரிந்து கண்ணன் ஆரோகணித்துவந்த 'கருடவாகனம்' என்ற அந்த ஆகாயவிமானத்தையும் சல்லடைக் கண்களாய்த் தொளைத்துக் கண்ணனும் சோர்வுற்றுச் செயலற்று மயங்கும்படி நெற்றியிலே காயப்படுத்திவிட்டானல்லவா நரகாசுரன்? அப்போதுதானே தேவிசத்தியபாமை, நெஞ்சிலே அனல்மூள முத்துமாலைஜொலித்து அசைந்தாட, வளையணிந்த கையில் வில்லெடுத்து நின்றாள்? இப்படி நான் எண்ணமிடும்போதே நரகாசுரன் என் உள்ளத்தை அப்படியே வாசித்துவிட்டவன்போல், 'அந்தக் காலம் அது. தேவிசத்தியபாமையின் தர்மாவேசம்தான் கண்ணனுக்குத் தக்க சமயத்தில் தக்க உதவிசெய்து வெற்றி அளித்தது. இந்த நாளிலும் உன்னைப்போன்ற பெண்களின் தர்மாவேசந்தான் என்னைக் காப்பாற்ற வேணும்' என்றான்.

'அபலைகளான பெண்கள் என்ன செய்யமுடியும்?' என்று கேட்டேன். அவன் சொன்ன விஷயமும் எனக்குத் தெளிவாக விளங்கவில்லை. சத்தியபாமையின் தர்மாவேசம் போர்வெறியும் ஆகி நரகாசுரனைச் சோர்வுறச்செய்தபின்புதான் கண்ணனும் மூர்ச்சை தெளிந்து சக்ராயுதத்தால் நரகாசுரவதம் செய்யமுடிந்தது என்ற அந்தப் புராணகதையை நான் நன்றாக அறிவேன். ஆனால் அந்த வதம் நரகாசுரனுக்கு எப்படி உதவி செய்திருக்கு

முடியும்? இவனைத்தான் கொன்றுவிட்டதே; செத்தவன் எப்படி மறுபடியும் முளைத்துவிட்டான்?'

இத்தகைய கலக்கத்துடன் கேள்விகேட்ட என்னை நோக்கி நரகாசுரன், அந்தக் கேள்விக்கும் என் கலங்கிய எண்ணங்களுக்கும் சேர்த்துப் பதில்சொன்னான்:

'கண்ணனுடைய வெற்றியும் தேவி சத்தியபாமையின் தர்மாவேச வெற்றியும் உண்மையில் எனக்கும் வெற்றிதான்! அந்த அதர்மச்சட்டை கிழிந்துபோனதும், கண்ணனாலும் என்னைக் கொல்லமுடியவில்லை, கொல்லமுடியாது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டேன். ஒரு கணம் அந்த உணர்ச்சி எனக்கு மகிழ்ச்சி யளித்தது.

'தேவர்கள் வெற்றிபாடக் கண்ணனும் தேவியும் கருடன் மீது தோன்றியதும், "இவ்வளவுதானா உங்கள் வெற்றி?" என்று சொல்ல வாயெடுத்தேன். ஆனால் நான் என் ஸ்தூலமேற்சட்டை கிழிபட்ட அந்த நிமிஷம் வரையில் நரர்களை வாய்விட்டுக் கதறச் செய்து உலகத்தை நரகமாக்கி நரகாசுரப் பெயரையும் நிலைநிறுத்திப் பாவமூட்டையை மேலும்மேலும் பளுவாக்கிக்கொண்டிருந்தேனே, அவ்வளவு கனமும் என் நெஞ்சை அழுத்திப் பேச்சுத் திணற மூச்சுத் திணறச் செய்துவிட்டது!

'அப்போது கண்ணன் என் மகனாகிய பகதத்தனுக்கு மனமிரங்கி அபயப்ரதானம் செய்து முடிசூட்டியருளினான். அந்த நிமிஷத்திலேயே என்உள்ளம் உருகுவதுபோலத் தோன்றியது.

'கண்ணன் அரசிளங்குமரிகளைச் சிறையிலிருந்து விடுவித்து, நான் திருடியிருந்த குண்டலங்களைத் தேவமாதாவிடம் சேர்ப்பித்ததும், அந்தப் பெண்களெல்லாம் முகமலர்ந்து, "தர்மம் வாழ்க" என்று ஆவேசமாய் வாழ்த்தினார்கள். அப்போது என் பாவச் சுமையும் சிறிது குறைந்துவிட்டதுபோலத் தோன்றியது.

'நான் கண்ணனை நோக்கி, "மகா பாவியான அடியேனுக்கு மரணமும் விடுதலை அளிக்கவில்லையே! கடவுளே! உன்னாலும் உண்மையில் இந்தப் பாவியைக் கொன்றொழிக்க முடியவில்லையா?" என்று கதறினேன். கண்ணன் கருணை கூர்ந்து, "ஆத்மாவை அழிக்க உன்னாலும் இயலாது; உன் அப்பனை ஆண்டவனாலும் இயலாது! பாவ நினைப்பு அழிவதே உனக்கு விடுதலை. உலகத்தில் தர்மம் படரப்படர உனக்கும் கதி கிடைக்கும்" என்று ஆறுதல் கூறினான்.

'உலகத்திலே தர்மம் படர்வதற்கு முக்கியமாகப் பெண்களின் தர்மாவேசம் அவசியமானது. நீயும் உன்னுடைய சிநேகமணிகளும் இயன்றவரையில் இந்தத் துறையில் எனக்கு உதவி செய்யவேண்டும்; என் துயரமூட்டையைக் குறைக்க உதவ வேண்டும்.'

நரகாசுரனின் கூக்குரல் ஓய்ந்து காற்றோடு காற்றாய்ப் பெருமூச்சுவிடுவதுபோல் கரைந்துபோயிற்று. நான் எழுந்து பார்த்ததும் பொழுது புலரும் நேரமாகிவிட்டது. அவசரமாய் எழுந்து தீபாவளி ஸ்நானத்திற்குப் போனேன்.

கவலை

அன்பா,

கவலை என்பது மனதின் அழுக்கு; அது உனக்கு இயல்பில்லை; அது புறத்திலிருந்து வந்து மனதைத் தாக்குகிறது. அது வரும்போதே "போ, பேயே" என்று தூரத் தள்ளிவிடு; பேய் கிட்ட வராது.

கவலை வரும்போது தனித்திரு; யார் மேலும் ஆத்திரப்படாதே; பொறுமைப் பேயைப் பூண்டுடன் ஒழித்தால் ஆத்திரம் வராது; சினம் பொங்காது; மனம் கொந்தளிக்காது. அரசியல் வாழ்வில் நான் எத்தனையோ கொடிய மனப்பான்மைகளைப் பார்த்தேன்; இன்று நண்பராகக் கை குலுக்குவோர், நாளைத் தேர்தலின்போது நேர் எதிரிகளாகி ஒருவரையொருவர் அச்சிலும் மேடையிலும் திட்டிக்கொண்டு, குண்டர்களைவிட்டு அடிதடியில் இறங்குவதையும், கொலைவாள்கூடப் பிடித்ததையும் பார்த்தேன். ஆத்திரத்தில் பேச்சுகளும் வசையம்புகளும் முடிவில், ஆகாச வாணம்போல் கிளம்பிக் கரிந்துவிழும். பிறகு, "ஏன் பேசினோம்; இதனால் நமது சக்தி வீணாகிப் பொல்லாப்பு வந்ததுதானே மிச்சம்" என்று ஆத்திரக்காரரே உணர்வர். ஆத்திரத்தால் படபடக்கும்போது நீயும் வாயைக் கிளப்பாதே; படபடத்து ஒழியட்டும் என்று சும்மா உள்ளே யிரு. கவலை வராது. அன்பு.

துன்பத்தின் பயன்

அன்ப,

வாழ்க்கையில் ஒரே இன்பமும், அமைதியும், எதிர்ப்பில்லாத சமனும் இருந்தால் சுகப்படாது; கொஞ்சம் மேடு பள்ளமும் வேண்டும். எதிர்ப்பின் சக்திதான் முன்னேற்றம். யாரும் எதிர்க்காவிட்டால் காந்தி ஏது? சிவாஜி ஏது? புடலங்காயும், கத்தரிக்காயும், வெண்டைக்காயும் சேர்த்த கூட்டில் பாகக்காயும் சேர்ந்தால் 'பிட்லை வெகு ஜோர்' என்று அள்ளுகிறோமல்லவா! அதுபோல், கொஞ்சம் கசப்பும் இருந்தாலே இனிப்பின் அருமை தெரியும். விளக்கெண்ணையும் வேப்பிலை உருண்டையும் தின்பவனுக்கு தாயார் கொஞ்சம் வெல்லம் தருவதுபோல், உலகில் இடர்களைப் பொறுப்பவனுக்கு இறைவன் இனிப்பைத் தருவான். ஆதலால் என்ன இடர் வந்தாலும் சகித்துக்கொண்டு தீரனாக வாழ்வை வெல்ல வேண்டும்.

கடும் போர் செய்யும் வீரன் வியர்வையிலேதான் வெற்றி அரும்பும். உழுது பயிரிடாமல் உணவு வருமா? உலையில் வேகாமல் சாதமாகுமா? இதெல்லாம் எண்ணிப்பார்.

அன்பா! உடல் ஒரு பஞ்ச பூதக்கூண்டு. அதை ஆட்டுவது இருவிகார மனம்; பருவங்கள் மாறுவதுபோல், மனம் உலகின் சுக-துக்கங்களால் மாறுதலடைகிறது. பருவங்கள்

ஆறு ஆனாலும் காலம் ஒன்றே. சுக-துக்கங்கள் பலவானாலும் அவற்றின் பின்னே சாட்சி சேதனனாயிருக்கும் ஜீவாத்மா ஒன்றுதான்; அது பரமாத்மாவின் அம்சம் என்பதை நினை.

ஒரு துக்கமோ, அவமானமோ வரும்போது, "இவை யாருக்கு? இவை வெளியிலிருந்து வந்தே எனது மனத்தைத் துளைக்கின்றன. நான் மனமா? இல்லை; மனாதீதனான ஆத்மா. ஆகையால் எனக்கு இந்தத் தொல்லை யில்லை. உடலைத் தாண்டி இத் தொல்லை அணுகாது. என் இயல்பான இடம் பரமாத்மா" என்று எண்ணி அடிக்கடி சாந்தம் பெறுவதுதான் துக்கத்திற்கு ஒரே மருந்து.

உலகின் சோதனைகளை வெற்றிப்படிகளாகக் கொள்ள வேண்டும். உப்பைத் தனியாகத் தின்ன முடியாது; குழம்பு கூட்டுடன் அல்லது மோருடன் கலந்து உண்டால் சுவைக்கும். துன்பம் வரவர இன்பமயமான இறைவனைத் தியானி; அவன் திருநாமத்தைப் பாடு; துன்பம் தோன்றாது.

சோம்பல் மாட்டிற்குக் கொஞ்சம் தார் வைத்தாலே ஓடும். அதுபோல் துக்கங்கள் மனத்தைச் சுறுசுறுப்பாக்கும். துக்கமில்லாதவனுக்கு ஞானம் வராது; சுகவாசி அம்மா பிள்ளையாகத்தான் இருப்பான். ஆதலால் துன்பம் உனக்கு வைராக்கியத்தைத் தந்து காரிய வீரம் அளிக்கவேண்டும். அன்பை வளர்; அச்சமில்லை.

அன்பை வளர்

அன்பனே,

அன்புமட்டும் இருந்தால் அருள் ஓடி வரும். அன்பில்லாத நெஞ்சம் அகம்பாவ இருளால் மூடப்பட்ட பேராசைக் காடாகவே இருக்கும். அன்பில்லாதவனை மனிதன் என்பது இனிப்பில்லாததைக் கரும்பு என்பது போலாகும். அன்பை வளர்; அன்பு உன்னை வளர்க்கும்.

நான் குருபீடம் வைத்து சிஷ்யகோடிகளைச் சேர்த்துத் தடபுடல் விளம்பரங்களும் ஆடம்பரங்களும் செய்ய விரும்பவில்லை. ஆனால், நான் உருத்தெரியாமலே அடக்கமாயிருந்து என் இதயத் துடிப்பை — முதன்மையாக தியானத்தாலும் அதற்கு அடுத்தபடிஎழுத்தாலும் பக்குவமான அன்பர் மூலம் உலகிற்கு உணர்த்தவே விரும்புகிறேன். என் வாழ்வில் ஒரு மூச்சுக்கூட வீண் விவகாரங்களிலும் தெருக்கூச்சலிலும் செல்லாமல் ஒவ்வொரு மூச்சையும் இதயத்தில் உள்ள சுத்த பரமாத்மனுக்கே தியான மலராக்குகிறேன். அந்த மலரில் பொங்கும் தேனே பாட்டு. என் உள்ள ஊற்றில் பொங்கும் பாடல்கள் உள்ளத்திற்கு உள்ளம் தாவிப் பேரின்ப அருவியாக ஓடி மனித சமுதாயத்திற்கு ஆறுதலும், ஆத்ம சேதனமும், தெய்வ பக்தியும், அமரானந்த சக்தியும் அளிக்கட்டும். அதுவே என் இன்பம் — என்வாழ்வின் குறிக்கோள். அன்பை வளர். என்னுள் இரு.

ஸ்ரீமதி கி. ஜெயலக்ஷ்மி (சென்ற இதழ் தொடர்ச்சி)

கர்ணனின் வெற்றி

பாண்டு பூபதியின் பட்டமகிஷியான குந்திதேவி தன்னை நாடிவந்திருப்பதை சேவகர்மூலமறிந்த கர்ணன் எதிரேோடிச் சென்று அழைத்துவந்து மிகுந்த அன்புடன் உபசரித்தான். குந்திதேவியும், குமாரனைப் பார்த்து, உடல் பூரித்து மகிழ்ந்தாள். கர்ணராஜன், கண்ணீர் சொரிந்து, "அம்மா, முன்ஜன்மத்தில் நான்செய்த புண்ணியங்களின் பயனால் தாங்கள் இங்கு எழுந்தருளினீர்கள். என் பாக்கியமே பாக்கியம். தாங்கள் இவ்வளவு தூரம் வரஇருந்த காரணமென்ன வென்று தெரிவிக்கவேண்டும்?" என்றான்.

குந்திதேவி, "குழந்தாய்! நீ என்னுடைய குமாரன்; நான் உன்னைப் பெற்ற தாய். எப்படியென்றால், கன்னிப்பருவத்தில் என்வீட்டில் இருக்கும்போது ஒருநாள் துர்வாச முனிவர் என் தந்தையிடம்வந்து அர்க்ய, பாத்ய, மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு ஆசீர்வதித்து சாதுர்மாஸ்ய விரதம்செய்ய வேண்டுமென்று சொல்ல, அதற்குடன்பட்ட என் தந்தை அம் முனிவருக்கு சகல பணிவிடைகளும் செய்யும்படி எனக்குக் கட்டளையிட்டார். நானும் அவருக்கு முதல் நாளைப்போல, பல நாளும் பணிவிடைகள் செய்துவந்ததில் அம்முனிவருக்கு என்மேல் கிருபை பிறந்து, ஐந்து தேவதைகள் பேரால் ஐந்து மந்திரங்களை உபதேசித்துச் சென்றார். யௌவனமுடைய நான் எதுவும் அறியாமல் ஒருநாள் அந்த மந்திரத்தில் ஒன்றை உச்சரித்தேன். அந்த மந்திரத்திற்கு அதிதேவதை யான சூரியபகவான், தன் கிரணங்களைச் சுருக்கிக்கொண்டு பிரத்யக்ஷமாகி அனுக்ரகித்து எனக்கும் கன்னிப்பருவம் குறைவில்லாமலிருக்கும்படி வரம்கொடுத்து மறைய, உடனே எனது கர்ப்பத்தில் நீவந்து உதயமாயினை. மகனே! அந்த வேளையில் கவசகுண்டலத்தோடு விளங்கிய உன் திருஉரு வத்தைக் கண்டுமகிழ்ந்த நான் கன்னிகையாதலால் கண்கலக்க முற்று, தந்தைமுதலிய பந்துக்களும் நிந்தித்து, குடிகேடி என்றென்னைகோபிப்பார்களே, 'கலியாணமில்லாமல் கணவனை அடைந்து மகனைப் பெற்றாள் மன்னன் புதல்வி' என்று உலகம் பழிக்குமே...என்று பலவாறும் எண்ணி பழிக்கஞ்சிய பாவியாகிய நான், ஒரு பெட்டியில் உன்னைவைத்து ஆற்றில் விட்டேன். அன்றுமுதல் எனக்கொன்றும் தெரியாது. இன்று அறிந்துஉன்னைப்பார்க்கவந்தேன். என் மகனே! உன்னை எடுத்து மார்புடன் அணைக்கவும் நீராட்டித் தாலாட்டவும் ஆபரணம் பூட்டவும், நீ தளர்நடை நடந்து மழலைமொழி பேசிக்காண வும் பாக்கியம் செய்யாத தாயாகிய பாவி நான்! நீ எனது ஜ்யேஷ்டகுமாரன்; பாண்டவர்கள் உன் தம்பிகள்...என்ற உண்மையை உனக்குத் தெரிவிக்க வந்தேன்" என்றாள்.

இவைகளைக் கேட்ட கர்ணன், "அம்மா! கோபம் கொள் ளாதீர்....ஒரு விஷயம் சொல்கிறேன்: பிறந்தது முதல் இல்

லாத தாய் இப்பொழுது எங்கிருந்து வந்தது? தங்களை என்னிடம் அனுப்பிய ஆளை நானறிவேன். மேலும் உமது சொற்கள் உண்மை என்பதிலும் சந்தேகமில்லை. ஆயினும் ஒரு வேண்டுகோள். எவர்களாவது திரவிய சம்பன்னர்களாக இருந்தால் அவர்களை என்பிள்ளை, என் சகோதரன், என்மாமன் என்று சொந்தம் பாராட்டுவது இவ்வுலக வழக்கம். துரியோதன ராஜனுடைய சம்பத்தெல்லாம் என் வசமிருக்கிறபடியால் எனக்குத் தாயென்று வெகுபேர்கள் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அப்போது விசனமடைந்த நான் சூதநாயகனையும் அவன் மனைவி ராதையையும் வணங்கி என் வரலாறு என்ன என்று கேட்டேன். அவர்கள் "குழந்தாய்! பிள்ளை இல்லாமல் வருந்திய எங்களுக்கு பிள்ளைக் கலிதீரும்படி பெருகிய ஆற்றில் மிதந்துவந்த உன்னைக் கண்டெடுத்து வளர்த்து, என்ன பெயரிடுவதென்று யோசிக்கும்போது "கர்ண" என்று அழைக்கும்படி அசரீரி பிறந்தது! அப்படியே பெயரிட்டு வளர்த்துவந்தோம். இதுதான் எங்களுக்கு தெரியும்" என்றார்கள். "நான் வந்த பெட்டியில் ஏதாவது அடையாள மிருந்ததோ" என்று கேட்டேன். அவர்களும் அந்தப்பெட்டியைக் கொடுத்தார்கள். அப்போது நான் தனுர்வேதங் கற்று துரியோதனனுடைய சம்பத்தை அனுபவிக்கும் காலமாகையால் அந்தப்பெட்டியை என் அரண்மனை பூஜை அறையில் வைத்திருக்கையில் ஒருநாள் திறந்து பார்த்தேன். அதில் ஒரு நாகவுரிப்பட்டை நாலாக மடித்து விரித்திருந்தது. அதை எடுத்து பத்திரமாக வைத்திருக்கிறேன். அம்மா! எனக்குத் தாயென்று வந்த ஸ்திரீகளிடத்தில் இந்த வஸ்திரத்தைக் கொடுத்து தரித்துக்கொள்ளச் சொன்னேன். அவர்களும் கரத்தில் வாங்கி, பிரித்த உடனே, சிரத்தைத் திருப்பி, அக்கினிக்கொழுந்தின் அனல்வந்து வீச அரண்டு மிரண்டு ஓடிப்போய் விட்டார்கள். அதுமுதல் வருவார் ஒருவருமில்லை" என்றான். குந்திதேவி குலங்க நகைத்து, "அப்பா மைந்தா! உன்னைப்பெற்ற நாளையில் உடுத்தி இருந்த பட்டு வஸ்திரத்தை உன் உடம்பு நோகாதிருக்கும்படி பெட்டியில் வைத்துவிட்டேன். அந்த வஸ்திரமோ சுசி, ஆசாரம், பக்தி இவைஎல்லாமுள்ளவருக்குத் தோன்றுமேயல்லாமல் மற்றவருக்கெல்லாம் தோன்றாது. அந்த வஸ்திரத்தை எடுத்து வா பார்க்கலாம்" என்றாள்.

கர்ணனும் வஸ்திரத்தையெடுத்துக்கொடுத்தான். அதை வாங்கி சூரியபகவானை வணங்கி, விரித்து உடுத்திக்கொண்டு, ஓடாமல் வாடாமல் அன்றலர்ந்த மலரைப்போல விளங்கும் குந்திதேவியைக் கண்டு, அளவுகடந்த ஆனந்தமடைந்த கர்ணன், "என்னை இன்னவன் என்று அறியச்செய்த இறைவியே சரணம்" என்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். குந்திதேவி மகனைக் கட்டிதழுவித் தடவிக்கொடுத்து, 'வளர்த்து

எடுக்கும் பாக்கியமற்ற பாவியானேன்' என்று வருந்துகையில் கர்ணன், "தாயே! தாங்கள் ஆறு பிள்ளைகளைப் பெற்று ஐந்து பிள்ளைகளை வளர்த்தெடுத்து புத்திர வாஞ்சையை அனுபவித்தீர். நானோ தங்களுடைய மலர்க்கரத்தில் வளரவும், பாண்டவரை என் தம்பிகளென்று பாரோர் மதிக்கவும் பாக்யமற்ற பாவியானேன். தாய், தந்தை, சாதி, குலம் முதலிய தன்மை இன்னதென்று தரணியோர் சொல்லும்படியான தவம் செய்யாத் தரித்திரனானேன். இன்றெனக்கு நல்ல காலமாதலால், தங்களைத் தரிசித்து என் மனக்குறையும் நீங்கி மகிழ்ச்சியும் அடைந்தேன்" என்றான்.

குந்திதேவி "அப்பா! இதுவரை உன் பிறப்பை நீ அறியாதபடியால் துரியோதனனிடம் இருந்தாய். இப்போது அறிந்துகொண்டமையால் பாண்டவராகிய தம்பிமார் பணிவிடைசெய்ய சிங்காசனத்தில் வீற்றிருந்து, தேசதேச ராஜரும் வந்து பணியவும் புவனசக்ரேச்வரன் புண்யசாலி தருமராஜனுக்குதமையன் என்று தேவர்கள் முதல் யாவரும் புகழ, அஸ்தினாபுரத்திலிருந்து நீ அரசாளவேண்டும்...அப்படி செய்வதே கடமை" என்றாள்.

கர்ணன், "அம்மா! சூரியனுடைய கிருபையால் பெற்று, பிறர்பழிப்புக்கு அஞ்சி பெட்டியிலிட்டுபெருக்காற்றில் விட்டு, புத்திரப்பேராசையை நிராசையாக்கி, பெற்றதுமில்லை பெறாததுமில்லை என்று என்னை மறந்துவிட்டீர். உமது கர்ப்ப நலத்தினாலோ, என்னை உற்பவித்த சூரியனுடைய பலத்தாலோ, ஜன்மாந்திரத்தில் நான்செய்த புண்ணிய பலத்தாலோ உயிர் பிழைத்து, ஆற்றில் மிதுந்துவருகையில் சூதநாயகனும் ராதையும் கண்டெடுத்து வளர்க்கஅதை அறிந்த திருதராஷ்டிர ராஜாவும் தன் குலத்துக்குரிய பிள்ளையாக போஷித்து வந்தான். பிறகு துரியோதனாதியரும் பிறந்தனர். கௌரவரும் பாண்டவரும் வில்வித்தை கற்று பரீக்ஷிக்கும்போது எனக்கும் அர்ஜுனனுக்கும்பகை ஏற்பட்டு சபதங்கள் கூறினபோது, துரியோதனன் என்னைஉயிர்த்தோழனாகக்கொண்டு அங்கதேச பட்டாபிஷேகம்செய்து, பொன்மாலை என்ற பெண்ணை மணம்செய்வித்துத் தன்னுடன் சரியாசனத்தில் அமர்த்தி, தம்பிமாரும் சுற்றத்தாரும் சகலராஜர்களும் மதிக்கும்படி செய்து தன்னுடைய சகலசம்பத்துக்களையும் என் வசம் ஒப்பித்து, புகழும் உண்டாக்கி பேதமில்லாமலிருக்கிறான். ஒருநாள் சுயோதன ராஜனின் பத்தினியான பானுமதியும் நானும் தனிமையில் சொக்கட்டானாடிக்கொண்டிருந்தோம். அச்சமயம் துரியோதனராஜன் வந்தான். அவன் வருவதை நேராகப் பார்த்த பானுமதி ஆட்டத்தை விட்டு எழுந்திருக்க அரசன் வந்ததை அறியாத நான் தோற்பு கெலிப்பு பார்த்துவிட்டு எழுந்திருமென்று அறையிற் கட்டி இருந்த மேகலாபரணத்தைப்பற்றினேன். அந்தப் பட்டத்தரசி

வேகமாகப் போகும்போது, மேகலையறுந்து கலகல என்று உதிர்ந்து வஸ்திரமும் தளர்ந்தது. இந்த அலங்கோலத்தைப் பார்த்துக்கொண்டுவந்த அரசன் "அண்ணு!மேகலாபரண மணிகளைப்பொறுக்கவோ அல்லதுகோக்கவோ?" என்றுகேட்ட அந்த சாந்தமூர்த்திக்கு வஞ்சம்செய்து உம்முடைய பிள்ளை களுடன் வந்துசேரும்படி நீரழைப்பதும் நான்வருவதும் நியாயமா? தருமமா? நீரே சொல்லும்! மேலும் பகைமுற்றிப் பாண்டவர் சண்டைசெய்யக் காத்திருக்கும் இன்று, உமக்கு ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லக்கேட்டு அழைக்கிறீர். அன்றுமுதல் இன்றுவரை தாய், தந்தை, தெய்வம்போல இருந்து, சாதி குலம் சம்பத்தை உண்டாக்கி அன்னபானுதி ஆபரணங்களைக் கொடுத்து ஆதரித்த மன்னனை இந்த வேளையில் கைவிட்டு எப்படி வருவது? உமது சொல்லைத் தள்ளாமல் வருவேனுகில் சந்திர சூரியருள்ளவரை உலகம் பழிக்கும். நன்றிமறந்த பஞ்சமகாபாதகரில் நான் முந்தியிருப்பேன். என்னைச் சுமந்து பெற்ற உமக்கும் இழிவு உண்டாகும். அன்னையே! என்னை முன்னமே நம்பியிருக்கும் மன்னனுக்கு அவனிடத்திலுண்ட அன்னக்கடன் கழியும்படி மன்னவருடன் எதிர்த்து இக்நிலம் துதிக்க வானுலகிற் புகுவேனுகில் கன்னிகையாகிய உமது கர்ப்பத்தில் பிறந்த கர்ணனென்கிற வீரனுவேன். இப்போது சொல்கிற இந்த மர்மத்தை சில நாட்களுக்கு முன்பே சொல்லி இருந்தால், உமது மனத்திற்கு ஒப்பாக வந்துவிடுவேன். அப் போது சொல்லாமல் இப்போது வந்தபடியால் என் மனம் ஒப்பாது. அப்படி வந்தாலும் பாண்டவர்களின் தமையன் உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் துரோகியா? என்று யாவரும் தூற்றி இகழ்வார்கள், தாயே" என்று தேற்றினுன்.

மகனின் அபிப்ராயமறிந்த குந்திதேவி வாடி வருந்தி, மயங்கி, கண்கலங்கி 'கோ'வென்று வாய்விட்டழுவதைக்கண்டு தானும் தளர்ந்து, தாயைத் தழுவி, தைரியம் சொல்லி கவலை யகற்றி, "அம்மணி! இதுவெல்லாம் நம்செயலன்று; பிர மனின் கட்டளையன்றி வேறில்லை. தூர்ந்த கிணற்றைத் தூறு வாருபவரைப்போல தங்களை என்னிடம் அனுப்பிய தேவன் கருத்தென்ன? அதைச் சொல்லும்" என்றுன் கர்ணன்.

குந்திதேவி மிகுந்த துயரத்துடன் "அப்பா மகனே! என் இஷ்டப்படி உன் தம்பிமாருடன் கூடிவாழ என் கண்கள் கண்டு களிக்கவேண்டுமென்று எண்ணிவந்தேன். அதற்கு நீ, நீதியும் தருமமும் சொல்லி விலக்கியபடியால், காண்டவ வனத்தில் பகைத்துவந்து அசுவசேனன் என்ற நாகாஸ் திரத்தை நீ வளர்ப்பதாக அறிந்தேன். அந்தக் கணையை கிரீடிமேல் எப்படியும் தொடுக்கவே போகிறுய். அப்படி அவன்மேல் பிரயோகம் செய்தபோது தெய்வ பலத்தினுல் தப்பிப் பிழைப்பானுகில் மறுமுறை நாகாஸ்திரம் விடுவதில்லை என்று ஒருவரமும், அர்ஜுனன் தவிர மற்ற நால்வருடனும்

போர் முகத்தில் எதிர்க்கும்போது, அவர்களிடம் அன்பு பாராட்டி, கடுமையான யுத்தம் செய்யாமல் அவர்களுயிரைக் காக்கவேண்டியது உன் கடமை என்று மற்றொரு வரமும் கொடு" என்றாள்.

கர்ணன் முகமலர்ந்து "அம்மா நாளை நடக்கப்போகிற யுத்த காலத்தில் அர்ஜுனனும் நானும், எதிர்த்து பற்பல யுத்தங்களும் பண்ணிப்பார்த்து கடைசியில் நாகாஸ்திரம் விடப்போகிறேன். அது எப்படியும் அவன் தலையை வாங்கும்; அப்போது நீர் மனங்கலங்கவேண்டாம். ஒருவேளை தப்பி உயிர் பெறுவானாகில் திரும்பவும் நாகாஸ்திரம் விடேன். சுத்த வீரன் கையால் விடப்படும் கணைகள் சத்துருவைக் கொல்லாமல் விடாது. ஒரு வேளை லக்ஷியம் தப்பிப்போகுமாகில் மறுபடியும் விடுவது வீரமும் ஆண்மையும் தனுர்வேத தருமமும் இல்லை. மற்ற நாலு தம்பிமார்களையும் என் கையால் கொல்வதில்லை. அம்மா! தங்கள் மனம் திருப்தி அடைந்ததா? தாயே! எனக்கிரண்டு வரம் தாரும்" என்று வேண்டினான்.

குந்திதேவி, "அப்பா கர்ணா! உனக்கு வேண்டிய வரம் யாது?" என்றாள்.

கர்ணன் "என் தாயே! போர்க்களத்தில் அர்ஜுனன் கணையால் இறந்து விழுவேனாகில் உடனே தாங்களோடிவந்து என்மேல் விழுந்து அலறி அழுது நான் தங்கள் மைந்தன் என் பதை உலகமறியச் செய்வது ஒரு வரம்; அப்படிப்பட்ட முடிவு காலம் எனக்கு நேரிடும்வரை நான் தங்களுக்கு மூத்தமகன் என்றும் தாங்கள் என் தாய், பாண்டவர்கள் என் தம்பிகளென்ற மர்மத்தை மண்ணுலகில் ஒருவருக்கும் தெரிவிக்காமல் மனதில் வைக்கவேண்டியது மற்றொருவரம். ஒரு வேளை வெளிப்படுமாகில் பாண்டவர்கள் சண்டையைவிட்டு, சபதத்தையும் விட்டு, நாட்டை எனக்குக்கொடுத்துத் தாங்கள் காடு ஆளப் போய்விடுவார்கள். அப்படி எனக்கு நாட்டைக் கொடுத்தாலும், என் தோழனை துரியோதனனுக்குக் கொடுத்து விடுவேன். விரதமும் கெட்டு, சுகமும் விட்டுப்போவானேன்? ஆகவே, இப்போதிந்த மர்மம் வெளிவராமலிருக்கவேண்டும். இந்த இரண்டு வரமும் எனக்குத் தாரும் தாயே!" என்று இரு கரத்தையும் நீட்டி இரந்து கேழ்க்கும் கொடையாளனைக் கண்டு கண்ணும் மனமும் கலங்கிய குந்திதேவி 'உன் இஷ்டப் படி வரம் தந்தேன்" என்றாள். தன்னை வணங்கிய மகனைத் தழுவி விடைபெற்றுக்கொண்டு தன் எண்ணம் ஈடேறாது போன அளவுகடந்த ஏமாற்றம் துக்கம் கவலைகளை அடைந்தும் தன் மகனின் நெஞ்சந்தளரா நீதி ஒழுக்கத்தையும், நேர்மையையும் வீரத்தையும் எண்ணிஎண்ணிப் பூரித்து இன்பமும் துன்பமும் அடைந்தவளாகத் தன் அரண்மனைக்குக் கிளம்பினாள்.

பாண்டவர்களின் தூதாகவந்த கிருஷ்ணனுக்கு சபையில் படுகுழி வெட்டி அதில் தள்ள முயற்சித்தும், பலனில்லாது போனபோது, பல பெரியோர்கள் முன்பாக யுத்தத்தை நிச்சயித்துக்கொண்டு வெளிவருகையில் கபடநாடக சூத்திரதாரியான கண்ணன் கர்ணனைத் தனிமையில் அழைத்து அவன் பிறப்பின் மர்மத்தை விளக்கிக்கூறி பாண்டவர்களுடன் வந்து சேரும்படி கூறினர். கேட்பவர் மனம் கவரும்படி பேசுந் திறமை பெற்றவர்களில் முதன்மை ஸ்தானமுடைய கண்ணன், அதுவரை கர்ணன் அறியாதிருந்தஅவன்பிறப்பின் மர்மத்தை அறிவதின்மூலம் தாயின் அன்பு, இரத்த பாசமுடைய சகோதர வாஞ்சை, முதலியவைகளால் அவன் மனம் மாருதாஎன்று எவ்வளவோ எடுத்துச்சொன்ன பகவானின் வார்த்தைகளும் கர்ணன் நெஞ்சுறுதியைத் தளரச்செய்வதாக இல்லை.

தாயின் வாஞ்சையும் அவளுடைய அன்பு மிகுந்த உருக்கமான வேண்டுகோளுமாவது அவன் மனதில் பாசத்தை உண்டாக்கும் என்றெண்ணி குந்திதேவியை அனுப்பினர். ஆனுல், தன் உடல் பொருள் ஆவி, மூன்றையும்விடக் கடமை ஒன்றையே பெரிதாக மதித்த அந்த வீரச்ரேஷ்டனின் நெஞ்சுறுதியையோ, எத்தகைய உணர்ச்சியும் கலங்கவோ தளரவோ செய்யவில்லை. அக்ஞானத்தைவென்று முற்றும் துறந்த முனிவர்களைப்போன்ற ஞான நிலையை அடைந்து கடமையையே தன் லக்ஷியமாகக் கொண்டான் அந்த கர்ம வீரன்.

பாரதப் போர்முனையில் ஆசாரிய பந்து மித்திரர்களைக் கண்ட சமயம் மஹா வீரனுன அர்ஜுனனும் அக்ஞானமென்ற போர்வையால் மூடப்பட்டவனுனபோது கிருஷ்ணபகவான் கீதோபதேசம்என்ற பொன்மொழிகளால் அவன்மனதில் திரையிட்டிருந்த அக்ஞானத்தைக் களைந்து ஞானத்தையும் கடமையையும் போதித்தார். பரசுராமரின் சாபம் முதலிய பல காரணங்களால் கர்ணன் போரில் வெற்றிபெற முடியாவிட்டாலும், ஆசாபாசத்தை வென்று சிறந்த க்ஞானியாகவிளங்கிக் கடமையில் வெற்றிபெற்றுவிட்டான் அக்கொடையாளி வீரன்!

யோகி சுத்தானந்த பாரதியார்
இயற்றிய
காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரு. 3—8—0.
உயரிய கிளேஸ் புதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
டி பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பள நிதிக்கே!

"உலகவிந்தை என்கிற சிறந்த புத்தகத்தை விமலா படித்ததுமுதல் அவளுடைய ஆசைப்புயல் பெரும் சூராவளிபோல் இதயத்தில் சுழற்றி அடித்துக்கொண்டிருக்கிற மர்மம் அவள் கணவன் விச்வத்திற்குக்கூடத் தெரியாது பாவம்! அப்படி மறைத்துத்தான்வருகிறாள். இருப்பினும் இதே சமயத்தில் அவளுடைய அழகும் ஆர்வமும் குன்றிப்போகிறதா! என்ன செய்வது?" என்று சுலோசனா அங்கலாய்ப்புடன் சொன்னாள்.

32
183166.

இதைக் கேட்ட அம்மு, "ஆமாம். நானும் பார்த்தேன், நம்முடைய லேடீஸ் க்ளப்பில் வந்துசேர்ந்தால் எத்தனை சந்தோஷமாயிருக்கும்! பார்ப்பதற்கு அழகாய் சுறுசுறுப்பாய் தந்த பொம்மைபோலிருக்கிருள்; அதற்குத் தகுந்த அந்தஸ்து தான் இல்லை" என்ருள்.

சுமதி:—ஆமாம்! இம்மாதிரி அழகைப்பார்த்துக்கொண்டு இவளை நம் க்ளப்பில் சேர்த்துக்கொண்டுவிட்டால்மட்டும் போதுமா? புதிய புதிய அழகிய உடைகளும் நாகரீகச் சின்னங்களும் இல்லாமல் கர்னாடக மடிசார் புடவையுடன் வந்து நின்ருல் நம் அங்கத்தினர்கள் சிரிக்கமாட்டார்களா? ஏதோ அழகும் அத்புதமான பாட்டும் இருப்பதால் அவளிடம் நம் கமிட்டி அங்கத்தினரான கலாதேவிக்குக்கூட சற்று மவுஸு தான். இருந்தாலும் வெறும் தரித்திரமல்லவா?

பானுமதி:—சுமதி! அப்படிச் சொல்லாதே. நாமெல்லாம் என்ன கோடி ஐச்வர்யக்காரர்களா! சடக்கென்று எடுத்துக் கவிழ்த்தமாதிரி பேசக்கூடாது. நமது க்ளப்பில் இப்போது மெம்பராகியுள்ளவர்கள் எல்லோரும் ப்ரமாத லக்ஷாதிபதி களோ! நாகரீகத்திலும் ஆடம்பரத்திலும் தடபுடலாக இருப்பதைத்தவிர சிலருக்கு ஜவுளிக்கடையில் எத்தனை கடன் இருக்கிறது தெரியுமா?...

சுபத்ரா:—சரி! சரி! இப்போது யாருக்குக் கடன், யாருக்கு வாரண்டு என்பதைப் பற்றி நாம் பேசவேண்டாம். இப்போது நாம் காந்திஜெயந்தி விழாவை எப்படிக்கொண்டாடுவது? என்பதைப்பற்றிப் பேசக் கூடியிருப்பதை மறந்து விடவேண்டாம்.

சுலோ:—அதைப் பேசுவதற்குத்தான் நானும் ஆரம்பித்தேன். அன்று முதலில் ப்ரார்த்தனை-கீதம் பாடுவதற்கு விமலாவைக் கூப்பிடலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

தங்கமணி:- ஐயைய!..விமலாவைக் கூப்பிடுவதா? பெரிய படே மனுஷியோன்னே! அந்த தம்படிச் சில்லரை ஒன்றும் வேண்டாம். சங்கீத சண்டமாருததேவி அம்ஸாவைக் கூப்பிட்டுக் கம்பீரமாகப் பாடச்சொல்வதைவிட்டு ஏதோ ஒரு சுண்டக்காயைக் கூப்பிடுவதாம்! எனக்குப் பிடிக்கவில்லை.

பார்வதி:—எனக்குக்கூட பிடிக்கவில்லை. நம் க்ளப்பின் கவுரவத்திற்குத்தகுந்தபடி பாடகிகள், ப்ரஸங்கிகள், தலைமை வகிப்பவர்கள் இருக்கவேண்டாமா! குமாஸ்தாவின் மனைவியும் சமையல்காரனின் மனைவியும் கறிகாய் கடைக்காரன்... பஞ்சாங்கததான்... பட்டாச்சாரி—என்று பேசுவதைக் கேட்டு எல்லோரும் கலகலவென்று சிரித்து "பேஷ்! பார்வதி, சபாஷ்! கண்ணியமும் பெருமையும் இல்லாவிட்டால் நம் நாகரீக க்ளப்பிற்கு மதிப்பு குறைந்துவிடாதா!"......

என்று பேசுகையில் க்ளப்பின் தலைவி ஸ்ரீமதி மோகன ராணி வெகு ஒய்யாரமாய் தனது ப்ரத்யேக ஷோக் நடை நடந்தவாறு புன்சிரிப்புடன் கையில் பந்தாட்டபேட்டை ஆட்டிக்கொண்டு வந்தாள்... அவளுடன் கூடவே வெகு அடக்கமாய் மிகவும் அமரிக்கையாக விமலாவும் வருவதைப்பார்த்த அங்குள்ளவர்கள் மிகுந்த வியப்படைந்து ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு தலைவியை வரவேற்ருர்கள்.

மோகனராணி:—சகோதரிகளே! இந்தம்மாளை உங்களுக்குத் தெரியுமா? வெகு அத்புதமாய்ப் பாடுகிருள் என்று என் மகள் சொன்னுள். அவளுடைய பள்ளிக்கூடத்தில் ஏதோ விழாவுக்குப் பாடினுளாம். அங்கு கேட்டதுமுதல் தினம் சொல்கிருள். அதனுல் நம்ம க்ளப்பில் பாடச்சொல்லலாம் என்று அழைத்துவந்தேன். காந்திவிழாவன்று ஒரு சான்ஸ் கொடுக்கலாமே...என்ருள்.

தலைவியே பேசிவிட்டபிறகு இனி அப்பீல் ஏது? அன்று எல்லோரும் கேட்டு மகிழ்வதற்காக இரண்டு பாட்டுக்கள் பாடச்செய்தார்கள். உண்மையில் அந்த சங்கீதத்தின் இன்பத்தைக் கேட்டுப் பூரித்தார்கள்.

ஏழை விமலாவுக்கு இந்த நாகரீக க்ளப்பின் தடபுடல் கட்டிடத்தையும் நவநவமான அலங்காரங்களையும் க்ரோடன்ஸூம், இதர புஷ்பத் தொட்டிகளும், கொடிகள் செடிகள் படர்ந்துள்ள விசித்ரக் காட்சிகளையும், அதற்கு ஜோடியாய் தூக்கியடிப்பதுபோன்ற நாகரீக அலங்கார யுவதிகளையும் பார்க்கப்பார்க்க "சீச்சீ! நாம் என்னவாழ்க்கைவாழ்கிருேம்! எலிப்பொந்தில் இருப்பதுபோல் ஒரு வீடு—அதில் இருபது குடித்தன அடசலும் அசுத்தமும்; 50ரூபாய்சம்பளத்தில் அரை வயிறும் நிறம்பாத பாதிபட்டினி வாழ்வும்... தூத்து! இதொரு ஜென்மமா? உலகவிந்தையைப் படித்த நாள்முதல் ஆசைப்புயலில் அலையும் உள்ளம் இந்த சொர்க்கபோகத்தைப் பார்த்ததும் என்னையறியாத ஆசை சூழ்ந்துகொண்டு ஆட்டுகிறதே!... இவர்களும் நம்போன்ற பெண்கள்தானே... சரளமாய் ஆங்கிலம் பேசுகிருர்கள்! நாமும் இருக்கிருேமே!...

என்ற எண்ணற்ற எண்ணங்கள் அலைமோதிமோதிப் புரண்டு உடைந்து அவளை வருத்தின. "ஏம்மா! இந்த நாகரீக க்ளப்பில் சேருவதெனருல் என்ன சந்தா கட்டவேண்டும்?" என்று மிக்க அடக்கத்துடன் கேட்டாள். இதைக் கேட்ட சிலர் அலட்சியமாக கடகட வென்று சிரித்தார்கள். ஒருத்திமட்டும் சிரிப்பை அடக்கிக்கொண்டு, "இதில் முதல்முதல் சேருவதற்கு ப்ரவேசகட்டணம் 25 ரூபாய் கட்டவேண்டும். பிறகு வருஷச் சந்தா 50 ரூபாய்; அதைத் தவிர டென்னீஸ், பேட்மிண்டன், பிங்பாங்...முதலிய ஆட்டங்களுக்கு மாதம் 15 ரூபாய். ஜீவியச்சந்தா தாரர்களாகச்சேர்கிறவர்கள் ஆயிரம்

ரூபாய் கட்டினால் போதும்" என்று சொல்வதைக் கேட்டதும் இன்னதென்று விவரமே புரியாமல் விமலா அப்படியே தம் பித்து நின்றுவிட்டாள்.

எனினும் அவளுள்ளத்தில் ஏற்கெனவே கொந்தளித்துக் கொண்டிருந்த ஆசை இங்கு நேரில் பார்த்ததும் ப்ரமாத மாய்ப் பொங்கிவிட்டது. எல்லோரும் பந்தாட்டங்கள் கேரம் முதலியவைகளை உத்ஸாகமாய் நிர்விசாரமாய் ஆடுவதைப் பார்த்து மிகுந்த ஆச்சரியமடைந்து பொழுதுபோவது தெரியாமல் போய்விட்டது. மணியைப் பார்த்தால் 7 அடிக்கும் சமயமாகிவிட்டது கண்டு "நான் போகவேண்டுமே...குழந்தை அழும்....அவர் ஆபீஸிலிருந்து வந்துவிடுவார்" என்றாள்.

மோகனராணி பந்தாடி முடிந்தபிறகு "சரி...போய் வா! காந்திஜெயந்தியன்று நீ வந்து கொஞ்சநேரம் பாடு." என்று சொல்லியனுப்பிவிட்டாள். விமலாவும் விடைபெற்றுக்கொண்டு வந்தாள். தனக்கும் இத்தகைய உத்ஸாக வாழ்வு நடத்தும் நல்லகாலம் வருமா? நாமும் இப்படி விசாரமற்று இன்பமாக இருப்போமா?...என்கிற பெரிய ஆசை குடிகொண்டு ஏங்கச் செய்தது.

2

சுமார் 150 அடி நீளமும் 30 அடி அகலமும் உள்ள ஒரு வீட்டில் ஒரு சமயல் அறையும் அதை ஒட்டியதுபோலவே இருக்கும் மற்றொரு அறையும் விமலா வைத்துக்கொண்டிருக்கிறாள். அடுப்பு புகைக்தால் அத்தனையும் முன்னறைக்கு லைஸன்ஸ் வாங்காமலேயே முற்றுகை இட்டுக்கொண்டு கண்களைப் பரிசோதித்து நீரைக் கக்கச்செய்யும்.

அவரவர்கள் வீட்டுப் புகைமட்டுமானால் சொல்லலாம். அந்த வீட்டில் விமலாவைத் தவிர சுமார் 20 குடித்தனம் இருக்கிறார்கள். ஒவ்வொரு குடித்தனத்திலும் குறைந்தது தசாவதார ஆத்மாக்களாவது இருந்தார்கள். இத்தனை நாள் விமலா இதே இடத்தில் இருப்பது சகஜமாகவும் அதில் ஒரு வித்யாஸமும் இல்லாதிருந்த மனோபாவம் இன்று நாகரீக க்ளப்பிலிருந்து வீட்டில் நுழையும்போது வசவசவென்று மனிதர்களின் நடமாட்டமும் இரைந்துபேசும் சத்தமும் குழந்தைகள் காச்சுமூச்சென்று கத்தும் ஆர்ப்பாட்டமும் இவளுக்குப் பெரிய தலைவேதனையாகத் தோன்றியது. அதனால் முகம் சுளித்தது. தனக்கும் அந்தஸ்தும் ஐச்வர்யமும் வந்து, தானும் அந்த நாகரீக க்ளப்பில் அங்கத்தினராகிவிட்டதாக மனத்தில் தோன்றிவிட்டது. தன்வீடும் சாமானும் வாழ்வும் சகலமும் அவளுக்கு மிகவும் இளப்பமாகத் தோன்றியது. இதே யோசனையுடன் மெஷின்போல் வேலை செய்துவந்தாள்.

தினத்தைவிட அதிகமான நேரமாகிவிட்டது. இன்னும் கணவன் வராததால் சற்று கவலையும் உண்டாகி வாசலுக்கும் உள்ளுக்குமாக வழிபார்த்திருந்தாள். குழந்தைகளுக்கு ஆகாரம் ஊட்டித் தூங்கச் செய்துவிட்டு வாசலில் வந்து வழிபார்த்தாள். இரவு 9 மணிக்கு மிகவும் சோர்ந்து போய்க் களைப்புடன் 'அப்பாடா' என்று விச்வம் வந்து கயிற்றுக் கட்டிலில் படுத்தான்.

வந்த உடனே படுத்துவிட்டதால் விமலா சற்று பயந்தவளாய் ஓடிவந்து உடம்பைத் தொட்டுப்பார்த்தாள். "அப்பாடா! ஜுரம் வந்துவிட்டதோ என்று நடுங்கிவிட்டேன். ஏன் இத்தனை நேரம்? இந்த அழகான உத்தியோகத்திற்கும் சம்பளத்திற்கும் மணிக்கணக்காக வேலைசெய்து பாதிராத்ரியில் வந்து அகால போஜனம் செய்தால் உடம்பு எதற்காகும்? வீடோ, கேட்கவேண்டாம்...டெஞ்சன் என்றால் தகும்! இந்த லக்ஷணத்தில் உடம்பு எதற்கு உதவும்? ஏன் இத்தனை களைப்பு? எங்காவது நடந்துசென்றீர்களா?" என்றாள். அனுதாபத்துடன் கேட்டவாறே அவன் வெயர்வையைத் துடைத்துச் சொக்காயைக் கழற்றினாள்.

"இதென்ன வேலையோ! என்ன பிழைப்போ! எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை விமலா! என்னுடன்கூட படித்த நண்பர்கள் சிலர் சொந்தத்தில் வ்யாபாரம் செய்ய ஆரம்பித்து நிம்மதியாய் உத்ஸாகமாயிருக்கிறார்கள். க்ளப்பென்ன, பீச் சென்ன, லைப்ரரி என்ன என்று குஷியாகச் சுற்றுவதைப்பார்த்தால் என் பிழைப்பு ஒரு பிழைப்பா என்று வெறுப்பாக இருக்கிறது. காலை 8 மணிக்குப் போனால் இரவு 8 மணிக்கு வந்து பக்ஷி கூண்டிலடைபடுவதுபோல் அடைந்துவிடுவதும் திரும்ப ஓடுவதும் இதென்ன வாழ்க்கை!" என்று ஒரு பெரிய மூச்சை விட்டவாறு சலிப்புடன் கூறினான்.

"வாஸ்தவம்! பக்ஷிகள் கூண்டு வெட்டவெளியிலிருப்பதால் ஆரோக்யத்திற்குக் குறைவில்லை. அவைகளுக்கு இதர குடித்தனக்காரர்களின் தொந்தரவும் உபத்திரவமும் இல்லை. நம் கதியை நினைத்தால் பக்ஷிகள் எத்தனையோ பங்கு தேவலை. இன்று ஸ்ரீமதி மோகனராணியம்மாள் என்னை நாகரீக க்ளப்புக்கு அழைத்துச் சென்றிருந்தார்கள். அடாடாடா! அந்த ஆனந்த வாழ்க்கையை என்னென்று சொல்வேன்! கட்டிடத்தின் அழகும் செடிகொடிகளும்நிறைந்து நந்தவனம்போல் மிக உத்ஸாகமாக இருக்கிறது. அங்கு வந்துள்ள பெண்கள்தான் என்ன குஷியாய் கவலையற்றநிலைமையில் ஓடி ஆடிக் குதித்துப் பந்தாடி விளையாடுகிறார்கள் தெரியுமா? அதைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆசை அடித்துக்கொள்கிறது. நானும் அங்கு இன்று பாடினேன். என்னையும் அறியாது வெகு நன்றாகப் பாட்டு வந்தது. அத்தகைய கலை தரித்திர வாழ்க்

கையின்மூலம் ப்ரகாசமில்லாது பாழாகிவிடுகிறது. இந்த நிலைமை என்றுதான் மாறி நம் மனம்போல நடக்கும்!" என்று மனம் நொந்து படபடத்துப் பேசினுள்.

விச்:—எனக்குக்கூட மிகவும் வெறுப்பாகத்தான் இருக்கிறது. என்ன செய்வேன்? உன்னுடைய சங்கீதம் எத்தனையோ உயர்வாக ப்ரகாசிக்கவேண்டியதை தரித்திரமல்லவா தடுக்கிறது. "ஒன்றுமில்லாத அபஸ்வரக்குடுக்கைளெல்லாம் ரேடியோவில் அலறுஅலறு என்று அலறுகின்றதே! உன் மனைவியின் உன்னத சங்கீதத்தை ஏன் ப்ரகாசமடையச் செய்யக்கூடாது?" என்று என் சினேகிதர்கள்கூட கேட்கிருர்கள். நமக்கு எந்த முறையிலும் செல்வாக்குமில்லை; சகாயமும் இல்லை. எல்லாம் காலத்தின் கோலம்—என்று சலித்துக் கொண்டான்.

இரவு முழுவதும் தம்பதிகள் தூங்கவே இல்லை.விமலாவுக்கு க்ளப்பு நினைவாகவே இருக்கிறது. விச்வத்திற்கு வேறு எந்த வழியில் வாழ்க்கைப் படகைத் திருப்பலாம். காலணு காசு கூடகிடைக்கும் என்ற நினைப்பிலேயே எண்ணுததும் எண்ணி ஏங்கினுன்.

மறுநாள் காலை சமையலுக்கு ப்ரதானமான அரிசியில்லை. அதை வாங்க அதற்கும் முக்ய ப்ராணனுன பணமில்லை. பாவம்! விமலா கண்கலங்கியவாறு பக்கத்து அறையில் குடியிருப்பவளிடம்"அரைப்படி அரிசி கடன் கொடுங்கள்; நாளைய தினம் பணம் வந்துவிடும்; அதை வாங்கி முதலில் கொடுத்து விடுகிறேன்." என்ருள்.

குடித்தனக்காரி ஏளனமாய்த் தூக்கிக் கவிழ்த்ததுபோல் பேசுகையில் விமலாவுக்குக் கண்ணீர் புலபுலவென்று வந்து விட்டது. அதே சமயம் விச்வம் வீதித் திண்ணையில் உட்கார்ந்து பத்ரிகைப் படித்துக்கொண்டிருந்தான். என்ன ஆச்சரியம்! பத்திரிக்கையில் வந்திருந்த ஒரு செய்தி இவன் கண்களைக் கவர்ந்தது. அதைத் திரும்பத்திரும்பப் படித்தான். தலைதெறிக்க ஓட்டமாக விமலாவைக் கூப்பிட்டுக் கொண்டே வந்த விச்வத்தின் குரல்கேட்டு ஓடிவந்த விமலா "என்ன? என்ன சமாச்சாரம்? வேறு எங்காவது வேலை காலியிருக்கிறதா? சம்பளம் எத்தனையாம்? சொல்லுங்கள்" என்று பதறியவாறு கேட்டாள்.

விச்வம் அபரிதமான சந்தோஷத்துடன் "விமலா! முதலில் கதவைச் சாத்து...இப்படி வா...இதோ பத்ரிகையில் ஒரு விளம்பரம் வந்திருக்கிறது. இதைக் கவனித்துப் பாரு" என்று குறிப்பிட்டுக் காட்டினுன். விவரமே புரியாதவாறு எதிர்பார்ப்புடன் பத்ரிகையைப் பார்த்தாள்.

முக்ய அறிவிப்பு

தென்னஞ்சோலை என்கிற க்ராமத்தின் மிராசுதாரர்—கோவிந்தராஜரின் புதல்வன்--தனபாலன் அறிவிப்பதாவது:- ஏதோ என் போதாத காலக் கொடுமையினால் நான் சிறு பிராயத்திலேயே ஓடிவிட்டேன். பல வருடங்கள் பல தேசங்களைச் சுற்றி பெரிய வ்யாபாரத்தைச்செய்து லக்ஷக்கணக்கான பணத்தைச் சேர்த்துவிட்டேன். தற்போது எனக்கு நான் பிறந்த தாய்நாட்டிற்கு வரவேண்டும் என்கிற ஆசையால் வந்துவிட்டேன். என் சகோதரி செல்லம்மாளை வாரிஜாக்ஷபுரி வாஸ-ஸ்ரீதேவருக்கு விவாகம்செய்துகொடுத்ததுவரை,தான் எனக்குத் தெரியும். பிறகு அவர்களுக்கு எத்தனை குழந்தைகள்? எங்கிருக்கிறார்கள்? என் பெற்றோர்கள் என்ன வானார்கள்? என்பது ஒன்றுமே எனக்குத் தெரியவில்லை. என்னைச் சேர்ந்த மற்ற இதர பந்துக்களும் சுற்றத்தாரும் எங்கிருக்கிறார்கள் என்பதையும் நான் அறியமாட்டேன். ஒரு வேளை என் சகோதரி உயிருடன் இருந்தால் அல்லது அவள் வயிற்றில் பிறந்த குழந்தைகள் இருந்தால் தக்க ருஜு-வுடன் கீழே காணும் விலாஸத்திற்கு வந்து காணவும். மற்றவை நேரில்.

விலாஸம்: தங்கபவன்.
பவுன் பேட்டை

இங்ஙனம்,
தனபாலன்

இதைப் படித்த உடனே விமலா தன்னை மறந்து 'தக்கத்தை' என்று குதித்தாள். பேசத்தெரியாமல் சந்தோஷத்தினால் இன்னது செய்வது, பேசுவது என்பதை மறந்து கூத்தாடுகிறாள். "கட்டாயம் இவர் எங்க மாமாதான். எங்கம்மா,தாதா,பாட்டி,அடிக்கடி சொல்லுவார்கள். "அவன் எங்கோ ஓடிவிட்டான். இருக்கிறானோ? இறந்துவிட்டானோ?" என்று சதா கண்ணீர் விடுவார்கள். அவரேதான் இவர்; என்ன ஆச்சரியம்! இப்படி யொரு நல்லகாலம் திடீரென்று பிறக்கும் என்று சொப்பனங்கூட காணவில்லை. நாம் தாமதமே செய்யாமல் திடீரென்று இப்போது அங்கு போகவேண்டும். என் தாதா, பாட்டி, அம்மா, மாமா முதலியவர்களின் புகைப்படங்களை எடுத்துக்கொண்டுபோய் அவருக்கு ருஜு-ப்படுத்தவேண்டும். 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்' என்பார்களே; அதுபோல் இப்போது நமக்கு நல்லகாலம் பிறந்துவிட்டது" என்று அபரிதமான சந்தோஷத்துடன் குதிக்கும் குதிப்பில் அன்று சமயலுக்கு அரிசி இல்லையே என்பதை அடியோடு மறந்தாள். தம்பதிகளிடையே எங்குமில்லாத புத்துணர்ச்சி குடிகொண்டது.

3

காலை எட்டுமணி சுமாரிருக்கும். எங்கும் ஊதுவத்தியின் பரிமளம் குமுகுமு என்று வீசுகிறது. பகவானின் படங்களை வெகு அலங்காரத்துடன் எழுந்தருளச்செய்து தனபாலன் மிகவும் பக்திச்ரத்தையுடன் பாடியவாறு பூஜை செய்துகொண்டிருந்தார். வீதியில் ஆணும் பெண்ணுமாக ஒரு பட்டாளம் பேர் நின்றுகொண்டிருந்தார்கள். ஒருவரையொருவர் அறியமாட்டார்கள். ஆனால், வந்திருக்கும் அத்தனை பேர்களும் ஒரே கருத்துடன் ஒரே காரியமாகத் தான் வந்திருக்கிறார்கள். "அடாடாடா! என்ன பக்தி! என்ன ச்ரத்தை! அந்த மனிதரின் குணத்தை நீங்களறியமாட்டீர்கள் ஸார்! அத்தனை உத்தமர்! இவரை யார் என்று நினைத்தீர்கள். எனக்கு சொந்த சித்தப்பாவாகணும். இந்த அன்புப் பிறப்பைப் பிரிந்திருந்தபோது எங்கப்பாவும் அம்மாவும் என்னமாய்த் துடித்தார்கள் தெரியுமா?" என்றார் ஒருவர்.

"அடேடே! தனபாலருக்கு நீங்களும் சொந்தமா! இதோ பாருங்கோ அவருடைய தாயாரின் கூடப்பிறந்தவள் என் தாயார். தன் சகோதரியின் மகனைக் காணவில்லையே என்று அழுதிருக்கிறார்கள் பாருங்கள்! அப்படிக் கண்ணீர் விட்டுக் கலங்கிவிட்டார்கள்! இப்போது அவர்களிருந்தால் எத்தனை சந்தோஷப்படுவார்கள் என்று நினைக்கையில் துக்கந் துக்கமாய் வருகிறது" என்று அழுதுவிட்டாள் ஒரு அம்மாள்.

"அடாடா! நாம் எல்லோரும் ஏறக்குறைய உறவு முறைக்கே வந்துவிடுவோம் போலிருக்கிறதே. 'இவர் என்னுடைய சாக்ஷாத் அம்மாஞ்சியின் பேரன் காணும். இவரைப் பற்றி எங்கப்பா ப்ரதி தினமும் சொல்லாமலிருக்கவே மாட்டார். ஏதோ க்ரகபலன் கோளாறாயிருந்ததால்தான் அவர் இப்படி மறைந்திருக்கிறார் என்று எங்க தாதா தினம் சொல்லுவார்" என்று ஒருவர் பேசுவதற்குள், ஒரு அம்மாள்முன்னே வந்து, "இதோ பாருங்கள்! இவர் எங்க மாமியாருடைய மைத்துனரின் மாமனாருக்கு அத்தானுடைய மைத்துனியின் நாத்தனார் மாட்டுப்பெண்ணின் பெரியம்மாவுக்கு அத்தங்காருடைய மகன், தெரியுமா? எங்க தாதா மகா பண்டிதர். ஜோஸியத்திலே நிபுணர். இவர் காணாதுபோன உடனேயே எங்க தாதா சொல்லிவிட்டார்...என்ன சொன்னார் தெரியுமோ! இவனுக்குத் தற்போது சனி போராது. கேது வேறு இருக்கிறான். இருவரும் சேர்ந்து பிரித்துவிட்டார்கள். ஆனால், ப்ராண பயமில்லை. இன்னும் பல வருஷங்கள் கழித்து குபேரனாக வரப்போகிறான். அவனால் பலபேர் பிழைக்கப் போகிறார்கள்! என்று எழுதிவைத்தார். இப்ப பாருங்கோ! அது நிச்சயமாயிடுத்து. ஏதோ! நான் பத்து பசங்களுடன் பெரிய சம்ஸாரியாய்த் திண்டாடுகிறேன். இவருக்கு இன்னிக்கெல்லாம் இருந்தால் விடியவிடிய 50 வயதிருக்கும். இவருக்கு

இப்போது மனைவி இல்லையென்று தெரிகிறது... அதனால் என் மூத்த பெண்ணையே கொடுத்துவிடலாமென்று நினைக்கிறேன்'' என்று தன் மனத்தைத் திறந்து பட்டவர்த்தனமாய்ச் சொன்னாள்.

இதைக் கேட்ட மற்றவர்கள் ஒருவர் முகத்தை யொருவர் பார்க்கிறார்கள். இதைவிட விசித்திரமாக ஒருத்தி சுமார் 30 வயதுடையவள் வந்துசேர்ந்தாள்...''ஓ! தனபாலரைப் பார்க்கவா நீங்கள் வந்திருக்கிறீர்கள்? மிக்க சந்தோஷம். அவருடைய சொந்த சகோதரியின் மகள் நான்; பத்ரிகையில் கண்டிருந்தபடி நானே பூராவும் வார்ஸுதாரி. அதோடு நானே அவரை மணந்துகொள்வதாகக் கடிதமும் முன்பே எழுதியாகிவிட்டதே. தயவுசெய்து நீங்கள் இப்படிக் கும்பல் கூடி அவரைத் தொந்திரவு செய்யாதீர்கள்''...

என்று கூறும்போது ஒரே சளசளப்பான பேச்சும் சத்தமும் உண்டாகியது. உள்ளிருந்து வேலைக்காரன் வந்து இந்தப் பெருங்கூட்டத்தைப் பார்த்து...''இதென்ன இரைச்சல். உள்ளே எஜமான் பூஜைசெய்வதும் பாடுவதும் உங்கள் காதில் விழவில்லையா? சளசளவென்று பேசி வீண்கலாட்டா செய்கிறீர்களே. நீங்கள் யாரு? யாசகத்திற்கு வந்தவர்களா?''...என்றான்.

எல்லோருக்கும் கோபம் வந்துவிட்டது. ''என்ன! யாசகத்திற்கு வரும் பிச்சைக்காரர்கள் என்றா நினைத்துவிட்டீர்கள்? பேஷ்! நாங்கள் ஸ்ரீமான் தனபாலனின் சொந்த பந்துக்கள். அவரைப் பிரிந்திருந்த நாள் முதல் தவியாய்த் தவிக்கும் ஆத்ம அன்பர்கள். அவரைப் பார்க்க ஆவலாய் ஓடிவந்திருக்கிறோம். வீணாகப் பேசாதே. அவரிடத்திலுள்ள ஆர்வத்தினால் பேசுகிறோமப்பா. கத்தவில்லை. எப்போது அவரைப்பார்க்கலாம்...சற்று கதவைத் திறந்துவிடேன். பூஜை செய்வதைப் பார்க்கலாம்''...என்றார்கள்.

வேலை:—எப்படிப்பட்டவர்களையும் அவர் பூஜைசெய்யும் போது உள்ளே விடமாட்டார்கள். நீங்கள் அதோ அந்த அறையில் உட்கார்ந்திருங்கள். அவர் வந்ததும் வரலாம்...

ஒருத்தி:—ஏம்பா! நீ அவருடன் கூடவே இருக்கும் வேலைக்காரனா?...அவருக்கு எத்தனை குழந்தைகள்?

இன்னொருத்தி:—ஏம்பா! அவருக்குக் கல்யாணமே ஆகவில்லையே?

இப்படி ஆளுக்கொன்றாகக் கேள்விகள் கேட்டதில் வேலைக்காரன் பதிலே சொல்லாமல் ஓடிவிட்டான். வேலைக்காரன் காட்டிய விடுதியில் எல்லோரும் ரயில்வே ஜங்க்ஷனில் உட்கார்ந்திருப்பதுபோல் உட்கார்ந்தார்கள்.

தனபால் பூஜைகள் மும்முரமாக நடத்திவிட்டுக் கற்பூர ஆரத்தி எடுத்தார். பிறகு ''மாணிக்கம்! ப்ரஸாதம் இந்தா''

என்று கூப்பிட்டார். உடனே வேலைக்காரன் ஓடிவந்து நமஸ்காரம் செய்துவிட்டு ப்ரஸாதம்பெற்றுக்கொண்டு."எஜமான்! நீங்க சொன்னது சரியாப்போச்சுங்க. அடேயப்பா! தேர்க் கூட்டம் திருநாள் கூட்டமாய் ஜனம் வந்து கூடியிருக்காங்க. எஜமான்...அவங்கல்லாம் உங்க சொந்தக்காரர்களாம். என்ன சளசளன்னு பேசிக்கிராங்க, தெரியுமா? அவங்களை எல்லாம் அதோ அந்த ரூமிலே உட்காரவைத்திருக்கிறேன்'' என்றான்.

தனபாலன் பெரிதாகச் சிரித்துக்கொண்டே "மாணிக்கம் இந்த வேடிக்கைகளைப் பார்க்க நீ ஆசைப்பட்டாயில்லையா? நன்றாகப் பாரு. ப்ரபஞ்சலீலைகளின் விநோதங்களை படம் பார்ப்பதுபோல் பார்க்கலாம். சரி! அவர்களைக் கூப்பிடு; வரட்டும்'' என்றார்.

அவ்வளவுதான்! ஒரே மடைதிறந்ததுபோல் தடதட வென்று எல்லோரும்வந்து"நமஸ்காரம்,...மாமா!...அத்தான் ...சித்தப்பா...அம்மாஞ்சி.. தாதா. .அத்திம்பேர் ..என்று யார் யாருக்கு எந்த உறவின்முறை வாயில்வந்ததோ அப்படிக் கூப்பிட்டுக்கொண்டுவந்து அவரைச் சுற்றிக்கொண்டார்கள். சவுக்யமா...உங்களை மறுபடியும் பார்க்கப்போகிறோமா...என்று ஏங்கி உருகித் தவித்துவிட்டோம்...எங்க தாதா உங்க நினைவாகவே புலம்பி உயிரைவிட்டார்...எங்கம்மா சதா உங்கள் பேச்சேபேசி கடைசிமூச்சை நிறுத்தினாள்''...என்று பெரிதாக அழுவே கிளம்பிவிட்டார், ஒருவர்.

இப்படி மூச்சுத் திணறும்படியும் காது செவிடாகிவிடும் படியும் கத்திப்பேசித் தமது உணர்ச்சியைத் தெரிவிக்கும் தடபுடலில் தனபால் திக்குமுக்காடிவிட்டார்..."கொஞ்சம் இருங்கள்; ஐயையோ! சற்று விலகிநின்று பேசுங்கள். நான் மனிதன்தான், புளிமூட்டை இல்லை'' என்று கத்தினார். இதற்குள் மாணிக்கம் சிரித்தபடியே இவர்களை விலக்கிச் சமாதானப்படுத்தி உட்காரவைத்தான்.

எல்லோரும் கூச்சல் அடங்கிக் கீழே உட்கார்ந்தார்கள். தனபாலன் மிகுந்த சாந்தியுடன் "அப்பாடா!'' என்று சரியானபடி மூச்சுவிட்டுக்கொண்டு..."வாருங்கள், என் ஆப்த பந்துக்களே! உங்களை எல்லாம் பார்க்காமல் நான் எப்படித் தான் தவித்தேன் தெரியுமா? இந்த காலமும் வரப்போகிறதா என்று ஏங்கினேன்...உங்கம்மா பேர் நீலாம்பாள்தானே. அவளும் நானும் சண்டைபோட்டுக்கொண்டு விளையாடுவோம்.. நீ அவள் மகன்தானே..என்று ஒருவரை இழுத்துக்கேட்டார்.

அந்த மனிதன் முதலில் திக்குமுக்காடிவிட்டான்...பிறகு அசடு வழிய...ஆமாமாம்..."நீலாம்பாளின் மகன்தான்''என்பதற்குள், கூட்டத்திலிருக்கும் மற்றொருவன், "ஏண்டா! உங்கம்மாவின் பெயர் சுப்பலக்ஷ்மியில்லையா? ஏன் புளுகுகிறாய்?'' என்றான்... அந்த மனிதன் சிறிது அசடுவழியத்

தலையைச்சொரிந்துகொண்டு...ஆமாமாம்...சுப்பலக்ஷிமி தான் என்று விழிக்கையில் "தாயார்வீட்டில் நீலாம்பாள், மாமியார் வீட்டில் சுப்பலக்ஷ்மி, அதானேப்பா...சரியாய் சொல்லேன்" என்று தனபாலரே சொல்லியதைக்கேட்டு..."அதுவேதான், மாமா!...அப்படியேதான்" என்றான்.

இதற்குள் வயதான ஒரு மாது எழுந்துவந்து, "எங்க தாதாவும் பாட்டியும் சதா உங்களைப்பற்றியே—உங்கள் எதிர் காலத்தைப்பற்றியே—பேசிக்கொண்டு உயிரைவிட்டார்கள். அவர்களிருந்து உங்களைப் பார்க்கவில்லையென்று துக்கமாய் இருக்கிறது" என்று பெரிதாக அழுதுவிட்டாள்.

"அடாடா...அவர்களுக்குப் பதில் நீங்களே அழுதுவிடு கிறீர்களே! அழாதீர்களம்மா! நீங்கள் பிச்சப்பாவின் புதல்வி எச்சம்மாளா! அதான் முகச்சாயலைப் பார்க்கும்போதே தெரி கிறது. அடாடாடா...உங்க பாட்டியே என்னை ஊட்டி வளர்த் தாளாம்...சேஷியம்மாதானே உங்கள் பாட்டி...ஒரே சம யத்தில் இத்தனை உறவினர்களையும் பார்க்கிறபோது எத்தனை ஆநந்தமாயிருக்கிறது தெரியுமா?......

என்று முடிப்பதற்குள், "மாமா,...நமஸ்காரம்! உங்கள் சகோதரியின் மகள் நான். உங்கள் பக்திரிகை விளம்பரத்தில் கண்டபடி வார்சுதாரி நானே யாவேன்...நானே உங்களை... மணந்து கொள்ளவும்......தீர்மானித்துவிட்டேன்"...என்று சொல்வதைக் கேட்டதும் தனபாலன் வெகு கூர்மையாக அவளைப் பார்த்தார். "என் செல்வீ! இந்த சமயம் என்னைத் தேடி நீ இத்தனை உறுதியுடன் வந்ததற்காக நான் மிகமிக மகிழ்ச்சியடைகிறேன். எந்த சமயத்திலும் உன்னையே எண்ணி எண்ணி எதிர்பார்த்தேன். நான் பாக்யசாலி! நானே பாக்யசாலி! எனக்கு என்ன பேசுவது என்றே ஒன்றும் தெரியவில்லை...மாணிக்கம்!...இவர்களை எல்லாம் அந்த விடுதி யில் உட்காரவைத்து ஆகாரத்தைக் கொடுத்து உபசரிப்பா!... அப்படிப் போய் சாப்பிட்டுவிட்டு வாருங்கள்...என்று எல்லோ ரையும் சேர்த்து அனுப்பினர்.

"அடாடா...என்ன ப்ரபஞ்சலீலை?...நான் முன்பின் பார்க் காத மனிதர்களும் ஜாதிவிட்டு ஜாதி மனிதர்களும் என் னுடைய உறவினர்களாமே!...இத்தனை வைபவமும் அன்பு அப்படியே ஊற்றெடுத்துச் சுரந்து பெருகுவதெல்லாம் என் னுடைய பணத்தின் பேராசைக்கல்லவா நடக்கிறது நாடகம்! ......சரி!...இந்த நாடகத்திற்குச் சரியாய் நான் இன்னொரு நாடகம் நடிக்கிறேன்...மாணிக்கம்...இங்குவா"......என்றார். உடனே மாணிக்கம் ஓடிவந்து "என்ன எஜமான்?" என்றான்.

தனபா:—இதோ பாரு...என்று காதோடு ஏதோ சொன் னர். மாணிக்கம் கடகடவென்று சிரித்தான். "பேஷ்! எஜ மான்! பக்கா நாடகம் சரியானபடி நடிக்கச்சொல்கிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே ஓடினன்.

தனபாலர்,"அன்பர்களே சாப்பிட்டீர்களா! இப்படிவந்து தாம்பூலம் போட்டுக்கொள்ளுங்கள்" என்று அழைத்த உடனே எல்லோரும் அடித்து முட்டிக்கொண்டு வந்தார்கள். அவர்களில் ஒருவர் மிகுந்த உத்ஸாகத்துடன், "அம்மாஞ்சீ! உங்களைப்பற்றி எங்கதாதாசொல்வார்!சொல்வார்!சொல்வார்! அப்படிச் சொல்லுவார்! நீங்கள் குழந்தையாயிருக்கும்போது எங்க தாதா தோளைவிட்டுஇறங்கவேமாட்டீர்களாம். சொள்ளு பெருகுபெருகுனு பெருகுமாம். உங்கமேல் இருக்கும் ஆசையினால் எங்க தாதா அப்படியே தோள்மீது வழியவிட்டுக் கொண்டே உங்களைக் கொஞ்சுவாராம். எங்க பாட்டி தன் தலைப்பினால் அதைத் துடைத்து உங்கள் வாயையும் துடைத்து ...என்ராஜா!நீ எத்தனையோ மேதாவியாயிருக்கப்போரேடா, கண்ணு!...என்று குலாவி மகிழ்வாளாம். நீங்க 'அப்பிச்சி, அப்பிச்சி'ன்னு கேட்பீர்களாம்...எங்கப்பா தட்டுதட்டாக வாங்கிக் கொடுப்பாராம்......என்று விடாது சொல்லிக் கொண்டேபோகையில், மாணிக்கம் இடைமறித்து "ஐயையோ! ஐயாவோடே அப்ப நானும் இருந்திருந்தால் எனக்கும் தட்டுதட்டாகக் கிடைத்திருக்குமோண்ணே" என்றான். எல்லோரும் சிரித்தார்கள்

தனபால் மிகுந்த உத்ஸாகத்துடன் "ஆகா! என்ன அன்பான மனிதர்கள்! இத்தகைய கனிகாரமுள்ளவர்கள்தான் வேணும்" என்று சொல்லும்போது "ஸார்! போலீஸ்;தனபால முதலியார் இருக்கிறாரா?...அவரைக் கைதிசெய்ய வந்திருக்கிறோம்" என்று கத்திய குரல்கேட்டு, "ஐயையோ! போலீஸ்காரர் வந்துட்டாளே! எஜமான்! எஜமான்! என்ன செய்றதுங்க! ஒங்க கடனும் வெளியாகிப் பூட்டுதுங்களே! இன்னா பண்றதுங்க? எஜமான்! எங்காச்சும்போய் ஒளிஞ்சுகுங்க..நீங்க இல்லேன்னு சொல்லிப் புட்ரேனுங்க"......என்று குதித்தும் பயந்து நடுங்கியும் கூறினான்.

இதைக்கேட்ட எஜமான் "ஹா...போலீஸ்காரனா வந்துவிட்டான்?...மாணிக்கம்! பயப்படாதே! போலீஸ்காரரை உள்ளே வரச்சொல். நமது கடன் என்ன பெரிய தொகையா? ஒரு லக்ஷந்தானே! இத்தனை பந்துக்களும் சிநேகிதர்களும் இருக்கையில் என்ன பயம்? இவர்கள் என்னிடம் வைத்துள்ள ப்ரீதியில் நம்மைக் காட்டிக்கொடுத்து வேடிக்கை பார்ப்பார்களா என்ன? எந்த சமயம் எப்படி இருக்குமோ என்று நான் பயந்தது சரியாகிவிட்டதா?...ஸார்! உள்ளே வரலாம்"...என்பதற்குள் இன்ஸ்பெக்டர் தடபுடலாக வந்து "ஓய்!...லக்ஷரூபாய் கடனுக்கும் பட்டைநாமத்தைச் சாத்தி விடமுடியாது. இதோ வாரண்டுடன் வந்திருக்கிறேன்"...

என்று முடிப்பதற்குள், அங்கிருப்பவர்கள் திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் நடுங்கி ஒருவரையொருவர் பார்த்து

கழுவ எத்தனித்தார்கள். "அன்பர்களே! இந்த சமயம் நான் உங்களைத்தான் நம்பி இருக்கிறேன். என்னைக் கைவிடக் கூடாது... இன்ஸ்பெக்டர் ஸார்! இவர்கள் என்னுடைய சொந்த பந்துக்கள். ஆப்தசினேகிதர்கள். என் கடனுக்காக ஜாமீன்கொடுப்பதற்காகவும் கடனையே திருப்பிக்கொடுப்பதற்காகவும் வந்திருக்கிறார்கள்" என்று முடிப்பதற்குள், வந்தவர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து "ஐயா! எங்களுக்கும் இவருக்கும் உறவே கிடையாது. இவர் யாரோ? நாங்கள் யாரோ?" என்று சிலர் கூச்சலிட்டுக்கொண்டே ஓடினார்கள்.

பின்னும் சிலர் "ஸார்! இவருக்கு நாங்களும் கடன் கொடுத்திருக்கிறோம். அதையல்லவா கேட்டு இவரை பஜீத் செய்வதற்காக வந்தோம். நல்ல வேளையாக நீங்கள் ப்ரவேசித்துவிட்டீர்கள். எங்களுடைய பத்திரங்களையும் கொண்டு வந்து தாக்கல் செய்கிறோம், ஸார்!... இந்த மானங்கெட்ட மனிதனை மிகவும் யோக்யன் என்று நம்பி மோசம் போனோம். எங்கள் பணத்தை வாயில் போட்டுக்கொண்டு இன்னும் கடனுக்கு எங்களைச் சுட்டிக்காட்டுகிறானே......என்று சொல்லிக் கொண்டே ஓரேஓட்டமெடுத்தார்கள். பின்னும் சிலர் "ஸார்! இந்த மனிதன் கடன்காரர்களைமட்டும் ஏமாற்றப்பார்க்கிறான் என்று நினைக்காதீர்கள். எங்க சொந்தக்காரர் தனபால் என்பவர் வெகு நாட்களாகக் காணாது வெளியூரிலேயே இருக்கிறார். அவர் பெயரை வைத்துக்கொண்டு தான்தான் அவர் என்று பத்ரிகையில்போட்டு மோசம்செய்திருக்கிறான். அதைப் பார்த்து ஏமாந்து நாங்கள் வந்தோம். இவரை விடாதீர்கள், ஸார்!" என்று ஒரு பெரிய கூப்பாடு போட்டுவிட்டுச் சென்றார்கள்.

எல்லோரும் சென்றவுடனே மூவரையும் சேர்த்து தாங்க முடியாத சிரிப்புக் குலுக்கிவிட்டது..."மாணிக்கம்! ப்ரபஞ்சலீலையைப் பார்த்தாயா?...பணம் என்றால் எத்தனைவித நாடகம் நடிக்கச்செய்கிறது, பணம் இல்லை என்றால் எத்தனை வித வார்த்தைகளை உலுக்கச்செய்கிறது, பாரு!"...என்றார் தனபாலன்.

இன்ஸ்பெக்டர் உடையில் வந்திருந்த குமாஸ்தா வணக்கத்துடன் "ஸார்! நான் இனி இதைக் களைந்துவிடலாமா?" என்று கூறியவாறு சென்றான். "எஜமான்! எஜமான்! இன்னும் யாராவது இப்படி வந்தால் இன்னும் ஒரு தமாஷ் செய்யணுமுங்க" என்றான் மாணிக்கம். அதை ஆமோதித்துச் சிரித்தார் எஜமானர். அவர் முகத்தில் வியப்பு குடி கொண்டது.

4

எஜமானர் சாப்பிட்டு சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளச் சென்றார். அதுசமயம் பின்னும் சில ஆண்களும் பெண்களும் கும்பலாக வந்து ஓரே கும்மாளத்துடன் தனபாலரைப் பார்க்க ஆவல் கொண்டும் அவர் ப்ரபாவத்தைப் பற்றிப் பேசியும் தடபுடல் செய்தார்கள். இதைக் கண்ட மாணிக்கம் அவர்களை எல்லாம் குறும்புத்தனமாகப் பார்த்து உதட்டைப் புதுக்கினான்.

உள்ளே சென்ற எஜமானருக்கு இந்தக் கூக்குரலும் ஆரவாரமும் கேட்டதும், அவர் சடக்கென்று ஒரு யோசனை செய்தார். உடனே அசல் பயித்தியம்போல் பாடிக்கொண்டும் தனக்குத்தானே பேசிக்கொண்டும் இங்கு தடதடவென்று வந்து...“அடாடாடா...என் மன்மதக்குஞ்சுகளா! பீரங்கிக் கட்டிகளா! வாங்கோ...வாங்கோ...அத்தனைபேரும் ஓரேமுட்டாய் வாங்கோ! ஓரே லபக்கு...அவ்வளவுதான்”...என்று கூறி மாணிக்கத்தைப் பார்த்து கடகடவென்று சிரித்தார்.

இவருடைய செய்கையை அறிந்த மாணிக்கம்...“சரியாப்போச்சு! இந்த பயித்தியத்தைக் காண இத்தினி பயித்தியங்கள் வந்திருக்கிறதே! இவைகளை எப்படி அடிபடாமல் உதைபடாமல் அனுப்புவது என்று நான் யோசிப்பதற்குள் இவரே வந்துவிட்டாரே!...இதோ பாருங்கள்! இவரு அசல் பயித்தியம். இங்கு நின்னுக்கா உங்கள் கதி அதோ கதிதான்...என்று முடிப்பதற்குள் வந்தவர்கள் ஓரே ஓட்டமாக ஓடி விட்டதையறிந்த எஜமானும் வேலைக்காரனும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

தனபாலன்:—மாணிக்கம்! பணத்தின் அபூர்வ சக்தியும் ப்ரபஞ்சலீலையின் மகிமையும் போதுமா? சேச்சே! என்ன உலகம்? என்ன மனிதர்கள்? ‘பணம் பத்தும் செய்யும்’ என்கிற பழமொழி எத்தனை பொருத்தமானது பார்த்தாயா?—என்று வியப்புடன் பேசுகையில் “சார்!” என்கிற குரல் கேட்டதும் “எஜமான் இன்னொரு வெள்ளம் வருகிறதுபோல் தெரிகிறதே. என்ன செய்யலாம்?” என்று கேட்பதற்குள் விமலாவும் அவள் கணவனும் அங்கு வந்து வெகு மரியாதையுடன் நமஸ்கரித்துப் பின் “தாங்கள்தானே ஸ்ரீமான் தனபாலன் அவர்கள்?”...என்று விச்வம் கேட்டார்...

தனபாலன் விமலாவை உற்றுப்பார்த்த உடனே தன் சகோதரி ஆதியிலிருந்த அதே சாயல் அதே உயரம் சகலமும் அப்படியே இருந்ததைக் கண்டு, உண்மையில் அவரையறியாமல் அவர் உள்ளத்தில் ஏதோ ஒருவிதமான உணர்ச்சியும் பழைய நினைவுகளின் உத்வேகமும் தோன்றி வியப்புடன் பார்க்கச்செய்தது.

இதற்குள் விமலா வெகு அன்புடனும் பணிவுடனும்... “மாமா!...நாம் ஒருவரையொருவர் பார்த்ததே இல்லையாத

லால் கண்டுகொள்வது மிகவும் ச்ரமந்தான். தாங்கள் பத்ரிகையில் வெளியிட்டிருந்ததுபோல் இதோ என் தாயார் தகப்பனார்; தங்கள் தாயார், தகப்பனார், நம் குடும்பத்தினர், தாங்கள் சிறிய வயதாக இருக்கையில் எடுத்தது ஆக சகலமான புகைப்படங்களையும் சேகரித்துக்கொண்டு வந்திருக்கிறோம். இவைகள் தமக்கு நம்பிக்கையை உண்டாக்கும் என்று நினைக்கிறோம்"...என்று சொல்லி படங்களையும் காட்டினாள்.

தனபால் படங்களைப் பார்ப்பதற்கு முன்பே தன் சகோதரியே நேரில் நிற்பதுபோல் விமலாவைக் கண்டதும் தோன்றிவிட்டது. உடனே இப்படங்களைப் பார்த்தார். அதே படங்களில் சிலது தன்னிடமும் இருப்பதால் அவருடைய மனது சமாதானமாகிவிட்டது. இன்னமும் தெளிவுபடுத்திக்கொள்ள விமலாவின் தாய் தகப்பனின் தனித்தனியான படங்களை இவளுக்குக் காட்டி அதிலிருந்து அவள் பெற்றோரைக் காட்டச்செய்தும் பின்னும் நம்பிக்கைகொண்டார். "குழந்தாய்! இந்த சோதனை எல்லாம் எனக்குத் தேவையே இல்லை. உன்னைப் பார்த்த உடனே நான் என் சகோதரியை நேரில் பார்ப்பதாகவே தெரிந்துகொண்டுவிட்டேன். பத்ரிகையில் விஷயத்தைப் பார்த்த உடனே வீதியுடன் போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லாம் தாம்தாம் என் வார்சுக்காரர்கள் என்று கூறிவரும் கூட்டம் சொல்லிமுடியாது......

நாங்களும் பலேபலே நாடகங்களை நடித்துக் கூட்டத்தை விரட்டி வருகிறோம்...இனி கவலை இல்லை. வாம்மா!...மாப்பிள்ளை! இப்படி உட்காருங்கள்; என் மனது இப்போதுதான் த்ருப்தியாயிற்று ஏதோகாலமாறுதலால் நாம் பிரிந்து வருஷக்கணக்கில் கடந்துவிட்டது. உனக்கு எத்தனை குழந்தைகள்? உனக்கு உடன்பிறந்தவர்கள் எத்தனைபேர்கள்?"......என்று அடுக்கடுக்காய் விசாரித்தார்.

"மாமா! எனக்கு நாலு குழந்தைகள். என் தாயாருக்கு நான் ஒருத்திதான். அவர்கள் என்னுடன்கூட அதிக நாட்கள் இருந்து வாழக்கொடுத்துவைக்கவில்லை. என்னுடைய மூத்த குழந்தை பிறந்ததும் இறந்துவிட்டாள். அப்பா மூன்று குழந்தைகள் பிறக்கும் வரையில் இருந்தார். என்னிடந்தான் இருந்து மறைந்தார். நான்காவது குழந்தை பிறக்கும்போது உதவிக்குக்கூட யாருமே இல்லை. நிர்க்கதியான நிலையில் நாங்கள் இருந்தோம். அம்மா உயிருடன் இருந்தவரையில் பாலு எங்கிருக்கிறானோ? எப்படியானானோ? என் உடன்பிறந்த ஒரு மாணிக்கத்தையும் நான் பிரிந்திருக்கிறேனே...என்று கண்ணீர் விடுவாள்...

அம்மாவின் கல்யாணத்தின் போது ஊஞ்சல் நடக்கையில் நீங்கள் அம்மாவின் ஜடைகுச்சுவையும் அப்பாவின் மாலையையும் சேர்த்து முடிபோட்டுவிட்டீர்களாம். அப்பாவுக்குக்

கோபம் வந்துவிட்டதாம். மைத்துனன் என்பதைக்கூட மறந்து உங்களை அடித்துவிட்டாராம். அதனால் நீங்கள் வருஷக்கணக்கில் அப்பாவிடம் பேசவில்லையாம். அப்பாவே உங்களிடம் மன்னிப்புக் கேட்டாராம். பிறகு பேசினீர்களாம். இதை அடிக்கடி அம்மாவும் அப்பாவும் சொல்வார்கள்.

ஆதியில் நீங்கள் ஒரு பையனிடம் சண்டைபோட்டு அவனுடன் பேச்சுவார்தையைக்கூட விட்டுவிட்டீர்களாம். ஆனால், அந்த பையனின் சகோதரி அம்மாவுக்கு சிநேகிதையாம். அவள் அம்மாவைத் தேடிக்கொண்டு வீட்டிற்கு வந்தபோது நீங்கள் ஆத்திரத்துடன் அடித்துவிட்டீர்களாம். அது மிகவும் தப்பிதமான காரியம் என்று உங்கள் தகப்பனார் உங்களைத் திட்டி, கையில் நன்றாகக் காய்ந்த கரண்டியினால் சூடு போட்டுவிட்டாராம். அந்த ரணம் அப்படியே வடுவாகி இருக்கிறது என்றும் அம்மா சொல்லுவாள்...

என்று விமலா ஆதி விஷயங்களைச் சொல்லச்சொல்ல, ஸ்ரீ ஸீதாதேவிக்கு அனுமான் அடையாளங்கள் சொல்லிக் கணையாழி கொடுத்த கட்டமே நினைவுக்கு வந்து, விமலாதான் தன்னுடைய வார்ஸுக்காரி என்பது நன்றாக ஊர்ஜிதமாகி விட்டது. ஆனந்தக் கண்ணீர் பெருகிவிட்டதால் "குழந்தாய்! இதோ அந்த சூட்டுக் காயத்தின் வடுவு!"...என்று காட்டி விமலாவின் முதுகைத் தடவிக்கொடுத்தார்.

இனிமேல் கேட்கவேண்டுமா? 'கொடுக்கிற கடவுள் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுப்பார்' என்ற பழமொழி விமலாவுக்குத்தான் செய்ததுபோல் பொருந்திவிட்டது. பிரிந்தவர் கூடினால் பேசவும் கூடுமோ! என்றபடி அவர்கள் பேசிப்பேசிப் பழங்கதைகளின் இன்பத்தை அனுபவித்தனர்

அன்றே தனபால் விமலாவை உயர்ந்த நகைகள்-ஷாப்பிற்கு அழைத்துச்சென்று அவளுக்கும் அவள் குழந்தைகளுக்கும் வைரசெட்டும் தங்கசெட்டும் வாங்கி நிறைத்தார். ஜவுளிக் கடையில் பாதிக்குமேல் வீட்டில் குடியேறிவிட்டது! விமலா வசிக்கும் ஊரிலேயே 40 ஆயிரம் ரூபாய்க்கு முதல்தரமான பங்களாவை வாங்கிக்கொண்டு குடியேறிவிட்டார்கள். இம் மாதிரி அதிர்ஷ்ட மழைபொழியும் பாக்யசாலிகளை லக்ஷத்திற்கு ஒருவர்கூட கிடைப்பதரிதான உலகத்தில், விமலாவின் புகழ் வானத்தையே அளாவிவிட்டது. அவளுடைய சுற்றத்தினர்களில் சிலர் பொருமை கொண்டார்கள். சிலர் வாழ்த்தினார்கள். ப்ரபஞ்சலீலை ஒன்றா? இரண்டா? இப்போது விமலாவின் வாழ்கையின் பாதையேமாறிவிட்டது. ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஒரு உபாத்தியாயினி, சங்கீதம் பின்னும் சிறப்பாக வருவதற்காக ஒரு வித்வான் உபாத்யாயர், வீட்டுவேலை சகலத்திற்கும் ஆள்கள், மோட்டார் சவாரி, டெலிபோன், இன்னும் கேட்கவேண்டுமா? தர்பார்சமஸ்தானமென்றால் மிகையாகாது!

எந்த நாகரீக க்ளப்பைக் கண்டு அன்று பெருமூச்சுவிட்டு ஏங்கினுளோ அதே க்ளப்பில் விமலா இன்று விமலாதேவியாக மாறி ப்ரதான ஸ்தானத்தை வகித்துப் பக்தாட்டத்திலும் தடபுடல்பேஷனிலும் தலைசிறந்து விளங்குகிருள்.

அவள் வாங்கியுள்ள கப்புகளும் கோப்பைகளும் கணக்கு வழக்கில்லை. இவளுடைய அத்ருஷ்டமோ! மாமாவின் துரத்ருஷ்டமோ! மாமாவின் சொத்துக்கள் பூராவையும் விமலாவின்மீது எழுதி ரிஜிஸ்தர் செய்துவிட்டார். ஏனெனில், பலபேர்கள் இவரைத் தொந்தரவு செய்வதையும், தூரத்து பந்துக்கள் இவருடைய பணத்திற்காக சண்டைசெய்வதையும் விலக்கி, சகலமும் விமலாவினுடையதாகச் செய்துவிட்டுத் தான் நிம்மதியாக இருக்க எண்ணி, அவ்வாறே மாற்றி விட்டார்.

தனது இத்தனை காலத்திய வாழ்நாள் பூராவும் சாரமற்ற முறையில் கடத்தியாகிவிட்டதால், இனிமேலாவது நல்ல விஷயத்தில் காலத்தைச் செலவிடவும் திவ்யதேச யாத்திரைகள் செய்து இன்புறவும் தீர்மானித்துத் தனது பழைய ஆள் மாணிக்கத்தை அழைத்துக்கொண்டு தனக்கென்று 10 ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு யாத்திரை கிளம்பினர். விமலாவின் தடபுடல் வாழ்க்கையைக் கண்டு உண்மையில் அவரே பயந்தார். அதனுல் புத்திமதிகள் கூறிவிட்டுச் சென்றுர்.

புதுமோக வெள்ளத்தில் அதன் சுழலையோ பயங்கரத்தையோ எண்ணியும் பார்க்காமல் இறங்கிவிட்ட விமலாவின் போக்கை அவள் கணவன் விச்வத்தினுலேயும் அடக்க முடியவில்லை. ஜாடைமாடையாகச் சொல்லியும்பார்த்தான். பயன்படவில்லை. பணத்தின் செருக்கும் நாகரீக மோகத்தின் பெருக்கும் அதிகமாகியபிறகு கணவனிடம் அன்பும் மதிப்பும் குறைந்து அவனிடம் அலக்ஷிய பாவமும் தோன்றிவிட்டது. ஆதியில் விச்வம் ஆபீஸிலிருந்து சற்றுநேரம் வராவிட்டால் வாசலிலேயே நின்று வழிபார்த்துத்தவித்த அதே விமலாதானு? என்று சந்தேகிக்கும்படியான நிலைமைக்கு வந்துவிட்டாள் என்றுல், அதிகம் சொல்வானேன்!

அன்று விமலா வெகுஅவசரமாக க்ளப்புக்குக் கிளம்பிக் கொண்டிருக்கையில் விச்வம் காரில் வெளியே போயிருந்ததால் காருக்காக அவள் காத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஆத்திரம் பொங்கிவருகிறது! தன் கணவன் காரைக் கொண்டு போனது குற்றத்திலும் மகாகுற்றமாகத்தோன்றியது. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க உலாவுகையில், விச்வம் திரும்பிவந்தான்.

கையில் ஒரு பொட்டணம் கொண்டுவந்து......"விமலா! இந்தப் புடவை நன்ருயிருக்கிறதா, பாரு. என் மாமாவின்

மகளுக்கு கல்யாணமென்று கடிதம் வந்திருக்கிறது அதற்காக வாங்கிவந்தேன்.'' என்று காட்டினன்.

விமலா முகத்திலடிக்காத குறையாய் அதை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு முறைத்துப்பார்த்தபடியே'' ஓகோ! ப்ரவர்த்தகங்கள் நாளுக்குநாள் வால்முளைத்து வளருகிறது போலிருக்கிறது. இந்த மகா அவசர காரியத்திற்குத்தான் என் வேலையைத் தடைசெய்துவிட்டுக் காரில் ஏறிக்கொண்டு துரைவாள் அவசரமாகச் சென்று இந்தப் புடவையை வாங்கிக்கொண்டு வந்தீர்களோ! ஏன்? நீங்கள் மாதாமாதம் ஆயிரமாயிரமாய்ச் சம்பாதிப்பது மெனக்கெட்டுவிட்டது! அல்லது உங்கள் பிதிரார்ஜித சொத்து இரைச்சலிட்டுக் கத்துகிறது! இந்த லக்ஷணத்திற்கு கார் சவாரியும் ஸரிகைப் புடவையும்... ஏதேது... தடபுடல் படுகிறது! உங்கள் மாமா பெண் கல்யாணத்திற்கு என் பணத்தில் 250 ரூபாய்க்கு நீங்கள் வாங்கிக்கொடுப்பது வெகு அழகு!'கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது' போலிருக்கிறது. இம்மாதிரி அனுவச்யமான செலவுக்கு இங்கு இனி இடமில்லை; ஜாக்ரதை! பணம் உங்களுடையதல்ல. நினைவு இருக்கட்டும். ஏதோ குடும்பத்தில் மானமாக வாழ்க்கை நடத்தக் கற்றுக்கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு அதே சேலையைச் சடக்கென்று பிரித்துத் தான் கட்டிக்கொண்டு...''ட்ரைவர்!'' என்று கூப்பிட்டாள்.

விச்வம் அப்படியே செம்மட்டியால் தலைமீது அடிப்பது போன்ற அபாரமான வேதனையும் துக்கமும் அடைந்து குன்றிவிட்டான். விமலாவின் விபரீதவார்த்தைகளாகிய பாணத்தினுல் அவனுடைய இதயம் அளிந்த புண்ணுகிவிட்டது. திடீர்பணம் வந்தபிறகு இத்தகைய விபரீதமா வரவேண்டும்? என்று மனம் உடைந்துவிட்டதால் ஆத்திரமும்பீறிக்கொண்டு வந்தது. ''கர்வம் பிடித்த நாயே! உன்னுடைய புதுப்பணத்தின் திமிரும் கர்வமும் உன் கடமையைக்கூட மறக்கச்செய்து நாசமாக்குகிறதா? என்னவென்றுநினைத்துவிட்டாய்?'' என்று திட்டியபடியே முதுகில் நான்கறை அறைந்துவிட்டான்.

அவ்வளவுதான்! இனிமேல்கேட்கவேண்டுமா? தம்பதிகளுக்குள் பெரும் போர் நிகழ்ந்துவிட்டது. ஆனுல், விமலா அன்று அவச்யமாய் வெளியில் போகவேண்டியிருந்ததால் உடனே போய்விட்டாள். விச்வத்திற்கு இதுவரையில் இம்மாதிரியான ஒரு அவமானமும் மன அதிர்ச்சியும் வானமே இடிந்து இவன் தலைமீது விழுந்து நசுக்கி வதைப்பதுபோன்ற சகிக்கமுடியாத மனக் கொதிப்பும் அவன் கண்டதே இல்லையாகையால் அவனுல்அடக்கமுடியாததுக்கம்பீறிக்கொண்டுவந்துவிட்டது.

பணம் உங்களுடையதல்ல... கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்குஉடைப்பது... என்கிறவார்த்தைகள் 'கணீர்,

கணீர்' என்று ஒலித்து, அவனைச் செம்மட்டியாலடிப்பது போன்ற வேதனையை உண்டாக்கின. தங்களுடைய தாம்பத்ய வாழ்க்கையில் ஆதியில் ஏழ்மை நிலைமையிலிருக்கையில் இருந்த அன்யோன்யமும் அன்பும் இப்போது இப்பாழும் பணம் வந்தவுடனே எவ்விதந்தான் சிதறிவிட்டது? ஆகா! என்ன ஆச்சரிய உலகம்? என்ன ப்ரபஞ்சலீலை?...சீச்சீ! இந்த பணத்துடன் எப்படியாவது அவள் வாழட்டும். கட்டிய கணவனுக்கும் மிஞ்சிய மதிப்புள்ளது பணந்தான் என்கிற கர்வமும் அகங்காரமும் வந்துவிட்டபிறகு இனி எனக்கு இந்த வாழ்க்கையே வேண்டியதில்லை. எங்கேனும் சென்று ப்ராணனை விட்டுவிடுவதே சரி: இனி அரைக்ஷணமும் இந்த இடத்தில் நிற்கமாட்டேன். ஒரு வாய்த்தண்ணீரும் குடிக்கப் போவதில்லை. குழந்தைகளின் தலைவிதியைப்போல் நடக்கட்டும்" என்று ஒரே தீர்மானம் செய்துகொண்டான். மனது இடிந்துவிட்ட வேகத்தில் வைராக்யமாய் நிறைந்துவிட்டது. ஏதோ தனக்குத் தோன்றியபடி ஒரு கடிதமெழுதி தன் மேஜைமீது வைத்துவிட்டுத் தன் கண்கள் குளிர ஒருதரம் தன் குழந்தைகளைப் பார்த்தான். கண்ணீர் பெருக விடுவிடென்று வீட்டைவிட்டு நடந்தான்.

அவன் இதயத்தில் செய்யும் சங்கடத்தை அவனைப் படைத்த பகவானுல்கூட அறிய முடியுமோ முடியாதோ? அத்தனை வேகத்துடன் துன்பமும் வைராக்யமும் கூடிக் கடும்புயலடித்தது!

6

நவநாகரீக க்ளப்பில் அன்று வெளியூரிலிருந்து அவ்வூர் மாதர் கழகத் தலைவி விஜயம்செய்யப்போகிருள். அதை முன்னிட்டுத்தான் விமலா அத்தனை தடபுடல் ஜரூராக வந்தாள். தன் கணவன் என்றுமில்லாது இன்று அடித்துவிட்ட ஆத்திரமும் தாங்கமாட்டாத கோபமும் வந்து கண்ணீர் வழிந்ததைச் சரிப்படுத்திக்கொண்டு அவசர அவசரமாக க்ளப்புக்கு வந்தாள்.

முன்பு ஒருநாள் வெகு அலக்ஷியமாய்ப் பேசிய அதே நபர்கள் "வாவா! விமலா! உன் வருகைக்காகத்தான் காத்திருக்கிறோம். இதோ இவர்கள்தான் கங்காபுரியிலிருந்து வந்திருக்கும் ஜானகியம்மாள்...இவர்தான் எங்க சங்கத்தின் மிகவும் முக்யமான அங்கத்தினர். வெகு கெட்டிக்காரி. வெகு சாமர்த்தியமாய் வேலைசெய்பவர். சங்கீதமோ அபாரமாய்ப் பாடுவார்"...என்று இருவரையும் பரஸ்பரம் அறிமுகப்படுத்தி வைத்தனர்.

வர்துள்ள தலைவி எத்தகைய ஆடம்பரமுமின்றி சர்வ சாதாரணமுறையில் இருப்பதைக்கண்டு விமலாவுக்கும் மற்ற

வர்களுக்கும் வியப்பாக இருந்தது. பிறகு விமலா ப்ரார்த்தனை கீதம் பாடினாள். தலைவியை சபையோருக்கு அறிமுகம்செய்து காரியதரிசி பேசிய பிறகு தலைவி பேசவாரம்பித்தாள். பரஸ்பரம் சங்கத்திற்குச் சங்கம் நேசப்பான்மை வேண்டும் என்றும், முக்யமாக ஒவ்வொரு சங்கமோ, க்ளப்போ, நிலையங்களோ, சகலமும் பெண்மணிகளுக்கு அத்யாவசியமான முறையில் ஸேவைபுரியும் நோக்கத்துடன் இருக்கவேண்டும் என்றும், பெண்களுக்கு முக்யமான கடமை தன்வீட்டு வேலையும் கணவனுடைய சிச்ருஷையுமாகும்; குடும்பவேலைகள் செய்து இல்லரசு புரிந்தபிறகே மற்ற இதர வேலைகளில் ஈடுபட்டுழைத்தால் பகவானுக்கு முகோல்லாஸமாயிருக்கும்; தெய்வபக்தி, பெரியாரிடம் அன்பு, மரியாதை, அடக்கம், வருவாய்க்குத் தக்க செலவும், அதிலேகூட ஒரு சிறுதுகை சேமிப்பு திட்டமும் செய்து குடும்பத்தை நடத்தும் கனிகாமும் வேண்டும்; பக்தி இல்லாவிடில் வாழ்க்கையில் ஸாரமே இல்லை. ஸாரமற்ற வாழ்க்கையை நாம் ஸாரமாக எண்ணி மகிழ்கிறோம்; இம்மாதிரி நவநாகரீக க்ளப்புகளில் விளையாட்டும் பேச்சும் இருப்பது மட்டும் போதாது; பக்திக்கும் கலாசாரப் பண்பாட்டிற்கும் ப்ரத்யேகமாய் இடமளிக்கவேண்டும்"...

என்றும் அந்தம்மாள் வெகு முக்யமான விஷயங்களைப் பேசுகையில் அங்குள்ள சில நாகரீக நங்கையர்களின் முகம் சுருங்கியது. "இதென்ன பேச்சு? ப்ரசங்கமா? அத்தைப் பாட்டிக் கதையா? வெகு அழகு! ஏதோ ப்ரமாதமாய்ப் பேசப்போகிறாள் என்று பார்த்தால்...பக்தியாம்! உண்டைச் சோறும்! சுண்டலாம்!...வீட்டு வேலையாம்! யாருக்கு இந்த உதவாக்கரை விஷயங்கள் வேண்டும்?...மிஸஸ் லில்லி! நான் பந்தாடப்போகிறேன்" என்று கூறி வெகு முடுக்காக விமலா எழுந்துபோய்விட்டாள். அவளைத் துடர்ந்து பின்னும் சிலர் போய்விட்டார்கள்.

க்ளப்பின் தலைவி காரியதரிசியைப் பார்த்து, "மிஸஸ் மாலினீ! நீங்கள் இந்தம்மாளுக்கு வந்தனோபசாரம் கூறி விட்டுப் பிறகு போங்கள். நான் அவசரமாக வேறு ஒரு இடத்திற்குப் போகவேண்டும். அதோடு நாம் விடியற்காலையில் பிக்னிக் பார்ட்டிக்குப் போகவேண்டுமல்லவா? அதற்கு நான் ஆயத்தம் செய்யவேண்டும்...வருகிறேன்"...என்று கூறி, அந்தம்மாளும் போய்விட்டாள்.

இந்த லக்ஷணத்தைப் பார்த்தறிந்த உபன்யாஸகி சடக்கென்று தன் பேச்சை முடித்துக்கொண்டு தானும் சென்று விட்டாள். டென்னிஸ் ஆட்டம் ஆடிக்கொண்டே விமலா, ப்ரஸங்கத்தைப் பற்றிச் சிரித்தும் அந்தம்மாள் பேசியது போலவே அழகுகாட்டி இமிடேஷன் செய்து பேசிப் பரிகஸித்தும் பந்தாட்டத்தைக்கூட விட்டுவிட்டு தடபுடல் செய்ய,

அதில் ஒரு இன்பத்தைக் கண்டார்கள். எல்லோரும் விடியற் காலை க்ளப்பிலேயே வந்து கூடுவது என்று முடிவுசெய்து கொண்டு பிரிந்தார்கள்.

விமலா வீட்டிற்கு வந்ததும் அன்றுமாலை தன்னைக் கணவன் அவமானப்படுத்தி அடித்த அகங்காரம் அவள் இதயத்தை முற்றுகை இட்டிருந்ததால் இனி அவனுடன் சில தினங்களுக்காவது பேசக்கூடாது; தன்னுடைய பெருமையும் பணத்தின் மகிமையும் அவனுக்கு நன்ருகத்தெரிந்து அவனே வந்து மன்னிப்புக் கேட்டுப் பேசட்டும்....என்ற தீவிரமான எண்ணத்தினுல் எள்ளுங் கொள்ளும் வெடிக்கும் முகத்துடன் வந்தாள்.

மறுநாள் ப்ரயாணத்திற்கு வேண்டிய ஸன்னத்தங்கள் செய்துகொண்டு தன் சாப்பாட்டைமுடித்துகொண்டு படுத்து விட்டாள். கணவன் வந்து சாப்பிட்டானு இல்லையா என்று கூட கேட்கவில்லை. சாதாரணமாக விச்வம் சில தினங்கள் தாமதமாக வந்து சாப்பிடுவதும் சாப்பிட்டபிறகு வெளியே போய் தாமதமாக வந்து படுப்பதும் வழக்கம். அதனுல் அவள் கோபத்தில் லக்ஷியமே செய்யாமல் இருந்துவிட்டாள்.

இரவு விச்வம் வீட்டிற்கே வரவில்லை. மழையோ ப்ரமாதமாகக் கொட்டி நின்றது. விடியற்காலையில் விமலா வேலைக்காரர்களிடம் சொல்லிக்கொண்டு எக்ஸ்கர்ஷனுக்குக் கிளம்பிப் போய்விட்டாள். அதுதான் தன் கடமை என்றும் அதுவே சொர்க்கபோகமென்றும் எண்ணினுள். வீட்டைப்பற்றிய கவலையே மறந்தது.

7

வீட்டைவிட்டுக் கிளம்பிய விச்வம் வெகுநேரம் கடற்கரையில் எண்ணுததும் எண்ணியவாறு குழம்பிப்போய்ப் படுத்திருந்தான். தனக்குப் பணம் வந்தபிறகு விமலா செய்யும் அலட்சியமும் அவளுடைய மாறுதலும் எத்தனைதான் இதுவரையில் சகித்திருந்தபோதிலும் விச்வத்திற்கு இந்த வார்த்தைகள் அடியோடு பொறுக்காமல் மனது உடைந்துவிட்டது. ''இனி எந்த கதியானுலும் ஆகட்டும்; அந்த அல்பநாயின் பணத்திலிருந்து ஒரு வாய்க் கஞ்சிகூட குடித்து இந்தச் சரீரத்தை வளர்க்கமாட்டேன். ஏன்! இனி அந்த மூதேவியின் வீட்டிற்கே போகப்போவதில்லை. மனிதனை மனிதன் மதிக்காத பேய்த்தன்மை நிறைந்தவர்கள் யாராயிருந்தால்என்ன? பணத்துடனேயே உறவு கொண்டாடி மகிழட்டும்! பணத்தையே கணவனுக எண்ணி வாழட்டும்! என் அருமைக் குழந்தைகளைக்கூட நான் எடுத்துக்கொண்டு வந்துவிட்டால் என்ன? பிச்சை எடுக்கிறேன்... கூலிவேலை செய்கிறேன்...

ரயில்வேஸ்டேஷனில் அன்றுடம் மூட்டைதூக்கிச் சம்பாதிக்கிறேன்: எப்படியாவது பாடுபட்டு என் குழந்தைகளை அந்தப் பிசாசிடமிருந்து பிரித்து நானே காப்பாற்றுகிறேன். ஏன் அவளிடம் விடவேண்டும்?'' என்று தனக்குள் ப்ரமாதமாய் எண்ணிப் பெரிய தீர்மானத்துடன் முடிவுகட்டிவிட்டான்.

இவனுடைய இதயத்தில் எத்தகைய பெரும் புயலடித்து துக்கமழையைப் பொழியச்செய்கின்றதோ அதுபோல், வெளி உலகத்திலும் ப்ரமாண்ட மின்னலும் இடியும் கூடிய மழை குபீரென்று வந்துவிட்டதால், எத்தனைதான் வைராக்யமும் வெறுப்பும் இதயத்தைப்பிளந்தபோதிலும் மழையில் நனைந்து படுத்திருக்கும்பரிபக்குவம்ஏற்படவில்லையாதலால், துணியைத் தலையில் போட்டுக்கொண்டு நடந்தான்.

மழை ப்ரமாதமாய் பெய்ததால் அங்குள்ள ஒரு வீட்டுத் திண்ணையில் தங்கி இரவுநேரத்தைக் கழிக்க எண்ணி வீடு தோறும் பார்த்தான். என்ன காலத்தின் விசித்திரம்! புராதன காலத்தில் வாசலில் பெரிய சவுகரியமான சார்வு மனையுடன் கூடிய திண்ணைகளும் விசாலமான குறடுகளும் அமைத்துப் பெரியவர்கள் கட்டியதன் தத்துவம் எத்தனை சிறந்தது! வெயிலில் தவிப்பவர்கள், மழையில் கஷ்டப்படுகிறவர்கள், தள்ளாமையுடன் நடக்கமாட்டாது திண்டாடுகிறவர்கள், வழி ப்ரயாணிகள் முதலியோர் தங்கி இளைப்பாறி இன்புறுவதற்குப் பரோபகாரமாக உதவி புரிந்தார்கள். இப்போதோ ஒரு வீட்டிலாவது ஒரு சாண் இடம் இருக்கிறதா? எங்குப் பார்த்தாலும் விதவிதமான இரும்புக் கேட்டுகளும், ஸோடா கடைகளும், வெத்திலைபாக்கு கடைகள், இதர வகைக் கடைகள் முதலியன காட்சியளிக்கின்றனவேயன்றி, ஒரு வீட்டிலாவது திண்ணை அகப்படவில்லை. பலமான மழை சுழற்றியடிப்பதால் ஓட்டமும் நடையுமாகச் செல்கையில் ஒரு சிறிய கூரை வீட்டு வாசலில் சிறிய திண்ணையும் சிறிய குறடுமாகக் காணப்பட்டது கண்டு மிகச் சந்தோஷத்துடன் அங்கு திண்ணையில் ஒண்டிக்கொண்டான். வீதியில் ஒரு ரிக்ஷா நின்றிருந்தது. குளிரில் நடுங்கியவாறு ரிக்ஷாக்காரன் வண்டியில் தலையை மட்டும் நீட்டியவாறு தலையைப் பாதுகாத்தான்.

இந்தக் காட்சியைக் கண்டவுடனே விச்வத்திற்கு அந்த நிலைமையிலும் சிரிப்புதான் வந்தது. ''ஐயோ பாவம்! தலையை மட்டும் நனைக்காது காத்துச் சரீரத்தை இளப்பம்செய்கிறான். ஆம்! எண் சாண் உடம்புக்கு சிரசுதான் ப்ரதானம் என்கிற பழமொழியின் உண்மையறிந்து தலையைக்காக்கிறான்போலும்'' என்று நினைத்து அதைப் பார்த்துக்கொண்டிருக்கையில் உள்ளிருந்து இரண்டுபேர் பேசிக்கொண்டே வரும் வார்த்தைகளும் அதையொட்டிய புலம்பலும் பெருமூச்சும் திணறலும் விச்வத்தின் காதில் விழுந்ததும் அதையே உற்றுக் கவனித்

தான். அத்தனை பெரிய மழையையும் கிழித்துக்கொண்டு அந்த பரிதாபகரமான வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன.

"அம்மணீ, பயப்படாதே! என்ன செய்வது? நானும் எத்தனையோ விதத்தில் மருந்துகளை மாற்றிக்கொடுத்து வந்தும்குணப்படவில்லை. இன்னும்பெரியடாக்டரை அழைத்து வருகிறேன். நீங்கள் பயப்படாமல் கடவுளை வேண்டிக் கொண்டிருங்கள். சரியாக மழையொன்றுகூட உபத்திரவப் படுத்துகிறது. ப்ராணன் ப்ரதானமா? இந்தச் சில்லரை உபத் திரவம் ப்ரதானமா? நான் இப்போதே போய்வருகிறேன்" என்று புறப்படத் தலைப்பட்டார்.

விசும்பி விசும்பி அழும் அந்தப்பெண் "டாக்டர்! எனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே. ஆகாயமும் பூமியும் ஒன்றாகச் சுற்றுவதுபோலிருக்கிறதே! எனக்கு இந்த உலகத்தில் இருப்பதெல்லாம் என் கணவரின் அன்பும் அவரிடம் நான் பக்தி செலுத்துவதுந்தான் என் லக்ஷ்யம்; டக்டர்! என் கண வருக்காக என்னுயிரையும் நான் கொடுக்கத் தயாராயிருக் கிறேன். அவர் பிழைத்தால் போதும். என் குழந்தைகளைப் பிச்சைஎடுத்தாவது அவர் காப்பாற்றுவார். உலகத்தில் பெண் களுக்கு பதியின் பாதஸேவையைவிட உயர்ந்த ஸேவை என்ன இருக்கிறது? டாக்டர்! என் கணவர் படுத்துள்ள இந்த ஆறு மாத காலத்தில் நான் அவருடைய போஷணைக்காகவும் மருந்துகளுக்காகவும் குழந்தைகளின் கால்வயிறு கஞ்சிக்காக வும் நாலு வீட்டில் பத்துதேய்த்துத் தண்ணீர் நிரப்பி வேலைசெய்து குடும்பத்தை நடத்துகிறேன். டாக்டர்! ஏழைக் குடும்பத்தில் ராஜவைத்யம் செய்யும்படியான உடம்பு வந்து விட்டதே! என்ன செய்வேன்? வாடகை கொடுக்கச் சக்தி யின்றி இந்த சத்திரத்தில் இப்பொழுது ஒரு மாதமாய்த் தங்கி இருக்கிறேன். இந்த சத்திரத்தின் ஏஜண்டு வீட்டில் ஒரு மாதமாய் வேலை செய்கிறேன். அதனால்தான் அவர் இங்கு இடம்கொடுத்திருக்கிறார்....

என்று இவள் பொங்கிவெடிக்கும் துக்கத்துடன் பேசு வதைக்கேட்டு டாக்டரும் மனவருத்தத்துடன். "அம்மணீ! பகவான் உங்களைக் காப்பாற்றுவார். இத்தகைய பதிப்ரேமை உடையவர்களைக் கண்டுதான் வள்ளுவரும் ஆனந்தமிகுதியால் பாடியிருக்கவேண்டும். பெண்களுக்கு பதிஸேவையைவிட வேறு உயர்ந்தஇன்பமில்லை...என்று உங்களைப்போல் சொல்லக் கூடிய பண்பட்ட உள்ளத்துடன் கூடியவர்கள் அதிகம் கிடைக்கமாட்டார்கள். தனக்கும் தன் அதிகாரத்திற்கும் கண வன் அடங்கிநடக்கவேண்டும் என்று அசட்டுத்தனமும் அசம்பா விதமும் நிறைந்த எண்ணங்கொண்ட பெண்களும் இந்த உலகத்திலில்லாமலில்லை. தாய்வீட்டில் 11 மாதமிருந்தால் என் வீட்டில் ஒருமாதம் தேறுவது கஷ்டமாக இருக்கிறது

என்மனைவிக்கு! இதையே அவள் சொர்க்கபோகமாய் எண்ணு கிறாள். எங்கள் வீட்டிற்குப் பக்கத்து பங்களாவில் ஒரு நாகரீக ஷோக்பேர்வழி இருக்கிறாள். அவள் கணவனை வேலை யாளைவிடக் 'கேவலமாக நினைத்து நடத்துகிறாள். அந்த அப்பாவி மனிதன் எப்படியோ பொறுத்திருக்கிறான். இன்று மாலை வீதியில் அந்த பத்ரகாளி சற்றும் மானமோ பயமோ இன்றி ட்ரைவரிடம் "இனி என் உத்திரவின்றி நீ அவருக்குக் கார் ஓட்டக்கூடாது. காருக்கு சொந்த அதிகாரி நானேயன்றி என்னிடம் அண்டிப் பிழைக்கும் அந்த மனிதனல்ல. எனக் குள்ள ஜோலிகளுக்கு இடையூறாக யார் உன்னைக் கார் எடுத்துப் போகச்சொன்னது? வீட்டுக்குச் சகலவிதத்திலும் அதிகார தேவதையான எஜமானி நான் என்பது நினைவிருக் கட்டும். நானே கார் ஓட்ட எங்கள் நாகரீக க்ளப்பில் ஒரு அம்மாளிடம் சொல்லிக்கொண்டிருக்கிறேன். சரியானபடி லைஸன்ஸ் வாங்கிவிட்டால், பிறகு உன்னைக்கூட லக்ஷியம் செய்ய வேண்டிய அவச்யமில்லை. ஜாக்ரதை!" என்று கூறியதைக் கேட்டு என் சரீரமே நடுங்கியது. இத்தகைய படுபாவி ராக்ஷ ஸிகள் உலகிலிருப்பதனுல்தான் உலகம் இப்படி க்ஷாமத்தை அடைந்து நாசமாகிறது என்று நினைத்தேன். அதே நெஞ்சு இப்போது உங்களைப்போன்ற சிறந்த பதிவ்ரதைகள் ஒருவ ராவது இருப்பதனுல்தான் மழைபெய்கிறது என்று நினைத்துக் கூறுகிறேன்......அடாடா...மழை நிற்கும் வழியைக் காண வில்லை. தாமதம் செய்வது சரியல்ல. இதோ போய் பெரிய டாக்டரை அழைத்துவருகிறேன்.

அந்தப் பெண்மணியோ துடியாய்த் துடிக்கிறாள். பக வானை வேண்டுகிறாள். "கடவுளே! உனக்கு ஒரு உயிர் வேண்டுமானுல் என்னுயிரைக் கொண்டுபோ... சந்தோஷ மாகக் கொண்டுபோ! என் கணவன் உயிரைவிட்டுவிடு...அவ ருக்கு உயிர்ப் பிச்சைகொடு" என்று பெரியதாகவே கத்திக் கேட்கிறாள். உள்ளே ஓடுகிறாள்; வெளியே வருகிறாள்! மழை யும் ஓய்ந்தபாடில்லாது கொட்டுகிறது.

8

திண்ணையோடு திண்ணையாக ஓட்டிக்கொண்டுள்ள விச் வத்தின் காதில் டாக்டர் கூறிய விஷயங்கள் விழுந்ததும் அவன் உள்ளம் எப்படித்தான் இருந்திருக்கும் என்று கூறவா வேண்டும்? வீதியில் ட்ரைவரிடம் அக்கம்பக்கம் கேட்கும்படி இப்படியா சொன்னுள்!...இப்படியா சொன்னுள்!...என்று தவிக்கிறான். அளிந்த புண்ணில் ஆணி அடிபபதுபோன்று தாளமுடியாத சங்கடமும் துக்கமும் பீறிக்கொண்டு வந்து விட்டது.

கணவன் உயிரை மீட்கத் தன்னுரைக் கொடுக்க ஒரு உத்தமி தயாராயிருக்கும் விசித்ரமும் கணவனை அடியோடு மதிக்காது தூசிபோல் எண்ணிப்பேசி வதைக்கும் ஒரு ராக்ஷஸியின் தூமகேதுத்தனமும் ஒருங்கே இவன் உள்ளத்தை வாட்டிவதைத்துஉருகச்செய்தன.ஏற்கெனவேஇருந்தவைராக்யமும் மனக்கொதிப்பும் பின்னும் உறுதியுடன் அதிகரித்தன. எந்தவிதத்தில் தன்னுடையமுடிவைத் திர்மானிப்பது என்கிற எண்ணத்துடன் உட்கார்ந்திருக்கையில் கார்வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பெரிய டாக்டர் இறங்கினர். முதல் வந்த டாக்டரும் கூடவே இறங்கி உள்ளே சென்றூர்கள். சுமார் கால் மணி நேரத்திற்குப்பிறகு வந்து "அம்மணி! உடனே இந்த ப்ரிஸ்க்ருப்ஷனிலுள்ள மருந்தை வாங்கிவையுங்கள். நான் அரை மணியில் வந்து இந்த ஊசியைக் குத்துகிறேன். உடனே வரவழைக்கவேண்டும். மணிக்கு மணி இந்த ஊசியை ஏற்றினுல் ஒரு வேளை பயமில்லை; பிழைத்துக்கொள்ளலாம். தாமதிக்கக்கூடாது. வேருெரு அவசர கேஸ்வந்து வாசலில் காத்திருப்பதால் நான் போய் உடனே வருகிறேன்" என்று கூறிவிட்டு இருவரும் சென்றூர்கள்.

சீட்டில் எழுதியுள்ளமருந்தின் விலையும் தெரியாது; அதற்கான காசும் கையில் காலணுஇல்லை. சகலமும் விற்றுச்செலவு செய்தாகிவிட்டது. இனி என்னசெய்வது? என்று அந்தப் பெண்மணி தவித்தவாறு எதிரிலுள்ள மருந்துஷாப்பிற்கு ஓடி விலையை விசாரித்தாள். அவளை அப்படியே தூக்கிவாரிப் போட்டது. எட்டு ஊசிக்கானமருந்து அதில் எழுதியிருந்தது. அதன் விலை 150 ரூபாய் என்றதைக் கேட்டதும் இடிவிழுந்தவள் போல் தத்தளித்துக்கொண்டு ஓடிவந்தாள்..."ஐயோ! 150 ரூபாயா...கடவுளே! இதென்ன சோதனை? 150 தம்படிக்கும் வழியில்லாத என்னை இப்படி ஏன் சோதிக்கிருய்?...நான் என்ன செய்வேன்?...ஆம்?...என்! கணவனுக்காக நான் திருடவும் துணிகிறேன்....எங்காவது திருடி பணத்தைக் கொண்டுவந்து இந்த பேராபத்திலிருந்து நீங்கச்செய்கிறேன். நான் பாபத்தைச் செய்தால் அதன் பலனை நான் அனுபவிக்கவும் தயாராயிருக்கிறேன். இப்பொழுது கோயிலில் திருவிழா! ஏராளமான கூட்டம் இருக்கும். அதில் புகுந்து ஒரு சங்கிலியையோ, மற்ற எதையோ கொண்டுவந்து விடுகிறேன்...என்று தன்மனது கொதிக்கும் கொதிப்பில்,வாய் விட்டே கூறிவிட்டாள். உடனே உள்ளே ஓடினுள்...

இந்த வார்த்தையைக் கேட்ட விச்வத்தின் உள்ளம் உருகித்துடித்தது.."ஆகா! என்ன பதிபக்தி! என்ன ப்ரேமம்! தான்திருடியாவது தன்கணவன் உயிரைமீட்கத்துணிந்துள்ள உத்தமியின் மனத்தின் வேகத்தை என்னென்பது!...ஆம்!

உண்மை ப்ரேமைக்கு மிஞ்சிதான் மற்றது. என்ன ப்ரபஞ்ச லீலை! ஒரு புறம் கணவனுக்காகத் திருடவும் துணிவது! ஆ...கடவுளே! உன் மாயைதான் என்ன விசித்ரமப்பா?... ஒன்றுக்கும் உதவாக்கட்டையாக நான் இருந்து உலாவுவதை விட அவள் சொல்லிய திருட்டு வேலையை நான் செய்து அந்த உத்தம தம்பதிகளுக்குப் புத்துயிர் அளித்தால் என்ன? அவள் திருடப்போய் அகப்பட்டுக்கொண்டால் சகலமும் வீணாகிவிடுமே"...என்று ஒரு க்ஷணம் யோசனை செய்தான்.

உடனே ஏதோ தீர்மானம் செய்துகொண்டு உள்பக்கம் வந்து "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டான். அலறிய வாறு ஓடிவந்தாள் மீனு...."தாயே! டாக்டர்கொடுத்த மருந்து சீட்டை அவரே வாங்கிவரச்சொன்னார். மருந்தைத் தானே வாங்கிஅனுப்புகிறாராம். உடனே கொடுங்கள்" என்றான்.

"ஆகா! என்ன சந்தோஷகாமான செய்தி! பகவான் தான் இப்படி அவர் மனத்தில் புகுந்துகொண்டு வேலைசெய்கிறாரோ!" என்று மட்டற்றமகிழ்ச்சியுடன் சீட்டைக்கொடுத்து விட்டு "ஐயா! நீங்கள் தான் இந்த சமயம் தெய்வமாக வந்திருக்கிறீர்கள். உடனே சீக்கிரம் அவரை வரச்சொல்லுங்கள்" என்று கண்ணீர் வழிய பரிதாபத்துடன் கூறினாள்.

அடுத்தநிமிஷமே விச்வம் சீட்டுடன் மறைந்தான். பின்னும் கால் மணி நேரத்திற்குள் விச்வம் படபடத்து ஓடிவந்து "தாயே! இதோ இஞ்ஜெக்ஷன் மருந்து, இதோ உள்ளுக்கு மருந்து. இதை பத்திரமாக வையுங்கள். டாக்டர் இப்போதே வருவார். ஜாக்ரதை" என்று கூறிவிட்டு தன் ஜோபியிலிருந்த ரூபாயையும் கொடுத்தபின் தலைதெறிக்க வெளியே வந்தான்.

இதற்குள் கொட்டுகிற மழையிலும் ஒரு பெரிய கும்பல் "பிடி!...அதோ அப்படித்தான் ஓடினான்...பிடிபிடி!" என்று கத்திக்கொண்டு வந்தார்கள். விச்வம் இதையறிந்தே மருந்தை காற்றுவேகமாக வந்து கொடுத்துவிட்டு ஓட்டமாக வெளியே வந்து தடுக்கி விழுந்ததுபோல் விழுந்து தானே அகப்பட்டுக் கொண்டான். இந்தத் தெருக் கோடியில் இந்த சம்பவம் நடந்ததால் இவளுக்கு ஒன்றுமே தெரியாது.

அரை மணிக்கெல்லாம் டாக்டர் வந்து மருந்தை ஊசி குத்தினார். இவளுக்குத் தன் கணவன்மீதுள்ள அடக்கமுடியாத அன்பிலும்அலைமோதும்ப்ரேமையிலும் அவனையேபார்த்துக் கொண்டு நின்றாளேயன்றி டாக்டரிடம் பேசக்கூடத்தெரிய வில்லை. "டாக்டர்! நீங்கள் செய்யும் இந்த மகோபகாரத்திற்கு என்னுடைய தோலைச் செருப்பாகத் தைத்துப்போட்டால்கூட போதாது......டாக்டர்! இந்த மருந்தினால் குணமாகிவிடுமா?".. என்று பரிதாபமாய்க் கேட்டாள்.

டாக்டர் தேறுதல் சொல்லிவிட்டுச் சென்றார். இவளுடைய உயர்ந்த குணத்தையும் அன்பின் ஆழத்தையும் கண்டு அவருடைய உள்ளம் வியப்புக் கடலாடியது.

9

விமலாவும் அவள் தோழிகளும் இரண்டு தினங்களுக்கு முன்னேற்பாட்டுடன் உல்லாஸ யாத்திரைக்குச் சென்றவர்கள் அழகான மலைகளையும் கல்வெட்டுக்களையும் மற்ற இதர அழகுகளையும் பார்த்து ப்ரமாதமான இன்பமடைந்து பேசியும்

பாடியும் நடித்தும் அவ்வூரிலுள்ள ஸினிமாவுக்குச் சென்றும் அகமகிழ்ந்து பூரிக்கிறார்கள். முதல் தினம் செல்ல மறுதினம் காலையில் தலைவி மோகனராணிக்குப் பத்ரிகை வந்ததும் ஆளுக்கொரு ஷீட்டாகப் படிக்க வாரம்பித்தார்கள். சந்திரா என்கிற பெண்மணி படிக்கும் ஷீட்டில்....

"வெளிநாட்டில் ப்ரபல இரும்பு வ்யாபாரியாயிருந்து தாய் நாடு திரும்பிய தனபாலன் என்பவரின் மருமகப்பிள்ளை விச்வம் என்பவர் கைதியானார் நேற்றிரவு புவனேச்வரி மருந்துசாலையில் புகுந்து, மருந்து விற்பவனை பயமுறுத்திக் கட்டிப்போட்டுவிட்டு உயர்ந்த மருந்துகள் சிலவற்றைத் திருடிவிட்டானாம். உடனே பிடித்துக் கைதியாக்கிவிட்டார்கள். போலீஸார் கேஸ் பதிவு செய்து விசாரணை தொடங்குவார்கள்"......

என்கிறதை முதலில் தனக்குள் படித்துவிட்டு மறுபடியும் தலைவியை நோக்கி "ஸிஸ்டர் இந்த அதிசய விஷயத்தைக் கேளுங்கள்: யாரோ லக்ஷாதிபதி தனபாலனாம். அவர் மருமகன் விச்வமாம் அவன் ஏதோ மருந்துஷாப்பில் திருடி விட்டு அகப்பட்டுக்கொண்டு கைதியாகிவிட்டானாம். அவனைக் கேட்டால் தான் தற்கொலை செய்துகொள்வதற்காக விஷ மருந்தைத் திருடித் தின்பதற்காக வந்தேன்...என்கிறானாம். எத்தனை புத்திசாலி பார்த்தீர்களா? மடையன்! பிழைக்க வழி தெரியாவிட்டால்சமுத்திரம்இல்லையா! குளங்கிணறு இல்லையா!"

என்று பரிகாஸமாய்ச் சொல்லும் வார்த்தை காதில் பட்டதும், விமலா அப்படியே துள்ளினாள். பேசவே தெரியாது விழிக்கிறாள். முகத்தில் அசடுவழிகிறது. இதற்குள் இந்துமதி என்பவள்..."என்ன? என்ன?... தனபாலன் மருமகன் விச்வமா...இது எங்கோ சமீபத்தில் கேள்விப்பட்ட பெயராக இருக்கிறதே.....என்று முடிப்பதற்குள், ஸுசீலா "எங்கோ கேள்விப்பட்டதென்று குழம்பவேண்டாம். விமலாவின் கணவனல்லவா விச்வம்...அவளுடைய குபேரசம்பத்தின் அதிபதி தான் தனபாலன்"...என்று முடிப்பதற்குள்,சகலரும் விமலாவையே ஏளனமான பார்வையுடன் பார்த்து "விமலா...இந்த ஆஷாடபூதியா உன் கணவன்?"...என்றார்கள்.

இதற்குள் மற்றொருத்தி ஆத்திரத்துடன்"நான்ஸென்ஸ் பாடல்களை எந்த மூதேவியோ பாடிவிட்டதாம். "சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளேயாமாகில் கூறுமல் சன்யாசம் கொள்" என்று...அதைப் படித்துக்கொண்டு சில அறிவிலிகள் குதிக்கிறார்கள். ஏன்?"சற்றேனும் ஏறுமாறகஇருப்பானேயாமாகில் கூறுமல் விவாகரத்து செய்"...என்று ஏன் மாற்றிக்கொள்ளக்கூடாது. இந்தமாதிரி மடையன்களைக் கணவனாக அடைந்து வாழ்வதைவிட விவாகரத்துச் சட்டம் கட்டாயம் நம் நாட்டில் அமுலுக்கு வந்துவிட்டால் எத்தனையோ உபயோகமாக இருக்கும்! அந்த சட்டத்தை நாம் கட்டாயம் ஆதரிக்கத்தான்

வேண்டும். திருடனானும்!...கைதியானாலும்!... தூத்தூ!"... என்று காரியுமிழ்ந்தாள்.

மற்றொருத்தி இதை எதிர்த்து..."நீ சொல்லியதை நான் ஒப்பமாட்டேன். விவாகமாவது ரத்துசெய்வதாவது? இம் மாதிரி அதீத ப்ரசாரங்கள் நமது நாகரீக க்ளப்பில் நடமாடுவ தானால் எங்களைப் போன்றவர்கள் க்ளப்பிலிருந்து விலகத் தான் வேண்டும். விவாகம் என்றால் வெறும் பொம்மை விளை யாட்டு என்று எண்ணிவிட்டாயா ? சேச்சே!... இது எனக்கு சற்றும்பிடிக்கவில்லை...விமலா...ஏனம்மா அழுகிறாய்? உடனே கிளம்பி வீட்டிற்குப் போகலாம் வா"...என்றாள்.

தலைவி மோகனராணி மிகவும் அலக்ஷியமாக விச்வத்தை யும் பொதுவாக சில ஆடவர்களையும் தாக்கிப் பேசி, "மானங் கெட்ட மனிதன்!...விஷம் குடிக்கத் திருடப்போனாலும்...கைதி யானாலும்!...இதற்காக நீ அழுவானேன்? அவன் முட்டாள் தனத்தை அவன் அனுபவிக்கிறான். அதற்காக நீ ஏன் அழு கிறாய்?...வெட்கக்கேடு!" என்றாள்.

இதற்குள் விமலாவின் கார் ட்ரைவர் ஒரு பத்ரிகையுடன் அங்கு வந்து..."அம்மா!...ஐயாவை...என்று முடிப்பதற்குள் "சரிதான்! விஷயம் தெரியும்; சும்மா இருப்பா" என்று தலைவி அவனை அடக்கினாள்..."அம்மா!...நாம் உடனே புறப்பட வேண்டாமா?...என்று தாழ்மையுடன் கேட்டான்.

இதற்குள் கோகிலா என்றவள், "ஆமாம்...இப்பொழுது அங்குபோய் என்ன செய்யவேணுமாம்? இதோ பாரு விமலா கமலாவின் கணவன் ஆதிமுதல் இப்படித்தான் அவளை அவ மானப்படுத்தி இம்ஸித்துவந்தான். அதைத் தாளாமல் அவனை விட்டுத் தனியே வந்து சௌஸ்தமாயிருக்கிறாள். அதுபோல் நீயும் லக்ஷணமாய் நிம்மதியாயிருப்பதைவிட்டுவிட்டு அந்தக் கைதியுடன் உனக்கென்ன வேலை? உன்பணமென்ன! உன் கவுரவமென்ன! உன்னுடைய சகல பெருமைகளையும்பார்க்காமல் அந்த மடையன் இப்படிச் செய்வது அனியாயத்திலும் அனி யாயம்! நீ இதற்கு ஏன் கலங்கவேண்டும்?...உன் பணம் உனக் கிருக்கையில் ஏன் கஷ்டப்படவேண்டும்?"...என்றாள்.

"கோகிலா! நீ சொல்வது சுத்த பிசகு. பணம் இருந்து விட்டால் மட்டும் போதுமா? இந்தமாதிரி உபதேசம் நீ செய் வது சரியில்லை. பெண்களுக்குக் கணவனுக்கு மிஞ்சிய பொருள்கூட வேறு உண்டா? கணவன் மதிப்பில்லாத மற்ற எந்த செல்வமிருந்து என்ன உபயோகம்? சமுத்திரத்தில் கரைத்த சக்கரையைப்போன்றல்லவா இருக்கும்? என் தகப்ப னாருக்கு நான் ஒரே பெண். "குறைந்தது பத்து லக்ஷம் ரூபா யும் உனக்குத்தானேம்மா சொந்தம். அந்த அல்பனை நீ ஏன் மதிக்கவேண்டும்?" என்று உன்னைப்போல் எனக்கு ஒரு அத்தை இருந்து உபதேசம் செய்தாள்...

‘பத்து லக்ஷமும் எனக்கு வேண்டாம்; வாழாவெட்டி என்கிற பட்டமும் எனக்கு வேண்டாம்; என் கணவனின் ப்ரேமைதான் எனக்குக் கோடிக்கணக்கான இன்பத்தைத் தரும் செல்வமாகும்.’ என்று சொல்லிவிட்டு என் கணவருடன் வந்துவிட்டேன். அவர் மகாமேதை; நன்றாகச் சம்பாதிக்கிறார். நாங்கள் சந்தோஷமாயிருக்கிறோம். விமலா! நீ இந்த சின்னதனமான வார்த்தைகளைக் கேளாதே. இந்த நிமிஷமே கிளம்பிப்போகலாம் வா! விஷயத்தை கவனித்து மேற்கொண்டு செய்யவேண்டியதைச் செய். நமது நாட்டின் பண்டைய மதிப்பையும் பெருமைகளையும் குலைக்கும் முறையில் ப்ரசாரம்செய்வது ஒரு க்ளப்புக்கு அவமதிப்பேயன்றி மதிப்பில்லை. நான் இதோ ராஜீநாமா செய்துவிடுகிறேன். எனக்கு இந்த போதனையும் கொள்கையும் பிடிக்கவில்லை. குடும்ப கண்ணியமும் பதியின் ஸேவைகளும் வீட்டுப் பணிகளும் தெய்வ வழிபாடுகளும் செய்துகொண்டு பொழுதுபோக்கவும் ஆத்ம ரக்ஷணத்திற்கான சத்விஷயங்களை ப்ரசாரம்செய்து பெருமையடையவும் ஸ்த்ரீகள் கூட்டங்கள் நடத்தவேண்டுமேயன்றி, இதென்ன அசுரத்தனம்? இப்படி இருக்கும் என்று தெரிந்திருந்தால் நானிந்த க்ளப்பில் சேர்ந்தே இருக்கமாட்டேன்... “ட்ரைவர்!...நம் காரை எடு!...விமலா!...உம்!...எழுந்திரு... உன் கடமை இதல்ல...நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். உன் கணவனுக்கு விஷத்தைத் திருடியாவது குடித்துச் சாக வேண்டும் என்கிற மனச்சிதைவும் துடிப்பும் உண்டாகிறதைக் காண, வீட்டில் ஏதோ குழப்பமில்லாமல் இம்மாதிரி துணிய மாட்டான். உன் குடும்ப ரகஸ்யம் எனக்குத் தெரியாது. விஷயத்தை அறியும்போது இப்படித் தோன்றுகிறது. நீ எப்படி நடந்துகொண்டாயோ? வீட்டில் என்ன நடந்ததோ? அதை யாரறியமுடியும்? உடனே கிளம்பு...கணவனின் மதிப்பில்லாத மனுஷி வெறும் குப்பைத்தொட்டிக்குச் சமானந்தான் தெரியுமா! குப்பைத்தொட்டியில் யார் எந்த குப்பையும் சாக்கடைச் சேற்றையும் ஏன்? ...துர்நீர் மலஜலம் முதலிய சகலத்தையும் கொட்டுவதுபோல் வாழ்க்கையில் முக்யப்ரதானமான ப்ரகாசமற்றவர்களைக் கண்டபடி கண்டவர்களும் பேசி இழித்துச் சிரிப்பார்களேயன்றி அதற்கு மதிப்புக் கொடுக்க மாட்டார்கள். அஸ்திவாரமற்ற கட்டிடம் ஆட்டங்கண்டுவிடும் என்பது நினைவிருக்கட்டும்...எழுந்திரு” என்று பங்கஜம் என்கிற வனிதாரத்தினம் மிக்க ஆவேசத்துடன் அழுத்தந்திருத்தமாகக் கூறி, விமலாவைக் கிளப்பினாள். பங்கஜத்தின் உயர்ந்த கருத்தை, வாசகத்தை இன்னும் சில சகோதரிகள் ஆமோதித்தும் அதைக் கொண்டாடியும் பேசி, விமலாவைத் தேற்றினார்கள். விமலாவும் சில சகோதரிகளும் உடனே கிளம்பிவிட்டார்கள். உல்லாஸயாத்திரைக்குக் கிளம்பிய சந்தோஷம் அலங்கோலத்தில் வந்து முடிந்தது!

10

விமலா தன் சிநேகிதைகள் பங்கஜம், அம்புஜம் இருவருடனும் வீட்டிற்கு வந்தாள். என்ன ஆச்சரியம்! இவள் வருவதற்கு இரண்டு நாட்களாகும் என்று சொல்லிவிட்டுப் போயிருந்ததால் வேலைக்காரர்கள் எத்தனைபேர்கள் உண்டோ அத்தனைபேர்களுடைய குடும்பமும் இந்த பங்களாவில் ஒன்று கூடி கும்மாளமடிக்கிறார்கள். விமலாவின் புடவைகளைச் சிலர் உடுத்திக்கொண்டிருக்கிறார்கள். பசங்களின் உடைகளை பசங்களுக்குப் போட்டிருக்கிறார்கள். உள்ளே தட்டுதட்டாகப் பலகாரங்களும் தடபுடல் சமயல்களும் ப்ரமிக்கும்படிச் செய்திருக்கிறது. ஊஞ்சலில் சிலர் உட்கார்ந்து ஆடுகிறார்கள் சோபாவில் சிலர், கட்டிலில் சிலர், ஈஸிச்சேரில் சிலர், இப்படியாகக் கும்மாளம் தடபுடல் படுக்கிறது. ரேடியோவும் க்ராமபோனும் அலறுகின்ற ஓசை காதைச் செவிடாக்குகிறது. விமலாவைப்பற்றி மிகவும் கேவலமாகப் பேசிக்கொண்டு சிலர் சிரிக்கிறார்கள்.

விமலாவின் குழந்தைகள் தலையும் வேஷமுமாக நிற்பதையுங்கண்டு விமலாவுக்கும் வந்துள்ள சகோதரிகளுக்கும் வியப்பும் கோபமும் மீறிக்கொண்டு வந்தது. திடும் ப்ரவேசமாய் வந்த விமலாவைப் பார்த்ததும் அந்தப் பெருங் கூட்டம் அப்படியே கதிகலங்கித் தாறுமாறாக மூலைக்கொருவராய் ஓட எத்தனித்தார்கள்.

பங்க:—விமலா! இப்போது நன்றாகப் புரிந்துவிட்டது. நீ கேவலம் நாகரீக க்ளப்பில் நாகரீக வாழ்க்கை வாழ்வதற்காகவே ஜீவித்திருப்பதாக எண்ணி வாழ்க்கை நடத்துகிற ரகஸ்யம் வெளியாகிவிட்டது. வீட்டை இப்படியா கவனிக்காமல் இம்மாதிரி பாழாக்குவார்கள்? நான்கூடத்தான் வீட்டில் குழந்தைகுட்டிகளை விட்டுவிட்டு வந்திருக்கிறேன். வீட்டிற்கும் க்ஷேமோதாய் என் கணவர் பார்த்துக்கொள்வதுகூட போதாது. அவர் வெளியேபோகும் சமயம் பாதுகாப்பு வேண்டும் என்பதால் என் சிறியதாயாரை இரண்டுநாளைக்கு வீட்டிலிருக்கும்படியாக வைத்துவிட்டு வந்திருக்கிறேன். நீ என்னிடம் மறைக்கப்பார்த்த விஷயத்தை உன் வேலைக்காரர்களும் ட்ரைவரும் அதோ வாசலில் பேசிச் சிரிக்கிறார்கள். நேற்று வீட்டில் நடந்த சம்பவத்தினால்தான் உன் கணவன் மனமொடிந்து இம்மாதிரி விபரீதத்தில் வந்து நேர்ந்துவிட்டது. இம்மாதிரியா ஒரு பயித்தியக்கார அகம்பாவத்துடன் நடப்பது? இனி நீ என்னதான் குட்டிக்கரணம்போட்டாலும் உன் கணவனின் அன்பைப் பெறமுடியுமா? முறிந்த பால் திருந்துமா?—என்று புத்திமதிகள் சொன்னாள்.

முதல்நாள் விச்வம் எழுதிவைத்திருந்த கடிதத்தை விமலா தற்செயலாகப் பார்த்தாள். உடனே அதைப் படிக்கத் தொடங்கினாள்.

"பணத்தினால் மக்கள் சுகப்படுவார்கள்; க்ஷேமப்படுவார்கள்; புண்யம் செய்வார்கள்; உயர்ந்த பதவியிலிருப்பார்கள்; போற்றும் அந்தஸ்திலிருப்பார்கள் என்றெல்லாம் சொல்வது பகுஜனவாக்கு. ஆனால், ப்ரபஞ்லீலையில் நான் கண்ட வரையில் என் அனுபவத்தில் பணத்தால் மக்கள் ம்ருகங்களாகிறார்கள். பதவியை இழக்கிறார்கள். பாபத்தைச் சுமக்கிறார்கள். உலகம் இழித்துத் தள்ளிப்பேசி உதாசீனம் செய்யும் நிலைமைக்கு வருகிறார்கள். நியாயம், தர்மம், கடமை முதலியவற்றை மறக்கிறார்கள்... என்கிற உயர்ந்த தத்துவத்தை உணர்ந்தேன்; உன்னால் உணர்ந்தேன். பணத்தினால் நீ எத்தனை காலம் எத்தகைய சந்தோஷத்தை அடைய முடியுமோ அடைந்து வாழலாம். பணமே உன் பதி! பணமே உன் விதி!"...

என்றிருந்ததைப் படித்ததும் வீறிட்டு அழுதுவிட்டாள். பங்கஜம்மாளும் அக்கடிதத்தை வாங்கிப் படித்து விமலாவின் மீது கடும் கோபங்கொண்டு வெறுத்தாள். "விமலா! உங்கள் அன்யோன்ய வாழ்வைப் பிரித்துவிட்ட பணத்தினால் நீ இனி அதை அடையமுடியாது. அன்பைக் கொண்டுதான் அன்பை அடையவேண்டும். நான் போய் என் கணவருடைய உதவியால் இந்த விஷயத்திற்கு என்னசெய்யலாம் என்று பார்த்து வருகிறேன்." என்று கூறிவிட்டுத் தன் வீட்டிற்குக் கிளம்புவதற்குள் பங்கஜத்தின் கணவர் அங்கு வந்து "பங்கஜம்! நான் இப்போது நீங்கள் உல்லாஸயாத்திரையுள்ள இடத்திற்கு வருவதாக இருந்தேன். இதற்குள் நம் ட்ரைவர் நீங்கள் வந்து விட்டதைத் தெரிவித்தான். என்ன ஆச்சரியமான விஷயம் தெரியுமா? ஏதோ ஒரு ஏழைக் குடும்பமாம். கணவனுக்கு விபரீதமான வ்யாதி வந்துவிட்டதால் மருந்துக்கு பணமில்லாது அந்தப் பெண் திருடியாவது கணவனைக் காக்க எத்தனித்தாளாம்.

தன் வாழ்க்கையில் வெறுப்புற்ற விச்வம்—தன் மனைவியால் மனமுடைந்த விச்வம்-கணவனுக்காக உருகும் பத்தினிப் பெண்ணுக்குஉதவிபுரியும் பொருட்டுத்தான் மருந்து ஷாப்பில் மருந்தைத் திருடிக்கொடுத்துத் தானே அகப்பட்டுக்கொண்டானாம்! முதலில் இதை வெளியிடக்கூடாதென்று தான் விஷம் குடிப்பதற்காக வந்ததாய்ச் சாக்குச் சொன்ன விஷயம் பத்திரிகைகளில் வந்துவிட்டதாம். உண்மையை உணர்ந்த பிறகு அதிகாரிகள்கூட வியப்புற்று, இந்த வழக்கை ஒருவாறு சரிப்படுத்திவிடத் தீர்மானித்திருக்கிறார்களாம்....

இந்த விஷயத்தை பத்திரிகையில் அறிந்து, ப்ளேனில் தனபால் ஓடிவந்து இதற்கான பணஉதவிகளைச் செய்து சமாதானப்படுத்திவிட்டார். இனி பயப்படவேண்டாம்...ஆனால், விச்வம் வீட்டிற்கு வருவதற்கு விரும்பவில்லை. ஆதியில் குடிசை வாழ்விலிருந்த இன்பம்— கால் வயிறு கஞ்சி குடித்த இன்பம்—இப்போதில்லை என்று கண்ணீர் விடுகிறான். அந்த

அம்மாளையே நேரில்போய் காலில் விழுந்து மன்னிப்புக் கோரி அழைத்துவரச்சொல்லு. நம் வீட்டிலிருக்கிறுன்" என்றுர்.

இந்த அதி ஆச்சரியமான விஷயத்தை கேட்ட பங்கஜம் மெய்சிலிர்த்தாள். தன்னுடைய அகம்பாவம் எத்தனை தூரம் தாக்கி வதைத்துவிட்டது என்பதை எண்ணி விமலா கதறினுள்.

இதற்குள் இவ்விஷயம் சத்திரத்திலுள்ள பெண்மணிக்குத் தெரிந்து அவள் ஓடிவந்து விச்வத்தை வணங்கித் தன் கணவனுக்கு வந்த அபாயம் நீங்கிவிட்டசந்தோஷத்தைக் கூறி, அவனுடைய த்யாக உதவிக்கு ஆனந்தக் கண்ணீர்விட்டுப் புகழ்ந்தாள். பங்கஜமும் விமலாவும் வந்தார்கள். விமலா விச்வத்தின் காலில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கோரிக் கதறினுள். மீனு விமலாவையும் வணங்கித் "தாயே! நீங்களே தற்சமயம் எனக்கும் என் கணவருக்கும் உயிர்ப்பிச்சை கொடுத்த ப்ரத்யட்ச தெய்வங்கள். என் கணவருடைய உயிருக்கு இனி பயமில்லை என்று டாக்டர் கூறிவிட்டார். பெண்களுக்கு சொர்க்கபோகத்தைக் கொடுத்து உதவினுல்கூட கணவனின் அன்பும் ஆதரவுமில்லையேல் காலணுவுக்கு உபயோகம் இல்லையல்லவா ? சகல சந்தோஷமும் கணவனின் ஸேவையில் தானிருக்கிறது தாயே!...போனது போகட்டும். இனி மத்தியிலடித்த சூருவளிப்புயல் ஓய்ந்துவிட்டது. பழையமனேநிம்மதியுடன்வாழ்க்கையில் இனி புதிய சகாப்தத்தைத்துடங்குங்கள். உத்தம புருஷரே! என் மனம் சந்தோஷப்படும்படிச் செய்தது போல் அந்தம்மாளின் தவறுதலை மன்னித்து அவரையும் புனர்விவாகம் செய்துகொண்டு சந்தோஷ வாழ்க்கைப்பாதையிலிறங்குங்கள்" என்று வேண்டினுள்.

"விமலா! நீ இப்பணத்தினுல் நல்ல க்ஷேமத்தையும் வாழ்வில் சாசவதமான தருமம், இன்பம் முதலியவைகளையும் அடைவாய் என்று நான் எண்ணியதற்கு நேர்மாறுக உன் வாழ்க்கைப் படகு சென்று பெரும் பாறையில் மோதிவிட்டது. இனி உன் புத்தி தெளிந்து நிரந்தரமான இன்பம் என்பது எது என்பதை உணர்ந்து நடந்துகொள். இந்தப் பணத்தில் பெரும்பாகத்தைக்கொண்டு ஒரு தர்மபாடசாலையையும் ஏழை மாணவர்களுக்கான சாப்பாடு உடை முதலியவைகளையும் உதவும் நிரந்தரமான சாதனத்தையும் நிறுவத் தீர்மானித்துவிட்டேன்" என்று தனபாலன் கூறினுர். தம்பதிகளிடையே மறுபடியும் அன்பு சிறிது வளரத்தொடங்கியது. வெகு விரைவிலேயே தனபாலனின் முயற்சி உருவாகிப் பெரும் புகழையும் உபகாரத்தையும் கொடுத்தது. இதைவிட அவருக்கு நித்யகல்யாண மங்களவைபவசுகம் வேறு என்ன இருக்கிறது! மங்களம்...சுபம்.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

1922

ஜனவரி மாதம் 4-ஆந் தேதி பாடசாலை திறக்கப்பட்டது. இங்கிலாந்திலிருந்து வேல்ஸ் இளவரசர் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டு ஜனவரி 13-ஆந் தேதி சென்னைக்கு விஜயம் செய்தார். இதன்பொருட்டு பாடசாலைக்கு 5 நாட்கள் விடுமுறை. "அயலண்ட்" மைதானத்தில் இளவரசருக்கு எதிரில் பாடசாலைப் பெண்கள் சிலர் கும்மி, கோலாட்டம், மௌனக் காட்சிகள் எல்லாம் செய்துகாட்டி, பலராலும் மெச்சப்பட்டார்கள்.

1922-ஆம் வருஷத்தில் ஆசிரமத்தில் வந்துசேர்ந்த பெண்கள் மொத்தம் 21. இவர்களுள் பிராம்மணர் அல்லாதார் 4 பேர்தான். பி. நாராயணி, சுப்ப நாகம்மாள் இருவரும் மதன பல்லியிலிருந்தும் குங்குமம் என்பவள் மைசூரிலிருந்தும் வந்தனர் B. ஜயலக்ஷ்மி என்பவள் தமிழ் தேசத்திலிருந்து வந்தாள். மார்ச்சு மாதத்தில் S. S. L. C பரீக்ஷைக்குப் போனவர்கள் மொத்தம் 18 பேர்களில், ஆசிரமத்திலிருந்து போனவர்கள் ஆறு. C. ருக்மிணி, G. N. சாரதம், K. பவானி, A. சாவித்திரி, அலங்காரம், V. ருக்மிணி. C. ருக்மிணி. 9 வயதில் பாவடை சட்டையுடன் வந்து 1913-ஆம் வருஷத்திலேயே சேர்ந்தவள். சின்னருக்கு என்றே அவளை எல்லாரும் கூப்பிடுவது. மேரி ராணி கல்லூரியில் சேர்ந்து B. A. முடித்துவிட்டு மயிலை நேஷனல் ஹைஸ்கூலிலும் மாம்பலம் ஸ்கூலிலும் வேலை செய்தாள். சிறு வயதிலேயே தாயை யிழந்து தகப்பனார் ஆதரவும் பூரணமா யில்லாதவள். இவள் வேலைசெய்து கொண்டிருந்த காலத்தில் இவளுடைய ஒரு தமக்கையும் அவள் கணவரும் சேர்ந்து, நல்ல எண்ணத்துடனேயே, ஏற்கனவே மனைவியும் குழந்தையுமிருந்த ஒருவருக்கு ருக்மிணியை விவாகம் செய்துகொடுத்தனர். அந்த விவாகம் அவளுக்குத் தீராத துயரத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்கி, 2 குழந்தைகளுக்குத் தாயாராகி, மனோவியாதி சரீர வியாதி பலவீனத்துடன் பரமன் அடியைச் சேர்ந்தாள்.

ஜி. என். சாரதம் B. A, L. T. முடித்து கவர்மெண்ட் வேலையிலிருக்கிறாள். ஏ. சாவித்திரியும், கே. பவானியும் ஸெகண்டரி டிரெயினிங்கு முடித்து உபாத்தினியாயிருக்கிறார்கள். அலங்காரம் M. B. C. M. முடித்து இங்கிலாந்துக்கும் போய்வந்து பெரிய டாக்டராக W. M. S-இல் இருப்பதைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். வி. ருக்மிணி, நல்ல புத்திசாலி; தகப்பன் கிடையாது. தாயாரும் ஒன்றுவிட்ட தமக்கையும் சென்னையிலேயே வந்து குடியிருந்துகொண்டு அடிக்கடி ஆச்ரமத்துக்கு வந்து ருக்மிணியுடன் அளவளாவிப் போவார்கள். காலேஜில் சேர்ந்து "இண்டர்" முடித்துவிட்டு உபாத்தினியாகச் சென்றாள்.

கோடை விடுமுறை 1922

ஏப்ரல் 29-ஆந் தேதி கோடைவிடுமுறை ஆரம்பம்.

விடுமுறை வகுப்பு வழக்கம்போல ஐஸ் ஹௌஸில் நடந்தது. மிஸஸ் Godfrey என்பவர் வழக்கம்போல அந்த வகுப்பு உபாத்தினி. சித்தி இருந்து ஆசிரமத்தை கவனித்துக்கொண்டார்.

நான் என் பெற்றோர்கள் சகோதரிகளுடன் மே மாதம் 2-ஆந் தேதி புறப்பட்டு கொடைக்கானலுக்கு போனேன். தஞ்சையில் R. M. O. வாக இருந்த என் சகோதரி பாலத்தின் கணவர் 15 நாட்கள் லீவு எடுத்துக்கொண்டு பாலம் குழந்தைகளுடன கொடைக்கானலுக்கு எங்களுடன் வந்தார்கள். ஆனந்தகிரியில் ஸ்ரீமான் ராமஸ்வாமி அய்யருடைய வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தங்கினேம். பிரதி தினமும் மைல் கணக்காக நடப்பதும் பல இடங்கள் பார்ப்பதும் எல்லாரும் சேர்ந்து இருந்ததும் சந்தோஷமாயிருந்தது.

ஜூன் 6-ஆந் தேதி கொடைக்கானலைவிட்டுப் புறபட்டு தஞ்சாவூர் வந்தோம். 8-ஆந் தேதி பாலத்தின் புதல்வன் ஜயராமனுக்கும், எங்கள் அம்மான் புதல்வன் தியாகராஜனுக்கும் உபநயனம். திருவையாறு முதலான சில இடங்களுக்குப் போய் விட்டு ஜூன் 26-ஆந் தேதி சென்னைக்குத் திரும்பினேம்.

ஜூலை 3-ஆந் தேதி பாடசாலை திறக்கப்பட்டது.

ஜூலை 10-ஆந் தேதி என் சிறியதாயார் திருவாலூரிலிருந்த அவரது சகோதரி புதல்வன் நடராஜனிடம்போய் 3 வாரம் இருந்து சிரமபரிகாரம் செய்துகொண்டு ஆகஸ்ட் மாதம் 6-ஆந் தேதி திரும்பிவந்தார்.

1912-ஆம் வருஷத்திலிருந்து பாடசாலை தலைவியாயிருந்த மிஸ் பிரோஜர் ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரஸாக திருச்சிக்கு மாற்றப்பட்டு அவருக்கு பதில் மிஸ் ரயன் என்பவர் ஸ்கூல் தலைவியாக வந்தார்.

10 வருடங்களாக ஆசிரமத்தின் கௌரவ டாக்டராக இருந்து எத்தனையோ உதவிசெய்துகொண்டிருந்த டாக்டர் முத்துலக்ஷ்மி விலகிக்கொண்டார். அவருக்கு பதில் கோஷா ஆஸ்பத்திரி தலைவி டாக்டர் பீடன் (Dr. Beadon) என்பவர் அந்த வேலையை ஏற்றுக்கொண்டார். பிரதி சனிக்கிழமையும் வந்து 1 மணி நேரம் இருந்து புதிய பெண்களைப் பரீக்ஷித்து ஸர்டிபிகேட் கொடுப்பதும் உடம்பு சௌக்கியமில்லாதவர்களைப் பார்த்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்வதுமே அவரது முக்கிய வேலை.

செஞ்ஜிக்கு உல்லாஸ பிரயாணம்

செப்டம்பர் மாதம் மிகல்மஸ் விடுமுறை 10 நாள். ஸ்கூல் தலைவி மிஸ் ரயன், சித்தி, அம்ருதம்மாள், அவள் சகோதரி அஹல்யா, என் தங்கை நித்யா, சாந்தா, லலிதா இவர்களும் ஆசிரமத்துப் பெண்கள் 54 பேரை அழைத்துக்கொண்டு ரயில் மார்க்கமாய் திண்டிவனம் போய் அங்கிருந்து 2 பஸ் அமர்த்திக் கொண்டு செஞ்சிக்குப்போய் சங்கராபரணி நதிக்கரையினருகில் உள்ள முஸாபரி பங்களாவில் தங்கினேம். தேசிங்குராஜன என்று பொது ஜனங்களால் அழைக்கப்படும் "ஜயஸிங்" என்னும் மகாராஷ்டிர அரசன் அரசாண்ட இடம்.

புகழேந்திப்புலவரால் திருவாய்மலர்ந்தருளப்பெற்ற தேசிங்கு ராஜன் கதை என்று பிரசுரிக்கப்பட்டுள்ள குஜிலிக்கடை

புத்தகம் ஒன்று சிறு வயதில் மிகுந்த ஸ்வாரஸ்யத்துடன் படித்திருக்கிறேன். தேசிங்கு ராஜன் காலம் சுமார் 200 வருஷத்துக்கு முந்தினது. புகழேந்திப்புலவர் காலம் இதற்கு எத்தனையோ வருஷங்கள் முந்தினது. ஆகவே புகழேந்திப்புலவர் தேசிங்கு ராஜன் கதையை எப்படி எழுதியிருக்க முடியும்!!! இந்தக் காலத்தில் நூல்களைப் பெரியவர்களுக்கு அர்ப்பணம் செய்வதுபோல, கீர்த்தியும் புகழும் வேண்டாத சிலர் பெரியவர்கள் எழுதியதாகவே சொல்லி வெளியிட்டால் அந்த நூல்கள் மிகுந்த பக்தி சிரத்தையுடன் பலரால் படித்துப் பாராட்டப்படும் என்று நினைத்தார்கள் போலும்! நிற்க,

ஜிஞ்ஜி எனப்படும் செஞ்சியில் கிருஷ்ணகிரி,ராஜகிரி என்னும் முக்கிய குன்றுகளும், இன்னும் அநேகம் சிறிதும் பெரிதுமான குன்றுகளும்,அரண்களையுடைய பருமனும் உயரமுமானகோட்டை மதில் சுவர்கள், குன்றுகளில் ஆங்காங்கு தெளிந்த ருசியான நீரை யுடைய சுனைகள், வெங்கடேசப்பெருமாள்கோவில் இவைகள் பார்க்கத் தகுந்தவை. அநேகம் குன்றுகளிலுள்ள பாறைகள் கரடுமுரடாய் இல்லாமல் மழமழப்பாயிருக்கின்றன: காலையில் கிருஷ்ணகிரியென்னும் மலை ஏறினோம். நெல் களஞ்சியம், குதிரை யானைகள் லாயங்கள் முதலான பலவித கட்டிடங்கள். மலை அடிவாரத்தில் நாலைந்து பிராகாரங்களும் கோட்டை வாயில்களும் தாண்டினபிறகுதான் மலையில் ஏற படிக்கட்டுக்கள் ஆரம்பம். மலைமேல் பலவிதமான விருக்ஷங்கள் செடிகொடிகள் இவற்றின் காட்சி. மலையுச்சியில் செடிகொடிகள் இல்லாத செங்குத்தான பிரம்மாண்டமான பெரிய பாறை. அண்டமுடியாத இடங்களில் பெரிய பெரிய தேன் அடைகள். பாறையின் மேல்தளத்துக்குப் போய் அங்கிருந்து சுற்றிலும் உள்ள இடங்களை யெல்லாம் பார்ப்பது கண் கொள்ளாக் காட்சியாயிருந்தது. அங்கு கீழ்நோக்கிச் செல்லும் படிக்கட்டுக்கள் வழியாய் இறங்கினால் தெளிந்த குளிர்ந்த ஒரு நீர்ச்சுனை. அதைச் சுற்றிலும் மேலும் பாறைகள் கவிந்து கொண்டு அந்த இடம் சற்று இருட்டாகவே யிருக்கிறது. நாங்கள் கொண்டுபோன ஆகாரத்தை புசித்து சுனை நீரை நிறைய அருந்தினபிறகுதான் மலையேறின களை நீங்கிற்று. ஒரு மணிநேரம் அங்கேயே தங்கி களைப்பாறியபிறகு மலையை விட்டிறங்கி சாயங்காலம் முஸாபரி பங்களா வந்துசேர்ந்தோம்.

செஞ்சிபோன்ற இடங்களில் புதிதாக வருபவர்களுக்கு அவ்விடத்து விசேஷங்களை எடுத்துச் சொல்லி இடங்களைக்காட்டுவதற்கென்றே "வழிகாட்டிகள்" இருப்பார்கள். அந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்து தேசிங்குராஜன் கதை படித்து,அதை பிறருக்கு எடுத்துச் சொல்லிச் சொல்லிப் பழகியுள்ளஒரு கிழவன் எங்களுடன் வந்தான். வழியிலுள்ளவற்றைப் பற்றியெல்லாம் வேண்டிய கைச்சரக்குகள் சேர்த்து நீண்ட ரஸமான கதைகளாகச் சொல்லும் சாமர்த்தியம் அவனுக்கிருந்தது. மேலே ஏறும் சிரமம்கூடத் தெரியாமல் அவன் சொன்ன வர்த்தமானங்களை எல்லாம் ஸ்வாரஸ்யமாய்க் கேட்டுக்கொண்டே போய்வந்தோம்.

மறுநாள் காலை சங்காபரணி நதியில் ஸ்நானம்செய்தபிறகு ராஜகிரி ஏறினோம். மேல் பாகத்தில் அரசர் கொலுமண்டபம். அன்று பகல் திண்டிவனம் சென்று ரயில் ஏறி இரவு சென்னை சேர்ந்தோம்.

183166

மகாத்மாஜி ஸேவா சங்கம்

காந்திஜெயந்தி

அக்டோபர் மாதம் 3-ந்தேதியன்று காலையில் ஸ்ரீமதி M. C. ஜானகியம்மாள் கொடியேற்றிவைத்து விழாவை ஆரம்பித்தார்கள். சுதந்திரத்தின் அவசியத்தையும் காந்திமகானின் அரியதொண்டைப்பற்றியும் ஸ்ரீமதி குந்தலாதேவி வெகு ரஸமாகப் பேசினார்கள். சிறுமிகளான லலித குமாரியும் சுலோசனாவும் மிகத் திறமையுடன் பேசினார்கள். குமாரி சுலோசனாவின்பேச்சு எல்லோரையும் ப்ரமிக்கச் செய்துவிட்டது. மாலை 5 மணிக்கு ஸ்ரீமதி ஜானம்மாள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று. ஸ்ரீமதி கனகம்மாள் ஜகன்னாதாசாரியர் தம் கீதை மாணவிகளுடன் கீதா பாராயணம் செய்த காட்சி வெகு ஆனந்தமாய் அத்புதமாயிருந்தது. அதே சமயம் நூல் நூற்பும் நடைபெற்றது. பிறகு வெகு ரஸமாயும் ஆழ்ந்த அனுபவக்களஞ்சியமான விஷயங்களையும் தலைவி பேசி சபையை மகிழ்வித்தார்கள். குமாரி சுலோசனா, ஸ்ரீமதி ஸரோஜாபாய், கௌஸல்யா முதலியவர்கள் பேசியபிறகு குமாரி K. நிர்மலா வெகுவெகு அத்புதமாய் நாட்டியமாடி சபையைப் பரவசமுறச் செய்து கரகோஷத்தைப் பெற்றாள். நம் சங்கத்தின் உபதலைவி ஸரஸ்வதிபாய் அவர்கள், தலைவிக்கு வந்தனோபசாரம் கூறிப் பின் குமாரி நிர்மலாவின் நாட்டியத்தின் அழகை—திறமையை—மிகவும் பாராட்டிப் பேசி மனப்பூர்வமாக ஆசீர்வதித்து, ஜகன்மோகினியின் அன்பளிப்பான பரிசுகளை வழங்கி வாழ்த்தினார். மங்களத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

இசை விருந்து

4-ந்தேதி மாலை ஸ்ரீமதி சகுந்தலா ஸ்ரீனிவாஸன் இசைவிருந்து அளித்து மகிழ்வித்தார். ஸ்ரீமதிகள் சுபத்திராவும் ஸரோஜாபாயும் இரட்டைபிடில்வாசித்தார்கள். கச்சேரி வெகுஅத்புதமாயிருந்தது.

7-ந்தேதியன்று ஸ்ரீமதி G. கனகவல்லி க்ருஷ்ணஸ்வாமி (சித்தூர்) வெகு ஆநந்தமாய் பிடில் வாசித்தும் பாடியும் எதிர்பாராத விருந்தை யளித்தார்.

விஜயதசமி விழா

20-ந்தேதியன்று விஜயதசமிவிழா வெகு கோலாகலமாய் சங்கத்தில் நடைபெற்றது. அருமையான அஷ்டபதிகள் பாடி கோலாட்டமும் பிறகு கும்மியும், ஸ்ரீமதி கனகவல்லி கிருஷ்ணஸ்வாமி பிடிலுடன் G. P. கமலா வாய்ப்பாட்டும் கச்சிதமாய் வெகு நன்றாயிருந்தது. பஜனையுடன் விழா இனிதுமுடிந்தது.

உபன்யாஸ விருந்து

25-ந்தேதிமாலை ஸ்ரீரங்கம் சடகோபாசார்ய ஸ்வாமியால் பெண்களும் பக்தியும் என்கிற மிகச்சிறந்த விஷயம் அத்புதமாக உபன்யாஸம் செய்யப்பட்டது. உபதலைவி ஸரஸ்வதிபாய் மிக்க மகிழ்வுடன் வந்தனோபசாரம் கூறினார் சங்கத்தின் ஸத்க்ருத்யங்களைப் பாராட்டியும் அதன் வளர்ச்சிக்குச் சகலரும் உதவமுன்வரவேண்டுமென்றும் பண்டித ராமானுஜாசார்யார் ஆர்வத்துடன் பேசினார்.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
Managing Editor: V. M. SRINIVASAN, M. A. B. L.

தீபாவளி வெளியீடு

மதுரை, ராமநாதபுரம், & திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள் :
ஸரஸ்வதி டாக்கி டிஸ்ட்ரிப்யூடர்ஸ், மதுரை.
தமிழ்நாட்டின் இதர பகுதிகளுக்கும்,
மைசூர் சமஸ்தானத்திற்கும் விநியோகஸ்தர்கள் :
தள்ளம் பிக்சர் ஸர்க்யூட், பெங்களூர். 2.